கலை
இலக்கிய
மாத
சஞ்சிகை

228


பங்குனி

01.03.2024

100/-

# ஜீவநதி

பிரதம ஆசிரியர் : க.பரணீதரன்



குப்பிழான் ஐ.சண்முகன்

நீ.பி.அருளானந்தம்

மலரன்னை

ஈழக்கவி

வ.ந.கிரிதரன்

தமிழ்க்கவி

கி.நடராசா

ஐங்கரன் விக்னேஸ்வரா

கோகிலா மகேந்திரன்

க.பரணீதரன்

கந்தர்மடம் அ. அஜந்தன்

ஜலீலா முஸமில்

கலை இலக்கிய மாத சஞ்சிகை

2024 - பங்குனி (01.03.2024)


# பொருளடக்கம்

சிறுகதைகள்

மலரன்னை – 05

குப்பிழான் ஐ.சண்முகன் – 16

நீ.பி.அருளானந்தம் – 22



கவிதைகள்

த.ஜெயசீலன் – 08

கந்தர்மடம் அ.அஜந்தன் – 26

ஜமீலா முஸமில் – 34



தொடர் நாவல்

வ.ந.கிரிதரன் – 27

தமிழ்க்கவி – 30

கட்டுரைகள்

**சிரிப்பும் சிந்தனையும் தெறிக்கும் சிரித்திரன்!**
**சிரிப்பே சிவமாகி செய் தொழிலே தெய்வமாகிட...!**
ஐங்கரன் விக்கினேஸ்வரா – 03



**அ.யேசுராசாவும்**
**சங்கம் புழைக்கும் மயாகோவ்ஸ்கிக்கும்...!**
ஈழக்கவி - 09



**பழந்தமிழ் இலக்கியங்களில்**
**அறிவியல் கருத்துகள்**
கி.நடராசா – 18

**முடிவைத்தொடுவாய் முயன்று - 3**
கோகிலா மகேந்திரன் – **32**

**“என்ன வேண்டும் சொல்லுங்கள் தருகின்றேன்”**
**பல்துறைவல்லோன் கலாநிதி த. கலாமணி**
க.பரணீதரன் - 35

# ஜீவநதி

**2024 பங்குனி இதழ் – 228**

**பிரதம ஆசிரியர்**
க.பரணீதரன்

**துணை ஆசிரியர்கள்**
வெற்றிவேல் துஷ்யந்தன்
ப.விஷ்ணுவர்த்தினி

**பதிப்பாசிரியர்**
கலாநிதி த.கலாமணி

**தொடர்புகளுக்கு :**
கலை அகம்
சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் வீதி
அல்வாய் வடமேற்கு
அல்வாய்
இலங்கை.

**ஆலோசகர் :**
திரு.கி.நடராஜா
தில்லைநாதன் கோபிநாத்

**தொலைபேசி** : 0775991949
0212262225

**E-mail** : jeevanathy@yahoo.com

**வங்கித் தொடர்புகள்**
K.Bharaneetharan
Commercial Bank, Nelliady
A/C - 8108021808 - CCEYLKLY



இச்சஞ்சிகையில் இடம்பெறும் அனைத்து ஆக்கங்களின் கருத்துக்களுக்கும் அவற்றை எழுதிய ஆசிரியர்களே பொறுப்புடையவர்கள்.



## ஜீவநதி சந்தா விபரம்

தனிப்பிரதி – 100/= ஆண்டுச்சந்தா – 3000/=
வெளிநாடு – $ 100U.S
மணியோடரை
அல்வாய் தபால் நிலையத்தில்
மாற்றக்கூடியதாக அனுப்பி வைக்கவும்.
அனுப்ப வேண்டிய பெயர்/முகவரி
**K .Bharaneetharan,**
**Kalaiaham ,**
**Alvai North west, Alvai.**
வங்கி மூலம் சந்தா செலுத்த விரும்புவோர்
K.Bharaneetharan Commercial Bank - Nelliady Branch
A/C No.- 8108021808 CCEYLKLY


# ஜீவநதி

**(கலை இலக்கிய மாத சஞ்சிகை)**

அறிஞர் தம் இதய ஓடை
ஆழ நீர் தன்னை மொண்டு
செறி தரும் மக்கள் எண்ணம்
செழித்திட ஊற்றி ஊற்றி...
புதியதோர் உலகம் செய்வோம்.!
– பாரதிதாசன்–

## ஜீவநதியின் எல்லாமாக நின்றவர் கலாநிதி த.கலாமணி

2007 ஆம் ஆண்டு, "பத்திரிகை ஒன்று தொடங்கலாமா அப்பா?" என கேட்டேன். "இல்லை அப்பன் காலம் சரியில்லை. அரசியல் நிலைமைகள் மிக மோசமாக உள்ளன. ஊடகவியலாளர்கள் அச்சுறுத்தலுக்கும் கொலைக்கும் ஆட்பட்டுக் கொண்டு இருக்கிறார்கள். வேணுமென்றால் ஒரு இலக்கிய சஞ்சிகையை ஆரம்பித்து நடத்து" என எனக்கு ஆலோசனை வழங்கியவர் ஜீவநதியின் பதிப்பாசிரியராக விளங்கிய கலாநிதி த. கலாமணி அவர்களே. ஜீவநதியின் ஒவ்வொரு காலடியையும் நிதானமாக வைப்பதற்கு எனக்கு பக்க பலமாக இருந்தார். அறிமுகமில்லாத ஆரம்ப காலத்தில் இதழ்களுக்கான ஆக்கங்களை சேகரித்தல் தொடக்கம் விற்பனை வரை தன்னாலான அனைத்து உதவிகளையும் செய்தார். இறுதி வரை ஜீவநதிக்கு எழுதி வந்தார். சஞ்சிகைகளுக்கு உள்ள இடர் பாட்டை அறிந்தவர் என்ற வகையில் ஆக்கப் பஞ்சம் ஏற்படுகின்ற சமயங்களில் எல்லாம் தனது ஆக்கங்களால் ஜீவநதியை பிரகாசிக்கச் செய்தார். எந்த தூற்றுதலையும் கண்டு அஞ்சாத வகையில் பயணிக்க வேண்டும் என்று மதியுரை செய்தார். உனது வழியில் நீ செல், எத்தனை தடைகள் வந்தாலும் நீ வைத்த காலை நகர்த்திக் கொண்டே செல் என என்றும் என்னுடன் உறுதுணையாக இருந்து என்னை ஊக்குவித்துக் கொண்டு இருந்தார். ஜீவநதி பெற்ற விருதுகளை எண்ணி பெருமிதம் கொண்டார். எனது ஒவ்வொரு செயற்பாட்டையும் கண்டு பூரிப்படைந்ததோடு மனதார வாழ்த்திக் கொண்டும் இருந்தார். நல்ல எழுத்தாளர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தி தந்தார். பிற எழுத்தாளர்களை மதிக்கும் இயல்பைக் கற்றுத் தந்தார். பல்வேறு சஞ்சிகைகள் நூல்கள் என வாங்கித் தந்து இலக்கிய வாசனையை நுகர்வதற்கு ஐந்து வயது முதல் ஊக்கம் தந்தார். எமது இல்லமான கலைஅகத்தை கலைகளின் கோயிலாக மாற்றி 100 இற்கு மேற்பட்ட இலக்கியக் கூட்டங்களை நடாத்தி மகிழ்வடைந்தார். இலக்கியகாரர்களை மாதம் ஒரு முறை சந்தித்து உரையாடுவதில் மகிழ்வு கண்டார். கொள்கைகள், கோட்பாடுகள், இன, மத வேறுபாடுகள் இன்றி அனைத்து எழுத்தாளர்களுடனும் கலைஞர்களுடனும் அன்புடனும் நேர்மையுடனும் பழகி வந்தார். இலக்கிய உலகில் தன்னாலான படைப்புகளை வெளிக் கொணர்ந்து இலக்கிய உலகிலும் தனது காலடியை பதித்துச் சென்றார். எந்த இடத்திலும் பிழையான கருத்துக்களை மறுதலித்து சொல்லக் கூடியவராகவும், இலக்கியத்துக்கும் அப்பால் மனித மனங்களை நேசித்து அனைவருடனும் நல் உறவைப் பேணி வந்தார். மரணத்துக்கு சில மணி நேரத்திற்கு முன்னர் கூட பேராசிரியர் சபா ஜெயராசாவின் நூலிற்கான பின் அட்டைக் குறிப்பை எழுதித் தந்து இறுதி வரை இலக்கியத்தை சுவாசமாகக் கொண்டவர். எந்த விருதுக்காகவும் ஏங்காது தனது கருத்தை மக்களுக்கு சென்றடையச் செய்தார். சிறுகதை உலகிலும் உளவியல் இலக்கியத்திலும் தனித்துவமான படைப்பாளியாக திகழ்ந்தார்; இசைநாடகத்தின் பெரும்நடிகராக திகழ்ந்தவர்; மாணவர் மனங்களை வென்ற ஆசிரியராக வாழ்ந்து இறைபாதங்களை அடைந்த ஜீவநதி பதிப்பாசிரியர் த. கலாமணி அவர்களின் ஆசி ஜீவநதி வாழும் காலம் வரை உடனிருக்கும். அவரது ஆத்மா சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம். என்றுமே அவரது இடம் வெற்றிடம் தான் அந்த இடத்தை யாராலும் இட்டு நிரப்ப முடியாது. ஜீவநதி வாசகர்கள் உள்ளத்தில் என்றும் கலாநிதி த.கலாமணி வாழ்ந்து கொண்டேயிருப்பார்.

– க.பரணீதரன்

**ஜீவநதி கிடைக்கும் இடங்கள்/ விற்பனையில் உதவுவோர்**

1. புத்தகக்கூடம் - திருநெல்வேலி
2. பூபாலசிங்கம் புத்தகசாலை - யாழ்ப்பாணம், கொழும்பு செட்டித்தெரு
3. புத்தகப்பண்பாட்டுப் பேரவை, 68, நீதிமன்ற வீதி, மல்லாகம்
5. பண்டாரவன்னியன் புத்தகசாலை - வவுனியா

| | |
|---|---|
| 4. அ.யேசுராசா | 5. பரணி புத்தகக்கூடம் - நெல்லியடி |
| 6. மு.யாழவன்- திருகோணமலை, | 7. கந்தர்மடம் அ.அஜந்தன் |
| 8. சி.ரமேஷ் | 9. நா.நவராஜ் |

ஐங்கரன் விக்கினேஸ்வரா

# சிரிப்பும் சிந்தனையும் தெறிக்கும் சிரித்திரன்! சிரிப்பே சீவியமாகி செய் தொழிலே தெய்வமாகிட....



(தாயக மண்ணில் இலக்கியப் பணி ஆற்றிய சிரித்திரன் சுந்தர் மார்ச் 3, 1996இல் மறைந்த நாள் நினைவாக பிரசுரமாகிறது)

நாற்பது வருடங்களுக்கு மேலாக கேலிச் சித்திரத்துறையில் தனது ஆளுமையைச் செலுத்திய சிரித்திரன் சுந்தர் பதினைந்து ஆயிரத்திற்கு மேற்பட்ட கேலிச்சித்திரங்களைத் தீட்டியுள்ளார். "செய்தொழில் தெய்வம், சிரிப்பே சீவியம்" என்பதைத் தாரக மந்திரமாகக் கொண்டு கலை இலக்கிய வானில் பறந்து திரிந்தவர் சிரித்திரன் சுந்தர் என அழைக்கப்படும் மாமனிதர் சிவஞானசுந்தரம். மார்ச் 3, 1924 இல் பிறந்த அவர் மார்ச் 3, 1996இல் மறைந்தார். கேலிச் சித்திரங்கள், பகடிக் கட்டுரைகள் மற்றும் நடைச் சித்திரங்கள் என சிரித்திரனில் சுவைபட இடம்பெற்றன. சிரித்திரன் சுந்தரின் கேலிச்சித்திர நாயகர்களான சவாரித்தம்பர், சின்னக்குட்டி, மைனர் மச்சான், மயில்வாகனத்தார் போன்றவர்கள் வரலாற்றுப் புகழ்பெற்றவர்கள். "மகுடி பதில்கள்" என்னும் தலைப்பில் சுந்தர் எழுதிய கேள்வி பதில்கள் என்றும் புகழ்பெற்றது.

**சிரித்திரனும் - சிரிப்பும் சிந்தனையும்:**

சிரித்திரன் 1963ஆம் ஆண்டில் சி. சிவஞான சுந்தரம் அவர்களால் யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப் பட்ட நகைச்சுவை இதழ். அவரின் மறைவு வரை 32 ஆண்டு காலம் தொடர்ந்து வெளிவந்து சாதனை படைத்தது. சிரித்திரன் சஞ்சிகை மூலம் பல எழுத் தாளர்கள் அறிமுகப்படுத்தப்பட்டார்கள். வெறும் சிரிப்புச் சஞ்சிகையாக மட்டுமல்லாமல் சிரிப்புடன் சிந்தனையையும் தூண்டும் பல சிறந்த ஆக்கங்களைப் பிரசுரித்தவர் சுந்தர். சிந்தனைச் சிறப்பாலும், கேலிச் சித்திரங்கள், கருத்தோவியங்கள் போன்ற படைப்புக்களாலும் ஈழத்துத் தமிழ் இலக்கியத்தில் சிரித்திரன் சஞ்சிகை தனியிடத்தைப் பெற்றது. அவரது படைப்புகள் மண்வாசனை உள்ளவையாகவும், பாத்திரங்கள் யாழ்ப்பாணப் பேச்சுவழக்குத் தமிழைச் சுவையாகப் பேசுபவையாகவும் விளங்கின. தமிழ் மக்களிடையே யுள்ள சாதி வேறுபாடுகள் போன்ற பிற்போக்குத் தனங்கள், மூடக்கொள்கை களை நகைச்சுவையாக ஆனால், உறைப்பாகக் குத்திக்காட்டி நையாண்டி செய்தார் சிரித்திரன் சுந்தர்.

**சிரித்திரனில் 'சவாரித்தம்பர்':**

சிரித்திரன் சுந்தர் கொழும்பில் இருந்து வெளி வந்த தினகரனில் முதலில் கேலிச்சித்திரக்காரராக (Cartoonist) பணிபுரிந்தார். அக்காலத்தில் "தினகரன்" பத்திரிகையில் ஆசிரியராக இருந்த க. கைலாசபதியின் அழைப்பை ஏற்று அப்பத்திரிகையில், சுந்தர் "சவாரித் தம்பர்" என்ற தொடரை வரையத் தொடங்கினார். சவாரித்தம்பர் வாசகரிடையே அமோக வரவேற்பைப் பெற்றது. சவாரித்தம்பருக்காகத் தினகரனை வாங்கியோரும் பலர். சவாரித்தம்பர் என்பவர், அக்காலத்தில் கரவெட்டியில் வாழ்ந்து கொண்டிருந்த முற்போக்கு எண்ணங்கொண்ட ஒரு பெரியார். வண்டில் சவாரி செய்வதில் வல்லவர்.

சுந்தர் அவரோடு நன்கு பழகியவராக இருந்தார். அந்தக் கேலிச் சித்திரங்களை அவர் படித்து, "சிவஞானத்தின்ரை வேலை நல்லா யிருக்கு" என்று சொல்லிச் சிரித்து மகிழ்ந்தவராம். சவாரித்தம்பர் பாத்திரத்தைக் கண்ணியமான பாத்திர மாகவே சுந்தர் படைத்து வந்தார். அதில் வந்த சின்னக் குட்டி, பாறி மாமி பாத்திரங்களும் கரவெட்டியில் வாழ்ந்தவர்களே. தினகரன் வார மஞ்சரியில் "மைனர் மச்சான்", "சித்திர கானம்" ஆகிய கேலிச் சித்திரத் தொடர்களையும் சுந்தர் வரைந்தார்.

சிரித்திரனை 1963-ல் ஆரம்பித்த சுந்தர் 1970 வரை கொழும்பு பண்டாரநாயக வீதி சுதந்திரன் அச்சகத்தி லும், 1970 முதல் 1971 வரை டாம் வீதியில் குமரன் அச்சகத்திலும் அச்சிடப்பட்டது. 1971 முதல் யாழ்ப் பாணம் பிரவுண் வீதியில் ஸ்ரீலங்கா அச்சகத்தில் இருந்து வெளிவரத் தொடங்கியது.

1971 நவம்பர் முதல் சிரித்திரனின் சொந்த அச்சகத்தில் இருந்து வெளியாகியது. போர்க்கால சூழலில் 1995இல் யாழ்ப்பாணத்தில் இருந்து இடம் பெயர்ந்தபோது சிரித்திரன் இதழ் நிறுத்தப்பட்டது. அடுத்த ஆண்டே ஆசிரியர் சிவஞானசுந்தரம் மறைந் தார். மொத்தம் 32 ஆண்டு காலம் தொடர்ந்து சிரித்திரன் வெளிவந்தது.

**எரிக்கப்பட்ட சிரித்திரன் :**

ஈழத்துத் தமிழ் இலக்கியத்தில் சிரித்திரன் சஞ்சிகை சிந்தனைச் சிறப்பால் தனக்கென தனி யிடத்தை பெற்று இருந்தது. ஆயினும் துயரமிகு நிகழ்வாக சிரித்திரன் அச்சகமும் அலுவலகமும், ஆசிரியரின் நூலகச்சேமிப்பும் 1987-ல் இந்திய அமைதிப்படையால் தீவைத்து எரிக்கப்பட்டன.

சிரித்திரன் இதழாசிரியரின் மகள் வாணி சுந்தர் பதிவுகளின் படி, சிரித்திரன் அலுவலகம் இந்திய அமைதிப்படையினர் தங்குமிடமாக ஆக்கிரமிக்கப் பட்டது என்ற தகவல்களையும் வெளிக்கொணர்ந்தார்.

**1995 யாழ்ப்பாண இடப்பெயர்வு:**

யாழ்ப்பாணத்தில் 1995இன் போர்க்கால மாபெரும் இடப்பெயர்வு வரையில் வெளிவந்த சிரித்திரனின் முழு ஆயுள் காலத்தை 32 ஆண்டுகளாக மொத்தம் 318 இதழ்கள் வெளிவந்தன.

சிரித்திரன் சுந்தரின் "கார்ட்டுன் ஓவிய உலகில் நான்" என்ற சுயசரிதை நூலின் முன்னுரையில் பிரபல எழுத்தாளர் செங்கை ஆழியான் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். 1963ஆம் அண்டில் ஆரம்பிக்கப்பட்ட "சிரித்திரன்" சஞ்சிகை திரு சிவஞானசுந்தரம் அவர் களின் மறைவு வரை 32 வருடகாலம் தொடர்ந்து வெளி வந்து சாதனை படைத்தது. சிரித்திரன் ஆசிரியர் நினைவு மலரில் சிரித்திரன் வரலாற்றை எழுதும் செங்கை ஆழியான் தமிழில் முழுக்க முழுக்க கேலிச் சித்திரத்துக்காக வெளிவந்த ஒரே இதழ் சிரித்திரன் என்று பெருமையுடன் கூறியுள்ளார். பல எழுத்தாளர் களையும் அறிமுகம் செய்த சிரித்திரன் புதுக் கவிதை களையும் சிறுகதைகளையும் தொடர்கதைகளையும் வெளியிட்டது. சிரித்திரன் சஞ்சிகை மூலம் புகழ் பெற்ற பல எழுத்தாளர்கள் இன்று உலகில் பலர் பவனி வந்து கொண்டிருக்கிறார்கள். திக்குவல்லை கமால், திக்கவயல் தர்மகுலசிங்கம் (சுவைத்திரள் ஆசிரியர்), காசி ஆனந்தன், யாழ் நங்கை ஆகியோர் சிரித்திரனில் எழுதிய ஆரம்பகால எழுத்தாளர்கள். எஸ். அகஸ்தியர், டானியல் அன்ரனி, சுதாராஜ், அமிர்தகழியான், நவாலியூர் சச்சிதானந்தன், தெளிவத்தை ஜோசப் என பலருக்கு களம் அமைத்துக் கொடுத்தது சிரித்திரன்.

மலையகப் படைப்பாளி ராகுலனின் "ஒய்யப்பங் கங்காணி", செங்கை ஆழியானின் "ஆச்சி பயணம் போகிறாள்", "கொத்தியின் காதல்" ஆகிய புகழ்பெற்ற படைப்புகள் சிரித்திரனால் வெளியிடப்பட்டன.

அத்துடன் காசி ஆனந்தனின் இலட்சியத் தாகம் மிகுந்த "மாத்திரைக் கதைகள்" பிரசித்த மானவை. குடாரப்பூர் சிவா "நடுநிசி" என்ற மர்மக்கதையை எழுதினார். மாஸ்டர் சிவலிங்கத்தின் விண்ணுலகத் திலே எனும் சிறுவர் கதை, அ. ந. கந்தசாமியின் கதைகள் போன்றவை இவற்றுள் சில படைப்புகள் சிரித்திரனால் வெளியிடப் பட்டன. மலையகப் படைப்பாளி ராகுலனின் "ஒய்யப்பங் கங்காணி" அன்றைய அரசியல் வாதிகளை உலுக்கியது. செங்கை ஆழி யானின் "ஆச்சிபயணம்போகிறாள்", "கொத்தி யின் காதல்" ஆகியன புகழ் பெற்றவை.



**'பிளித்ஸ்' ஆங்கிலச் சஞ்சிகையில் :**

சிவஞானசுந்தரம் அவர்களது கேலிச் சித்திரம் முதன்முதலாக, இந்தியாவில் ஏராளமான வாசகர் களைக் கொண்ட "பிளித்ஸ்"(Blitz) என்னும் ஆங்கிலச் சஞ்சிகையில் வெளியானது. தொடர்ந்து கரஞ்சியா ஆசிரியராக இருந்த "கொஞ்ச்" சஞ்சிகையிலும், அவரது கேலிச் சித்திரங்கள் பல வெளிவந்தன. அதன் மூலம் பிரபல கேலிச் சித்திரக் கலைஞர்களான போல் தாக்கரே, ஆர். கே. லக்ஷ்மணன் ஆகியோருடன் அறிமுகம் ஏற்பட்டு, அவர்களுடன் கேலிச் சித்திரம் பற்றி உரையாடி வந்தார். இதன்பின் அவர் இலங்கை வந்து, அரசாங்க கட்டடத் திணைக்களத்தில் படவரைஞராகப் பணிபுரிந்து வந்தார்.

சிரித்திரன் சுந்தர் என்றவுடனே முகத்தில் புன்னகை அரும்பும் நெற்றியில் சிந்தனைக் கோடுகள் வரைபடமாகும். "மகுடி பதில்கள்" என்று மகுடமிட்டு சுந்தர் எழுதிய கேள்வி பதில்கள் ஒரு காலத்தில் பத்திரிகை உலகில் பலராலும் பேசப்பட்டு வந்தது.

புதுப்புதுத் தலைப்புகளில் சிந்தனைத் துளிகளைத் தீட்டி, சிரித்திரனை அவர் அழகுசெய்தார். "பல்லி சொன்னதும் செய்தி சொன்னதும்", "சிரித்திரன் டயறி", "ஜோக்கிறட்டீஸ்" முதலியவற்றை உதாரணங் களாகக் கூறலாம். "மிஸ்டர் அன் மிஸ்ஸிஸ் டாமோடிறன்", "மகுடி பதில்கள்" என்பன சிரித்திரனுக் குரிய சிறப்பு முத்திரைகள் ஆகும். அவர் சுகயீனமுற்று ஒரு கையும் ஒரு காலும் வழங்க முடியாத நிலையிலும் தொடர்ந்து எழுதினார். கேலிச் சித்திரங்கள் தொடர்ந்து வரைந்தார். சிரித்திரன் நகைச்சுவைகளை மாத்திரம் தாங்கி வரவில்லை. தரமான சிறுகதைகள், குறு நாவல்கள், இலக்கியக் கட்டுரைகள், கலைஞர் களுடனான நேர்காணல்கள் முதலிய ஆக்கங்களும் அதனை அழகுசெய்தன. சிரித்திரன் நேர்காணல்கள் அடங்கிய நூலினை, "தேன்பொழுது" என்ற பெயரில் சுந்தர் வெளியிட்டார். வேறு ஆக்கங்களும் பல நூலாக வெளியிடப்பட்டுள்ளன.

"சிரித்திரன் சித்திரக் கொத்து" என்ற கேலிச் சித்திரத் தொகுதியை, 1989 ஆம் ஆண்டு சுந்தர் வெளியிட்டார். "மகுடி பதில்கள்", "கார்ட்டுன் உலகில் நான்" ஆகிய நூல்களும் வெளிவந்துள்ளன.

தாயக மண்ணில் இலக்கியப் பணிக்கு ஆற்றிய அளப்பரிய சேவைக்காக தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களால் மாமனிதர் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டவர் சிரித்திரன் சுந்தர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

**சிரித்திரன் மீள்பதிப்பு:**

சிரித்திரன் இதழ் Centre for Creativity and Innovation நிறுவனத்தால் மீளவும் புதுப் பொலிவுடன் அச்சிலும், இணையத்திலும் பதிப்பிக்கப்பட்டு 2021 ஜனவரி முதல் யாழ்ப்பாணத்தில் இருந்து உலகெங்கும் கிடைக்க கூடிய வகையில் வெளியிடப்பட்டு வருகின்றது. siriththiran.com எனும் இணைய விலாசத்திலிருந்து தற்போது வெளி வருகிறது.

# பதர்



மலரன்னை

ஆழ்ந்த நித்திரையில் இருந்த ரமணனை அருகிலிருக்கும் ஆலடிப்பிள்ளையார் கோயிலின் மணியோசை தட்டி எழுப்பி விட்டது. கண்களைக் கசக்கிவிட்டு தனது தலைமாட்டில் வைத்திருந்த அலைபேசியைக் கையில் எடுத்து நேரத்தைப் பார்த்தான்.

ஒன்பது மணியைக் காட்டியது அலைபேசி. “இன்றைக்கு ரியூசன் கட்” மனதுக்குள் சொல்லிக் கொண்டான். சென்ற வருடம் ஏ.எல்.பரீட்சை எழுதியவன் பெற்ற பெறுபேறு 3F. எனவே அவனை பிரத்தியேகமாக நாள் வகுப்புக்குப் போய் பயிலுமாறு பெற்றோர் இணைத்து விட்டிருக்கின்றனர். இன்றைய தினம் அந்தப் படிப்பிற்கும் பங்கம் வந்துவிட்டது.

அம்மாவிற்கு காலை ஆறமணியிலிருந்து மாலை ஆறுமணி வரை கடமை நேரம். அவள் யாழ்.போதனா வைத்தியசாலையில் தாதியாகக் கடமையாற்றுகிறாள். எனினும் அவள் சிரத்தையுடன் அதிகாலையில் எழுந்து உணவு தயாரித்து மற்றும் அவனுக்குத் தேவையான எல்லா ஒழுங்குகளையும் செய்து வைத்துவிட்டுத் தான் போவாள். ஆனால் அவனோ சிரத்தையில்லாமல் நடந்து கொள்வது வழக்கமாகி விட்டது. இப்படித்தான் இக் காலகட்டத்தில் பல பிள்ளைகள் பெற்றோர் காட்டும் அக்கறையை உதாசீனம் செய்து விட்டு தங்களது எதிர்காலத்தை பாழாக்கி விடுகிறார்கள்.

அவனுடைய அக்கா கொழும்பு மருத்துவ பீடத்தில் இரண்டாம் வருடத்தில் கற்றுக் கொண்டிருக்கிறாள். அப்பாவும் கொழும்பிலுள்ள தனியார் கம்பனி ஒன்றில் நல்ல பதவியில் இருக்கிறார். அம்மாவுக்கும் கை நிறைய சம்பளம் கிடைக்கிறது. எனவே அவனது கைச்செலவுக்கு தட்டுப்பாடு ஏற்படுவதில்லை. எதையோ நினைத்துக் கொண்டவனாய் ரமணன் அலைபேசியை எடுத்து நண்பன் கோபியுடன் தொடர்பு கொண்டான்.

“டேய் மச்சான்! நீ கிளாஸிலையே இருக்கிறாய்?”

“என்னடாப்பா நீ. விசர்க்கதை கதைக்கிறாய். கிளாஸில இருந்து கொண்டு உன்னோட போனில கதைக்க ஏலுமே”

“டேய் கோபி!நீ இப்ப எங்கை நிக்கிறாய். சொல்லனடாப்பா”

“நானும் சங்கரும் பஸ் ஸ்ராண்ட்டில் இருந்து பம்பலடிச்சுக்கொண்டிருக்கிறம். இண்டைக்கு கிளாஸ் கட்”

சொல்லிவிட்டு கொக்கரிப்புச் சிரிப்பொன்றை உதிர்த்தான், கோபி. அவர்கள் மீது பொறாமை மேலிட கையிலிருந்த அலைபேசியை கட்டிலின் மீது “தொப்”பெனபோட்டுவிட்டு எழுந்தான், ரமணன். அவசர அவசரமாக காலைக் கடன்களை முடித்து குளித்துவிட்டு வந்தான், அம்மா மேசைமீது எடுத்து வைத்திருந்த உடையை மாட்டிக் கொண்டான். கண்ணாடி முன்னால் நின்று பார்த்தபோது சட்டையின் பக்கவாட்டில் சிறிது கசங்கல் இருப்பது கண்ணுக்குப் புலப்பட்டது. கோபத்துடன் வாய் புறுபுறுத்தது.

"இண்டைக்கு வரட்டுக்கும் அம்மா. சேட்டை வடிவாய் அயன் பண்ணாமல் அவவுக்கு அப்பிடி என்னவேலை"

கறுவிக் கொண்டே போய் மேசையிலிருந்த சுடுதண்ணீர்ப் போத்தலில் விட்டு வைத்திருந்த தேநீரை எடுத்து "கப்"பில் வார்த்துக் குடித்தான். சாப்பாட்டு மேசையில் அம்மா உணவு போட்டு மூடி வைத்திருந் தாள். முட்டை சேர்த்து தயாரித்து வைத்திருந்த நூடில்ஸ்ஸை எடுத்து சாப்பிட்டவன் அப்படியே உணவுத்தட்டை விட்டுவிட்டு போய் கையலம்பிக் கொண்டான். கண்ணாடி முன்போய் நின்று தலை வாரி தன்முகத்தை சரி பார்த்துக் கொண்டு புறப்பட்டான்.

சைக்கிளில் யாழ்.பஸ் ஸ்ராண்ட் வரைக்கும் போவதற்கு அலுப்பாயிருந்தது. மனதுக்குள் அப்பா வைத் திட்டியவாறே சைக்கிளை மிதிக்கத் தொடங் கினான்.

"ஒரு மோட்டார் சைக்கிளை வாங்கித் தந்திருந்தால் எவ்வளவு ஜொலியாக ஊரையே சுற்றி வரலாம். அவரைக் கேட்டதற்கு அவர் ஏ.எல் பாஸ் பண்ணி கம்பஸ்க்கு போனால்த்தான் மோட்டார் சைக்கிள் அதுவரைக்கும் அந்த நினைப்பே இருக்கக் கூடாது என்று சொல்லிப்போட்டார். கஞ்சத்தனம் பிடிச்ச மனுசன்"

பஸ் தரிப்பிடத்தில் அமைந்துள்ள சீமெந்து வாங்குகளில் அமர்ந்திருந்து நண்பர்கள் இருவரும் அரட்டை அடித்துக் கொண்டிருந்தார்கள். றமணனும் வந்து அவர்களுடன் இணைந்து கொண்டான்.

"டேய் மச்சான்! நீ கனக்க பிகர்ஸ்ஸை மிஸ் பண்ணீட்டாய்"

அதற்கிடையில் காரைநகர் பஸ் வந்து தரிப்பிடத்தில் நின்றது. அவசரத்துடன் பயணிகள் முண்டியடித்துக் கொண்டு கீழே இறங்க முற்பட்டனர்.

"டேய் கோபி! அந்த றெட் கலர் அடிதார் எப்பிடி?"

கண்களைச் சிமிட்டியவாறே சங்கர் கூறினான்.

"போடா விசாரா. அதைவிட அந்த பட்டர் கலர் ரொப் நல்லாயிருக்கு"

"போங்கடா பேயன்களே. எல்லாத்தையும் விடஇந்த பிங்க் கலர் சுடிதார் தான் பெஸ்ற்"

றமணன் வாய் திறந்து சொல்லவில்லை. மனதுக்குள் நினைத்துக் கொண்டவன், அவளையே இமை கொட்டாது பார்த்துக் கொண்டிருந்தான். பஸ்ஸிலிருந்து இறங்கி வந்து கொண்டிருந்தவள், தற்செயலாக நிமிர்ந்து பார்க்க, இருவரது பார்வைகளும் மோதிக் கொண்டன. றமணனின் உடம்பில் மின்சாரம் பாய்ந்தது போன்றதோர் உணர்வில் திளைத்துப் போனான். அவன் மட்டுமல்ல. அந்தப் பெண் நித்யாவின் மனதிலும் ஒரு கணம் மின்னலடித்து ஓய்ந்தது என்னவோ உண்மைதான்.

நதட்கள் நகர்ந்தன. றமணன் வகுப்புகளைப் புறக்கணித்து பஸ் தரிப்பிடத்திலெயே காலத்தைக் கழித்தான். காலையில் ஒரு தடவை மாலையில் ஒரு தடவை என பார்வையால் பேசிக் கொண்டவர்கள் நாளடைவில் வார்த்தைகளைப் பரிமாறிக் கொள்ளு மளவிற்கு நிலைமை முன்னேறியது. கேக் ஐசிங் வகுப்புகளுக்குப் போய் வந்து கொண்டிருந்த நித்யா இப்போது வகுப்பு முடிந்ததும் றமணனுடன் இணைந்து ரெஸ்றோறன்ற் வரை போய் வந்த பின் அவனே பஸ்ஸிலும் ஏற்றி அனுப்பி வைப்பான். மற்றும் வேளைகளில் நண்பர்களுடன் சேர்ந்து ஊர் சுற்றுவதும் அரட்டை அடிப்பதையும் வழக்கமாக்கி விட்டான்.

பெற்றவளும் பிள்ளை வகுப்புகளுக்குப் போய் வருகிறான் எனக் கருதி அவனுடைய நலன்களில் எதுவித குறையுமில்லாமல் கவனித்துக் கொண்டாள். ஆனால் அவன் அடிக்கடி அவளிடம் பணம் கேட்பது சிறிது சந்தேகத்தைக் கிளப்பிய போதிலும், அவன் என்னுடைய பிள்ளை தவறான பாதையில் போக மாட்டான் என மனம் திடமாக நம்பியது.

ஆனால்... றமணனதும், நித்யாவினதும் இதயங்களில் முகையாக துளிர் விட்ட காதல் மலராக விரிந்து மணம் பரப்புவதை அவள் அறிந்தாளில்லை. எனினும் காற்றுவாக்கில் கிடைத்த சில தகவல்களை முற்றாக ஒதுக்கி விட முடியவில்லை. விசாரிக்க வேண்டியது அவசியமாயிற்று. எனவே அவள் றமணன் கல்வி கற்கும் தனியார் கல்வி நிறுவனத்துக்குப் போய் விசாரித்ததில் உண்மை அம்பலமாயிற்று. றமணன் கடந்த மூன்று மாதங்களாக வகுப்புகளில் பங்குபற்றவேயில்லை யாம். அவளது இதயத்தில் விழுந்தது முதல் அடி.

இரவு நேரங்கழித்து வீட்டிற்கு வந்தவனை அம்மா நாசூக்காக விசாரணை செய்தாள்.

"தம்பி! ஏனப்பு இவ்வளவு நேரம்"

"அது வந்தம்மா நான் பிரண்டஸ்ஸோட சேர்ந்து படிச்சிட்டு வாறன்"

"உண்மையாய்த்தானே சொல்லுறாய். அப்ப... ஆலடிச் சந்தியில நீ பெடியளோட நிண்டு கும்மாள மடிச்சதாய் ஆக்கள் சொல்லிச்சினமே"

பிடரியைச் சொறிந்தான், றமணன்.

"உது சரிவராது. உனக்கு நான் பேர்சனல் கிளாஸ் ஒழுங்கு பண்ணப்போறன். வீட்டுக்கே வந்து படிப்பிக்கிற மாதிரி."

அம்மாவிடம் சரணடைந்த ரமணன் கெஞ்சி மன்றாடி தொடர்ந்து வகுப்புகளுக்குப் போய் வந்து ஒழுங்காக படிப்பில் கவனம் செலுத்துவதாக வாக்களித் தான். பெற்றவளும் நம்பினாள். பல தடவை பிற் போடப்பட்டு ஒருவாறு நடந்து முடிந்தது ஏ.எல் பரீட்சை. பெறுபேறுகள் வரும் வரைக்கும் அவனை வந்து கொழும்பில் நிற்குமாறு அப்பா அழைத்தபோது அவன் மறுதலித்து விட்டான்.

"அம்மாவை இங்கு தனிய விட்டிட்டு எப்படியப்பா வாறது."

அம்மாவின் மீது மகன் காட்டும் அக்கறையை எண்ணி பெருமிதமடைந்தார், அப்பா. அவனோ அடிக்கடி அம்மாவிடம் பணம் வாங்கி நண்பர்களுடன் கூடி ஊரைச் சுற்றினான். விழலுக்கிறைத்த நீராக அம்மாவின் பணம் கரைந்தது. அத்துடன் அவன் நின்று விடவில்லை. தனது பாவனைக்கு ஒரு மோட்டர் சைக்கிள் வாங்கித் தருமாறு அம்மாவிடம் நச்சரிக்கத் தொடங்கினான்.

"பொறு தம்பி. நிசலற் வரட்டுக்கும். நல்ல றிசலற் வந்தால் உடன நான் மோட்டார் சைக்கிள் வாங்கித்தாறன்"

அம்மாவின் பதில் அவனுக்குப் பிடிக்கவில்லை.

அப்பாவிடம் முறையிட்டான். அவரும் அவனுக்கு பாதகமாகவே பதிலிறுத்தார். அதிலிருந்து அவன் அம்மாவிடம் முரண்பாடாக நடக்கத் தொடங்கி விட்டான். பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகின. மீண்டும் அவன் பரீட்சையில் கோட்டை விட்டிருந் தான். அதையிட்டு அவன் எள்ளளவும் கவலைப்பட வில்லை. மனம் வரந்தியது அவனது பெற்றோர் தான்.

ஆனால் அவனுக்கு தாங்கொணாத வேதனை யைத் தந்த விடயம் இது தான். நித்யா இப்பொழு தெல்லாம் அவனுடன் அதிகம் பழகுவதில்லை. மெது மெதுவாக அவனை விட்டு விலகிக் கொண்டே போகிறாள். பற்றாக்குறைக்கு அன்று அவன் கண்ட காட்சி வேறு அவனது மனதைநெருடிக் கொண்டே யிருக்கிறது. ஆம். இப்போதெல்லாம் நித்யா வேறொரு பையனுடன் உரசிக்கொண்டே நடந்து போகிறாள். அவனுடன் சிரித்து சிரித்து கதை பேசுவதும் பஸ்ஸினுள் அருகே அமர்ந்து பயணிப்பதும் எல்லாமே அவனது மனத்தில் எரிச்சலை ஏற்படுத்தகிறது. ஒரு நாள் அவளை தனியாகச் சந்தித்து விளக்கம் கேட்கலாமென்றால் சமயம் வாய்ப்பதில்லை.

ஒரு நாள் அவள் பயணிக்கும் பஸ்க்குள்ளேயே ஏறி "நித்யா!" என அவளை அழைத்தான். உதாசீனமாக அவனைத் திரும்பிப் பார்த்தவள், "என்ன ரமணன்! நிசல்ற் வந்திட்டுதெல்லே. உமக்கு என்ன றிசல்ற்?" என்று கேட்டாள். கேட்டதும் அவனது முகம் பேயறைந்தாற் போல போய் விட்டது. மீண்டும் அவளே வாய் திறந்தாள்.

"எனக்கு பி.காம் கிடைக்குமெண்டு நம்புறன்"

"அப்ப... ஐசிங் கிளாஸ் எல்லாம் விட்டாச்சோ?"

"அதுவும் பழகி முடிச்சிட்டன. இப்ப கம்பஸ்க்கு போக றெடியாகிக் கொண்டிருக்கிறன்.

இனியும் கதைதொடுத்தால் தன்னுடைய வண்டவாளம் கிளறப்படும் என்ற பீதியுடன்அவன் மெதுவாகத் திரும்பி நடையைக் கட்டினான். பஸ்ஸை விட்டு இறங்கும் போது அவர்களது குரல் காதுகளுக்கு தெளிவாகக் கேட்டது.

"யாரிது நித்யா?"

"யஸ்ற் எ பிரண்ட்"

அவனது நெஞ்சுக்குள் பிசையுமாப் போல் ஒரு வேதனை. வேதனையை மறக்க நண்பன் குகன் ஒரு யோசனை சொன்னான். அதன் விளைவாக போதைக் குள் தஞ்சமடையத் தொடங்கினான், ரமணன். அவனுடைய செய்கைகள் அம்மைவைப் பெரிதும் பாதித்தன. நடுநிசியில் வந்து கதவைத் தட்டுவான். தள்ளாடியவாறு வரும் மகனை அரவணைத்து பசியாற்றி படுக்க வைப்பாள், அன்னை. பெற்ற மனம் பித்து. பிள்ளை மனம் கல் என்று சொல்வார்கள். ஆயினும் தாயானவளுக்கன்று ஒரு கடமை இருக்கிறதல்லவா. தீய வழியில் பயணிக்கும் பிள்ளைக்கு அறிவூட்டி தக்க சமயத்தில் தவறை சுட்டிக்காட்டி கண்டிக்க வேண்டி யவளும் அவளே. பாசத்தை மட்டுமே காட்டி பிள்ளை களைப் பண்புள்ளவர்களாய் வளர்த்து விட முடியாது. தேவை ஏற்படுமிடத்து மனதைக் கல்லாக்கி நடை முறையில் சாத்தியப்படும், அவர்களாகவே தங்களது தவறை உணரும் வகையில் தண்டனை வழங்க வேண்டும். இதைத் தவிர்த்து பெற்றோர் ஒருவர் மற்றவர் மீது பழியைச் சுமத்துவது வீணான செயல் ரமணனது அம்மாவின் தவறையும் இவ்விடத்தில்த்தான் சுட்டிக் காட்ட வேண்டியிருக்கிறது.

மகன் திருந்துவான் எனத் தாய் காத்திருந்து களைத்துச் சோர்ந்து போனது தான்மிச்சம். நாளுக்கு நாள் நிலைமை மோசமடைந்து கொண்டே போனது. திடீ ரென அவன் வீட்டுக்கு வருவதை நிறுத்திக் கொண்டான். இன்று வருவான், நாளை வரவான் என அம்மா காத் திருந்தது தான் மிச்சம். ரமணன் வரவில்லை. பதறித் துடித்தவன் கணவனிடம் முறையிட்டாள் நீயாச்சு உன் பிள்ளையாச்சு என்று சொல்லி அவரும் அவளைக் கைவிட்டு விட்டார். அவள்தான் செல்லம் பிள்ளையைக் கெடுத்து விட்டாள் என்ற ஆதங்கம் அவருடையது.

தனியொருத்தியாய்க் கிடந்து தவித்தவளுக்கு காதில் ஒரு செய்தி கிட்டியது. ரமணனை பூநகரியில் வைத்து போதைப் பொருளுடன் கைது செய்து விட்டார் களாம். செய்தி தந்தமலைப்பினால் செய்வதறியாது திணறியவள் எங்கெல்லாமோ அலைந்து உலைந்தது தான் மிச்சம் எதுவும் நடக்கவில்லை. பன்னிரண்டு வருடங்கள் சிறைத் தண்டனை என தீர்ப்பாயிற்று. பரிதவித்து நின்றவள் வேலையையும் உதறிவிட்டு ஓய்வுதியத்திற்கு விண்ணப்பித்தவளாய் பற்றுக்கோடு தேடி கணவனிடம் போய்த் தஞ்சமடைந்தாள். மகளும் தனது மருத்துவப் படிப்பை முடித்துவிட்டு களுபோவில வைத்தியசாலையில் பணிபுரிந்து கொண்டிருந்தாள். மனதில் மகனைப்பற்றிய கவலையைச் சுமந்தவளாய், மகளுடன் கணவனுடனும் இணைந்து வாழத் தொடங்கினாள். அவளால் வேறு என்ன தான் செய்ய முடியும். எல்லோருடைய மனத்திலும் ஆதங்கம் இருக்கத்தான் செய்தது. அப்பா ஒரே வார்த்தையில் கூறிவிட்டார்.

"என்ன செய்வது. அவன் செய்த குற்றத்துக்கு தண்டனையை அனுபவித்துத்தானே ஆக வேண்டும். தான் போதைப் பொருளுக்கு அடிமையானதுடன் நின்று விடாமல் மற்றவர்களையும் பாழாக்கும் செய்கையைத் தானே அவன் செய்திருக்கிறான். தண்டனை முடிந்து அவன் திருந்தி வரும் வரை காத்திருப்பதைத்தவிர வேறு வழியில்லை."

பெற்ற மனம் நொந்து தவிப்பதை மற்றவர் புரிந்து கொள்ளாதவாறு தன்னை திரைக்குள் மூடி மறைத்துக் கொண்டார். அவருடைய நிலை அப்படியாகி விட்டது.

வருடங்கள் உருண்டோடின. ரமணனுடன் அவனது ஆப்த நண்பன் குகனும் சிறை வாழ்க்கை அனுபவித்துக் கொண்டிருக்க, மற்றைய நண்பர்களில் சங்கர் கனடாவுக்கு போய்ச் சேர்ந்து விட்டான். கோபி யும் வேறு சிலரும் மேசன் வேலைக்குப் போகத் தொடங்கிவிட்டனர். ஏறக்குறைய எல்லோருமே திருந்தி தத்தமது வாழ்க்கைப் பாதையில் கவனம் செலுத்த லாயினர். நண்பர்களது சிறைவாசத்தினால் ஏற்பட்ட கிலி அவர்களைத் திசை திருப்பி விட்டது.

பன்னிரண்டு வருடங்கள் பஞ்சாகப் பறந்து போக, ஒரு நாள் ரமணனும் குகனும் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டனர். வெளியே வந்தவர்கள் புகலிடம் தேடி அலைய வேண்டியதாயிற்று. காரணம் கடந்து

போன பன்னிரண்டு வருடங்களிலும் அவர்களுடைய கிராமத்தில் பலத்த மாற்றம் ஏறபட்டிருந்தது. கிடுகு வேலிகள் மதில்களாக மாறியிருந்தன. ஓலையால் வேயப்பட்டிருந்த வீடுகள் இப்போது ஓட்டு வீடுகளாய் தோற்றமளித்தன. எல்லாவற்றையும் விட அவர்கள் கூடிக்கும்மாளமடித்த ஆலடிச் சந்தியைத் தேடிப் பிடிக்க வேண்டியதாயிற்று. பரந்து கிளை பரப்பி விழுதுகள் விட்டிருந்த ஆலமரத்தையே காணவில்லை. மரம் இருந்த இடத்தின் அடையாளமே மாறிப்போய் விட்டிருந்தது.

தனது இனிமையான இளமைப்பருவத்தை சிறையில் தொலைத்துவிட்டு, நொந்து போன உள்ளத் துடன் தான் வாழ்ந்த வீட்டைத் தேடிப் போனான், ரமணன். உருப்படியாக வீடு நிமிர்ந்து நிற்பதைக் கண்டதும் மனதில் சிறிது தென்பு வரப்பெற்றவனாய் வாசலில் இருந்த "கேற்"றைத் தள்ளி திறக்க முற்பட்டவனுக்கு கிடைத்தது ஏமாற்றமே. வாசலை அடைத்து பெரிய பூட்டு தொங்கிக் கொண்டிருந்தது.

அம்மா எங்கே? ஒருவேளை அப்பாவிடம் கொழும்பிற்குப் போயிருப்பாளோ என்றெல்லாம் பலவாறாக மனம் சிந்திக்கத் தொடங்கியது. பக்கத்து வீட்டில் குடியிருக்கும் மாமாவிடம் போய் விசாரிக்க லாம் என்ற நோக்கத்துடன் அங்கு போனான். மாமா முன் விறாந்தையில் அமர்ந்திருப்பது அவனுடைய நம்பிக்கைக்கு வலுவூட்டியது. மெதுவாக அருகில் போய் "மாமா!" என அழைத்தான்.

குரல் கேட்டு நிமிர்ந்தவர், ஒரு தரம் ஏற இறங்க அவனைப் பார்த்துவிட்டு கேட்டார்.

"ஆர். ரமணனே!"

"ஓம் மாமா."

தங்கையின் மகன் என்ற இரத்த பாசம் அவரை உந்தியதோ என்னவோ உள்ளே திரும்பி மகளை அழைத்தார்.

"புவனா!"

தந்தையின் அழைப்புக் குரல் கேட்டதும் வெளியே வந்து எட்டிப்பார்த்தாள், புவனா. அத்தான்! அத்தான்! என்று சிறுவயது முதல் தன் பின்னால் அலைந்தவள், இன்று முகச் சோபை இழந்து முதன்னி யாகத் தோற்றமளிப்பதைக் கண்ணுற்ற அவனுக்கு இதயத்தை எதுவோ துளைக்குமாப் போல் ஓர் உணர்வு தட்டியது. மௌனத்தைத்தழுவியவனாய் நின்றிருந்தான்.

"ரமணன் பசியோட வந்திருக்கிறான் போல் இருக்கு. அவனுக்கு சாப்பாடு குடு."

"அத்தான்! உள்ளே வாங்கோ" என்று வாய் சொல்லவில்லை. கண்கள் கூறிய சைகையை உணர்ந்து கொண்டவனாய் உள்ளே போனான், ரமணன். புவனா பரிமாறிய உணவை வயிராறச் சாப்பிட்டவன் மனதிலோ ஆயிரம் எண்ணங்கள் உதயமாகின. வார்த்தைகளால் அவற்றுக்கு வடிவம் கொடுத்தான்.

"புவனா! நீ கவலைப்பட வேண்டாம். உனக்கு நானிருக்கிறன். வாழ்நாள் முழுவதும் உன்னை கண்கலங்க விடாமல் நான் காப்பாற்றுவன். என்னை நம்பு புவனா"

புவனாவின் வாயிலிருந்து வெடித்தது பூகம்பம்

"நீ என்ன விடுதலை வீரனாய் சிறைக்குப் போய் வந்ததென்ற நினைப்பா உனக்கு. நீ எங்கட சமூகத்தை சீர்கெடுக்கவென்றே செயற்பட்டவன். அதை மறந்து கதைக்கிறாய். நான் என்ரை கழுத்தை தூக்குக் கயிற்றுக்கு நீட்டினாலும் உனக்கு மட்டும் நீட்டமாட்டன். வாழ்நாள் முழுவதும் கன்னியாகவே இருந்து சாவன்."

புவனாவின் வெஞ்சொற்கள் ஒவ்வொன்றும் ரமணனின் உயிரணுக்களைத் தீண்டியபோது தான் இவ்வுலகத்தில் எதற்குமே லாயக்கற்றவன் என்ற உண்மையான நிலைப்பாடு அவனை உறுத்தத் தொடங்கியது. எவரது சொற்களையும் மதிக்காமல் தன்னிச்சையாக வாழ்ந்ததன் விளைவை அவன் உணர்ந்து கொண்டான்.

---

# எதார்த்தக் கவிதை எழுது!

கண்களில் ஆயிரம் கனவு ததும்பக்
கவிதை எழுதடா கவிஞா!
காலத்தை வென்றிடும் கற்பனை கூட்டி நற்
கருத்தை விதையடா கவிஞா!
புண்களை மாற்றிடும் பொது மருந்தொன்றையே
பூசடா கவிதையாய்ப் புலவா!
பொய்களாற் சோடிக்கும் போதிலும்...வாழ்வின்மெய்
போற்று நின் பாக்களில் புலவா!

மகிழ்வுகள் மட்டும் மலராத வாழ்க்கையின்
மர்ம இடர், துயர் அறிவாய்.
வதைபடும் பாவிகள்,வளம் பலம் அற்றவர்,
வலிகள் ஆதங்கங்கள் புரிவாய்.
சகதிக்குள் ஆழ்பவர், அகதியாய்த் தேய்பவர்,
அந்தரம் அவலங்கள் தெரிவாய்.
அவைகளை நின்கவிக்கு "அணிகளாய்" ஆக்கினால்
அது...புவிக்கொளிதரும் புரிவாய்!

ஆண்டவர், மீட்டவர், ஆள்பவர், வென்றவர்,
அன்றைய "நாயகர்" எனவே
ஆக..,முற் பாவலர் அவர் எழில், மறத்தையே
ஆராதித்தார் வார்த்தை தொழவே!
மாண்டவர், தாண்டவர், மாண்பிழந் தோய்ந்தவர்
வாழ்வை நின் பூட்டன் பா தொடவே
மறந்தது இன்றைக்கும் "அவர்களைப்" போன்றவர்
மாய்கிறார்...அவர் "கதை" உரையே!

மானுடம் என்பது மனிதர்கள் யாரையும்
வைத்திட வேணும் ஓர் நிரையில்.
மானுடர் யாவரும் மேம்பட வழிவகை
வைக்கணும் ஓர் அற வழியில்.
ஏனிது இன்னுமேன் தோன்றலை பாவலர்
என்பவர் சிந்தனை யதனில்?
இனியேனும் கவிஞர்கள் எதார்த்தக் கவிதையில்
எழுதட்டும் சமநீதி புவியில்!

- த.ஜெயசீலன்



# அ.யேசுராசாவும் சங்கம் புழைக்கும் மாயாகோவ்ஸ்கிக்கும்...!

ஈழக்கவி

தமிழ் நவீன கவிதைக்கு கிட்டத்தட்ட ஒரு நூற்றாண்டுப் பாரம்பரியம் ஆகிவிட்டது. ந.பிச்ச மூர்த்தியில் ஆரம்பித்தாலும் சுமார் 80 ஆண்டுகள் ஆகிறது. இதில் சாதனையாளர்கள் இருக்கிறார்கள். திசை திருப்பியவர்கள் Trend Setters என்று பிரமிள், நகுலன், எஸ்.வைத்தீஸ்வரன், ஞானக்கூத்தன், அ.யேசு ராசா, கல்யாண்ஜி, கலாப்பிரியா, தேவதேவன், தேவ தச்சன், பிரம்மராஜன், ஆத்மநாம், விக்கிரமாதித்தன், ராஜ சுந்தரராஜன், சமயவேல், ரமேஷ் பிரேம், மனுஷ்ய புத்திரன் என்று ஒரு வரிசை இருக்கிறது கவிஞர் கலாப்பிரியா வல்லினம் "கேள்வி பதில்" (01 .09. 2016) பகுதியில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். தமிழ் கவிதையை திசைதிருப்பியவர்கள் பட்டியலில் அ.யேசுராசாவையும் கலாப்பிரியா பதிவு செய்துள்ளமை கவனிப்புக்குரியது. யேசுராசாவின் தொடக்ககால கவிதையொன்றிற்கான பேராசிரியர் எம்.ஏ.நுஃமான் அவர்களின் கணிப்பு பின்வருமாறு அமைந்துள்ளது. "செப்டம்பர் 1969 "மல்லிகை" இதழில் "பெருமிதம்" என்ற தலைப்பில் ஒரு கவிதை பிரசுரமாகியிருந்தது. அந்த இதழில் வெளி வந்திருந்த ஐந்து கவிதைகளுள் அது ஒன்றே படித்ததும் என் நெஞ்சில் கொழுவிக்கொண்டது. அதை எழுதியவர் அ.யேசுராசா. நான் முன்பின் அறியாத பெயர். சந்திரத் தரையில் முதல் மனிதக்காலடி பதிந்தபோது என்னுள் எழுந்த உணர்வையும் அக்கவிதை பிரதிபலித்தது. கவிதை இதுதான்.

என்னுடைய வாழ்வுக்
காலத்து ஒரு நாளில்,
சந்திரனில் முதல் மனிதன்
காலடியை எடுத்து வைத்தான்!
நீண்டு.... மிக நீண்ட
அண்டவெளிச் சூனியத்துச்
சுற்றுகிற கிரகத்தில்
மனிதத் தடம் பதியத்
தொடங்கியதோர்
யுகத்தின் முதல் நாளில்,
நானும் வாழ்ந்திருந்தேன்!

இக்கவிதை பற்றி நான் எழுதிய குறிப்பு (அஞ்சிறைத் தும்பி மல்லிகை: ஒக்டோபர் 1969) பின்வருமாறு: வழக்க மான கருத்துகளைச் சொற்குப்பைகளோடு அள்ளிக் கொடுப்பவன் அல்ல கவிஞன் என்ற உண்மையைப் புலப்படுத்துவது அ.யேசுராசாவின் பெருமிதம் என்ற கவிதை. எதுகை மோனையைத் தேடி அலைபவர்கள் அதைக் கவிதை என்று சொல்லமாட்டார்கள். கவிதை செய்யுள் உருவத்திலே இல்லை. அதன் உணர்விலும்

உணர்வு வெளிப்படுத்தப்படும் முறையிலுமே உண்டு என்பதை ஒப்புக்கொள்பவர்கள் அதிலே கவிதையைக் காண்பார்கள். முனைய நான்கு கவிதைகளும் கருத்துக் களின் சொற்சேர்க்கைகளாக இருக்கையில் யேசுராசா வின் பதினொரு சிறு வரிகளும் இறுக்கமாகவும் நேரடியாகவும் உணர்ச்சி நிலையை வெளிப்படுத்தி இருப்பது கவனிக்கத்தக்கது. அதைப் படிக்கும்போது நானும் பெருமித உணர்வுக்கு ஆட்பட்டேன் என்பதால்தான் அதைத் திட்டமாக ஒரு நல்ல கவிதை என்று சொல்லக் கூடியதாக உள்ளது. கவிதை அறிவு ரீதியானது அல்ல. உணர்வு ரீதியானது. மூளையினால் விளங்கிக்கொள்ளும் கவிதையை விட உணர்வினால் புரிந்துகொள்ளப்படுவதே சிறந்ததாக இருக்கும். யேசுராசா ஒரு புதிய பெயர் ஆனால் உணர்வை வெளிப் படுத்துவதில் முதிர்ச்சியைக் காணக்கூடியதாக உள்ளது. மற்றவர்களுக்கு அது உதாரணமாக அமையலாம்.

அறுபதுகளின் ஈற்றில் (1968) கவிதை புலத்துக்குள் நுழைந்தவர் அத்தனாஸ் யேசுராசா (1946). "பாடசாலை நாள்களிலிருந்து மரபுக் கவிதை களைப் படித்து வந்தபோதும் பின்னர் அதில் சலிப் பேற்படத் தொடங்கியிருந்தது. 1967 அல்லது 1968 அளவில் படிக்கக் கிடைத்த சிறுதொகை "எழுத்து" இதழ்களின் கட்டுரைகளில் "புதுக்கவிதை" பற்றிய மாறுதலான கருத்துக்களைக் கண்டபோது புத்துணர்வு ஏற்பட்டபோதும், அவற்றிலிருந்த கவிதைகள் பலவும் என்னைக் கவரவில்லை. ஆனால், 1968இல் தற்செய லாய்க் காணக்கிடைத்த, ஈழத்துக் கவிஞர் தா.இராம லிங்கத்தின் "காணிக்கை" என்னும் தொகுப்பு எனக்கு வெளிச்சத்தைத் தந்தது அவரது கவிதைகளால் ஆகர்ஷிக்கப்பட்டேன். அக்காலத்திலேயே கவிதை களையும் எழுதத் தொடங்கினேன். படைப்புந்தல் இருந்த வேளைகளில் எழுதினேன்: பின்னர் வேறுவேறு வேளைகளில் அவற்றைச் செப்பனிட்டேன். தீவிரமாய்த் தொடர்ந்து எழுதாவிட்டால் இலக்கிய உலகில் காணாமல் போய்விடுவேன்" என்ற அர்த்தமற்ற அச்சம் எனக்கு என்றும் இருந்ததில்லை. "தயாரிப்பு"களிலும் நம்பிக்கையில்லாதவன். எனவே, எண்ணிக்கை குறை வாயிருத்தல் இயல்பானதொன்றே!" இவ்வாறு "அறியப் படாதவர்கள் நினைவாக...!" நூலின் என்னுரையில் எழுதியுள்ளார். செய்நேர்த்தியுடனும் மிகுந்த அவதானத்துடன் கூடிய சொற்தேர்வுடனும் கவிதை எழுதும் ஆற்றல் பெற்ற யேசுராசா அவரே குறிப்பிடுவது போல, எண்ணிக்கையில் குறைந்தளவே கவிதைகள் எழுதியிருக்கிறார். 55 வருடங்களுக்கு மேலாய் இலக்கிய செயற்பாட்டில் உயிர்ப்போடு இயங்குகின்ற யேசுராசா இதுவரை ஒரேஒரு கவிதைத் தொகுப்பையே தந்திருக் கிறார். 1984ஆம் ஆண்டு முதல் பதிப்பு கண்ட "அறியப்படாதவர்கள் நினைவாக...!"("க்ரியா" வெளியீடு) தொகுப்பில் 45 கவிதைகள் இருக்கின்றன. 2023ஆம் ஆண்டு 2ஆம் பதிப்பு கண்ட (மணற்கேணி வெளியீடு) இத்தொகுப்பில் முன்னைய 45 கவிதை களுடன் புதிதாக 18 கவிதைகள் சேர்க்கப்பட்டுள்ளன. ஆக அவரெழுதியது 63 கவிதைகளா? இருந்தா லென்ன? மௌனி குறைவான சிறுகதைகள் எழுதி அவற்றின் நிறைவான கலைத்தன்மையால் நிலையான இடத்தைப்பெற்றது போல, யேசுராசாவும் எண்ணிக்கை யில் குறைவாக கவிதைகளை எழுதியபோதிலும் அவற்றின் மேன்மைமிக்க கலைத்தரம் காரணமாக அவை என்றும் நிலைத்திருக்கும் தன்மையைப் பெற்றிருக்கின்றன. தொகையாக எழுதிக் காணாமல் போனவர்களைவிட, நிறைவாக கொஞ்சமெழுதி நிலைத்திருக்கிறார் யேசுராசா. அவரே "தாய்வீடு" நேர்காணலில் இப்படி குறிப்பிடுகிறார்: "கவிதைகளைக் கூட நீண்டகாலம் தொடர்ச்சியாக எழுதாமல் இருந்து விட்டு, சில ஆண்டுகளுக்கு முன்னர் தொடர்ச்சியாக ஏழெட்டுக் கவிதைகளை எழுதினேன். அந்தக் கவிதைகள் கலைமுகம் இதழில் வெளியாகின. சில வற்றை ஆங்கிலத்தில் லக்ஷ்மி ஹோம்ஸ்ரோம் மொழி பெயர்த்தார். ஒரு கவிதையை மலையாளத்தில் சச்சி தானந்தன் மொழிபெயர்க்க இருப்பதாக அறிந்தேன். உண்மை என்னவென்றால், நான் பதினொரு சிறுகதை களும் சுமார் அறுபது கவிதைகளும் எழுதியிருக் கின்றேன் பத்திகளும் கட்டுரைகளும் நிறைய எழுதியிருக் கின்றேன். ஆனாலும் நான் என்னை ஒரு வாசகனாகத் தான் உணர்கின்றேன் படைப்பாளியாக உணர்வதில்லை. மற்றது, ஒரு படைப்பாளி தொடர்ந்து செயற்படவேண்டும் என்கிற கட்டாயம் இருப்பதாகவும், நான் உணரவில்லை. தொடர்ந்து எழுதவேண்டும் என்பதற்காக வலிந்து எழுதிக் குவித்தவர்களின் எழுத்துக்களைப் பார்க்கின்ற போது, அவற்றுள் பெரும்பாலானவை மோசமாகவே அமைந்திருக்கின்றன என்பதையும் காண முடிகின்றது."

உணர்வுரீதியான தொற்றுதலை ஒரு கவிதை என்னுள் நிகழ்த்தவேண்டுமெனக் கருதுகிறேன் என "ஆக்காட்டி"(16 ஐப்பசி 2015) நேர்காணலில் யேசுராசா தெரிவித்துள்ள கருத்து நோக்கத்தக்கது. "இவரது கவிதைகள் உணர்வுச் செறிவின் வீரியத்தில் இலக்கிய வேகம் கொண்டு மேலெழுவதை காணலாம். யேசுராசா வின் கவிதைத் தொகுதி, "இதுபற்றி எழுதுவதற்கு ஒன்றுமில்லை" என்று ஒதுக்கிவிடக்கூடிய சாதாரண தொகுதியல்ல. எழுதுவதற்கும், படித்தின்புறுவதற்கும் நிறையவே உள்ள தொகுதி இது. மேலும், யேசுராசாவின் தோல்விகாணும் கவிதைகள்கூட அவருக்கே உரிய தனித்தன்மையைப் பேணுவையாய் உள்ளதும், கவனிக் கப்பட வேண்டிய ஒன்றாகும். அத்தோடு "மௌனிய" நுண்ணிய வார்த்தைப் பிரயோகத்தோடு, "புதுமைப்பித்த" பன்முக ஈடுபாட்டைப் பிரதிபலிக்கின்ற ஒரு வகைத் தன்மை, யேசுராசாவிடம் உண்டு" (அலை மார்கழி 1985 பக். 1013, 1017) என்பது முபொவின் அவதானிப்பாகும்.

யேசுராசா தன்னுடைய கவிதை புனைவாக்கம் பெறுகின்ற நுட்பத்தை இருவேறு நிலைகளில் நுண்ண யத்தோடு விபரித்துள்ளார்.

ஒன்று, தனிநிலைக் கவிதைக்குரிய பொறி தோன்றி, உணர்வு வேறுபாட்டின் ஓசைகளுக்கியைய சொற்கள் வரிவடிவில் மனதுக்குள் அசைந்தபடி இருக்கும். ஆதாரப் பொறியின் சித்திரிப்பு வெளிப்பாடு முழுமை அடைந்ததென்ற திருப்தி ஏற்பட்டபின், உடனேயே அவற்றைக் குறிப்புப் புத்தகத்தில் பதிந்து கொள்வேன். பின்னர், சிறுகதைப் பிரதிக்குப் போலவே செப்பனிடும் செயற்பாடு, அவ்வப்போது கவிதைப் பிரதிக்கும் நடைபெறும். திருப்தி கண்டபின்தான்,

வேறொரு குறிப்புப் புத்தகத்தில், இறுதி வடிவக் கவிதை எனப்பதிந்து கொள்வேன் அக்கவிதைகளே பிரசுரிக்கத் தகுதியானவையாகும் ("அங்குமிங்குமாய்..."2021:44, 45).

இரண்டு, 17.10.1979 அன்று மாலைநேரம் ஏ.ஜே.கனகரத்தினா, கவிஞர் வ.ஐ.ச.ஜெயபாலன், நான் மூவரும் கதைத்தபடி யாழ்ப்பாணத்திலுள்ள "பிரதான வீதி"யில் நடந்துகொண்டிருந்தோம். "துரையப்பா ஸ்ரேடியம்" அருகில் காங்கேசன்துறை வீதியில் திரும்புகையில் (கடற்பக்கத்தில் யாழ்.பொலிஸ் நிலையம் இருந்தது). டச்சுக் கோட்டையையும் கோட்டைமேல் தெரிந்த தூக்குமரத்தையும் பார்த்தபடி, தான் காலையில் இந்த இடத்தால் போகும்போது மைதானத்தில் துப்பாக்கிகளுடன் பொலிசாரின் அணிவகுப்புப் பயிற்சி நடைபெற்றதும் பின்னணியில் கோட்டைச்சூழல் தெரிந்ததும், "காலங்கள் கழிந்தும் அடக்குமுறை அதிகாரச் சூழலில் எந்த மாற்றமும் இல்லை"யென்ற உணர்வை ஏற்படுத்தியதாக ஏ.ஜே. சொன்னார். அவரது சொற்கள் என்னுள் பதிந்து ஏற்படுத்திய இரண்டாம்நிலை அனுபவத்தாக்கத்தால், அன்றிரவு "புதிய சப்பாத்தின் கீழ்" என்ற கவிதையை எழுதினேன் அதிக எண்ணிக்கையில் கவிதை எழுதிக் கொண்டிருந்த நண்பன் ஜெயபாலன் இதுபற்றிக் கவிதை எழுதவில்லை. வேறுபடும் தனியாள் மன நிலையில் படைப்பு" உருக்கொள்ளும் தன்மையைப் புரிந்துகொள்ள, இவ்வுதாரணம் உதவக்கூடும்! ("அறியப்படாதவர்கள் நினைவாக...!" 2023: என்னுரை).

யேசுராசாவின் கவிதைப்பிரதி இயங்கும் புலத்தை இவ்வுதாரணம் துல்லியப்படுத்துகின்றது. யேசுராசாவின் கவிப்புனைவு எவ்வாறான மனோ நிலையில் கட்டமைக்கப்படுகின்றது என்பதற்கு "புதிய சப்பாத்தின் கீழ்" கவிதை எடுத்துக்காட்டாகின்றது.

> சமாந்தரமாய்ச் செல்லும்
> கரிய தார் றோட்டில்,
> நடந்து செல்கிறேன்.
> கண்களில்,
> பிரமாண்டமாய் நிலைகொண்டு
> கறுத் திருண்ட
> டச்சுக் கற்கோட்டை
> மூலையில்,
> முன்னோரைப் பய முறுத்திய
> தூக்குமரமும் தெளிவாய்.

யாழ்ப்பாண டச்சுக் கோட்டையின் பின்னணியில் கவிதையை ஆரம்பிக்கும் கவிஞர், அக்காலத்து மக்களை பயமுறுத்திய தூக்கு மரத்தையும் சுட்டுகின்றார். நிகழ்கால அதன் நிலவரத்தை அடுத்தவரிகளில் படம்பிடிக்கின்றார்,

> பரந்த புற்றரை வெளியில்
> துவக்குகள் தாங்கிய
> காக்கி வீரர்கள்
> அரசு யந்திரத்தின்
> காவற் கருவி.
> என்றும் தயாராய்
> வினைத்திறன் பேண
> அவர், அணிநடை பயின்றனர்

அடுத்த வரிகளில் அரச யந்திரத்தின் காவற் கருவிகளால் நிகழப்போகும் அடாவடித்தனத்தை கவித்துவம் சொட்டும் சொற்களால் உணர்த்துகிறார்,

> சூழ்ந்த காற்றிலும்,
> அச்சம் பரவும்.

கவிதையின் இறுதி வரிகளில் வரலாறு முழுக்க தொடரும் அடிமை வாழ்வை ஆழமான அர்த்தத்துடன் தெளிவுபடுத்துகிறார்,

> முந்நூறு ஆண்டுகள் கழிந்தனவாயினும்
> நிறந்தான் மாறியது;
> மொழிதான் மாறியது;
> நாங்கள் இன்றும்,
> அடக்கு முறையின் கீழ்…

இக்கவிதை "தமிழ்த் தேசியவாதக் கருத்துநிலை அடிப்படையில் முக்கியமானது எனலாம். "தமிழர் தாயகத்தை" ஐரோப்பியர் காலத்திலிருந்து ஆக்கிரமிக்கப்பட்ட பூமியாக காண்பது இக்கவிதையின் முக்கிய அம்சமாகும்" என்கிறார் எம்,ஏ,நுஃமான்.

இருபது கிளவிகளால் பின்னப்பட்ட "சூழலின் யதார்த்தம்" என்ற கவிதை பல்வேறு இறைச்சிப்பொருள் விகற்பங்களை உணர்த்தி நிற்கின்றது, முகமூடி அணிந்து பூச்சாண்டி காட்டாத இயல்பான சொற்களில் கவிதை புனைவாகியுள்ளது,

> எனது முகமும்
> ஆன்மாவும்
> அழிகின்றன.
> ஒருமையென,
> மூடுண்ட வட்டத்துள்
> ஒடுங்கிஇருக்கக்
> கேட்கப் பட்டேன்.
>
> காலநகர்வில்
> தாங்காமையில் வெளிவந்து
> சிறுதூரம்,
> நடக்கத் தொடங்கினேன்
> தடிகளுடன் எனைச்சூழ்ந்தனர்:
> "கலகக்காரன்" என்றுசொல்லி.

இக்கவிதையை நுண்மையாக மு. பொன்னம்பலம் துலக்கியுள்ளார், "இச் சிறுகவிதை, படிப்பவன் மனதைப் பாதிக்கின்ற இலக்கிய வலு கொண்டுள்ளதா? நிச்சயமாக இக்கவிதையின் இலக்கியத் தாக்கம் பலமானது. "எனதுமுகமும்" என்று தொடங்கி "கலகக்காரன் என்றுசொல்லி" என்று முடியும் வரையும் உள்ள கவிதை வரிகள் மிகக்கவனமாக தெரிவு செய்யப்பட்டு, ஒன்றுக்கொன்று இயைபுடையனவாய் இழைக்கப்பட்டு, ஒன்றை அகற்றினால் மற்றது கெட்டுவிடும் போன்ற நிலையில் ஆக்கப் பட்டுள்ளன என்பதை இலக்கியப் பரிச்சயம் உள்ள எவனும் இவகுவில் புரிந்து கொள்ளலாம். நான் இக்கவிதையை பலதடவைகள் படித்தேன். ஒவ்வொரு வாசித்தலின்போதும் ஒவ்வொரு அர்த்தம் கொள்ள வைக்கிறது கவிதை, "எனது முகமும் ஆன்மாவும் அழிகின்றன" என்று தொடங்கும் போதே யேசுராசாவுக்கு உரிய முத்திரை தானாவே வந்து விழுகிறது. நான் ஆரம்பத்தில் பிரஸ்தாபித்த அந்த முத்திரை, அதாவது "தொலைவும் இருப்பும்" எனும்போதும், "அறியபடாதவர்கள் நினைவாக" எனும்மோதும் ஏற்படும் மெல்லிதான துயர்கசியும் மென்னுணர்வுச் சொற்தேர்வு, அது யேசுராவுக்கே உரியது. ஆனால் இக்கவிதை தான்

இறுகியாகப் பரிணாமிக்கும் "கலகக்காரனுக்கு" இந்த மெல்லிதான துயருறும் உணர்வு அற்ற புரட்சித் தளச் சொற்கள் இன்னும் தோதாய் இருக்கும் என்று நான் நினைப்பது, இக் கவிதைபற்றி நான் கொள்ளும் வேறோர் விமர்சனமாகும். ஆயினும் அவரை அவரது நிலையிலேயே வைத்து அளப்பதெனின், சூழலில் ஏற்படும் சூக்குமமான அதிர்வுகளையும் ஒற்றியெடுத்துக் கொள்ளும், ஒரு மிகுந்தை ளநளெவைளைந தன்மை அவருடையது. அந்தத்தன்மைக்குரிய நுண்ணிதான சொற்களைக் கொண்டே தான் நுழையும் தளங் களுக்குள் தன் புரட்சியை மெல்ல மெல்லத் கட்ட விழ்ப்பவர் யேசுராசா. "மெல்ல மெல் கட்டவிழ்ப்பவர்" என்பது முக்கியமானது. காரணம் அவர் பாவிக்கும் சொற்கள் அத்தகையவை, அதுவே அவரது திறமையும் பலவீனமும் என்றும் சொல்லலாம். "குழலின் யதார்த்தம்" என்ற இக் கவிதை ஒடுக்கப்பட்ட ஒரு தனிமனிதனை, ஒடுக்கப்பட்ட ஒரு சமூகத்தை, ஒரு இனத்தை, அல்லது நாட்டை என்று பல தளங்களில் விரிந்து ஏறிஏறிச் செல்லக்கூடிய ஒரு சிறந்த கவிதை. இக்கவிதையை நான்படித்த போது, கடவுளைத் தேடிச்செல்லும் ஆத்மீகவாதிக்குக்கூட இது பொருந்து வதாகவே பட்டது. கடவுளைத் தேடுபவனுக்கு எதிராக, அதேகடவுளின் பெயரைச் சொல்லியே தடிகளோடு திரண்டெழும் வைதீகங்கள் பற்றிய அநுபவங்கள் எமக்கு உண்டு. அப்படி பல நிலைகளில் ஒரே தரத்தில் விரியும் இக்கவிதைக்கு இதைவிட வேறென்ன இலக்கியப் பெறுமானம் தேவை?" ("அலை" மார்கழி 1986 பக். 1011),

யேசுராசாவின் கவிதை மொழி வாய்திறந்து வெளிப்படும் உரையாடல் மொழியாக பரிணமிக்கிறது. மனசுக்குள் ஊறப்போடப்பட்ட உணர்வுகள் கவிமொழி யாக உயிப்படைகின்றது. யேசுராசா என்ற "கவிதை சொல்லியின் எண்ணற்ற குரலிழைகளின் வழியே பிரதியினை" படைத்தல் துவங்குகிறது. கவிதையின் வீரியத்துகேற்ப சொற்களை நேர்த்தியாகவும் வெகு சிக்கனமாகவும் பயன்படுத்துகின்றார். இதனால் கவிதையின் வலிமை பல்வேறு வாசித்தல்களுக்கு ஏற்ப பெருகிக்கொண்டே போகிறது. இதற்கு "சூழலின் யதார்த்தம்" கவிதை சிறந்த உதாரணமாகும். கவிதை யாடலை பல்வேறு அர்த்தங்கள் தோன்ற விகசிக்க வைத்திருக்கிறார் யேசுராசா. "அறியப்படாதவர்கள் நினைவாக…!" தொகுப்பின் தலைப்பை போலவே கவிதைகளும் இதனை நிகழ்த்தியிருக்கின்றன. யேசு ராசாவின் கவிதைகள் பிரதிக்கு அப்பால் வாசகனைச் சிந்திக்க உந்துகின்றன. சூழலின் யதார்த்தம், சூழல் போன்ற பிரதிகள் இதற்கு சிறந்த எடுத்துக்காட்டு களாகும்.

யேசுராசாவின் காதல் உணர்வு சார்ந்த கவிதைகள் தனித்துவமானவை. "காதல் தொற்றிச் சில வரிகள்", "மௌனமாய்ப் பிரிந்து செல்லல்", "தொடரும் பிரிவு", "தெரிந்து கொண்டமை" முதலான தலைப்பு களே கவிதைசொல்லியின் மென்மன உணர்வுகளை யும் பிரிதலின் ஆழ்துயரையும் ஆராதிக்கின்றன. காதலின் பெருந்துயராலும் ஏமாற்றங்களாலும் கவிதை சொல்லி துவண்டுவிடவில்லை. பிரிவின் மாவலியை எதிர்கொண்டு எழுந்திருக்கும் முனைப்பே காதல் கவிதைகளின் முதன்மைப் பொருளாக வியாபித் துள்ளன. "சங்கம் புழைக்கும் மாயா கோவ்ஸ்கிக்கும்….!" என்ற கவிதை இதனை துலாம்பரப்படுத்துகின்றது. பேராசிரியர் எம்.ஏ.நுஃமான், மு.பொன்னம்பலம் போன்ற விமர்சகர்களால் சிலாகித்துப் பேசப்பட்ட முக்கியமான கவிதை இது. ""சங்கம் புழைக்கும் மாயா கோவ்ஸ்கிக்கும்" என்ற கவிதை இவரது "இரண்டாவது பிறப்பின்" பிரகடனமாகவே ஒலிக்கிறது. இது எல்லாவித விரக்தி, துயர், சபலங்களையும் துடைத்து ஓட்டி. வாழ்க்கை ஆமோதிப்பின் உச்சத்தைக்காட்டும் அற்புத மான கவிதை. உண்மைக் காதல் வயப்பட்டவர்களின் மனநிலையைப் புரிந்துகொள்ளும் அதே நேரத்தில், அது கைகூடாதபோது தற்கொலை புரிவதோ, செயலற்று ஒதுங்குவதோ கூடாது. மாறாக மேலும் மேலும் புத்துயிர்த்தெழவேண்டும் என்கிற உந்துதல் கொண்டது இக்கவிதை" என்கிறார் மு.பொன்னம்பலம்.

இந்த பிரதிக்குள் மூன்று கவிதைசொல்லிகள் இருக்கின்றனர். ஒன்று, சங்கம் புழை கிருஷ்ணபிள்ளை (!911-1948). இவர் புகழ்பெற்ற மலையாளக் கவிஞர் (அவரைப் பற்றிய விளக்கம் பின்னர்). இரண்டு, விளாடிமிர் மயாகோவ்ஸ்கி சோவியத்கவிஞர். ஒரு புரட்சிக் கவிஞன் என்ற வகையில் அவர் "தனிமனித" உணர்ச்சிகளையும் தன்னுணர்ச்சிக் கவிதைகளையும் எதிர்த்துவந்த போதிலும் அவை அவரைவிட்டு ஒருபோதும் விலக வில்லை. "காதலின் சாரம், அதன் பொருள்பற்றித் "தோழர் கோஸ்ட்ரோவுக்கு பாரிஸிலிருந்து ஒரு கடிதம்" (!928) என்ற கவிதை காதலைப்பற்றிய அவரது மென்மை யான, நுட்பமான உணர்வுகளைப் பதிவு செய்துள்ளது:

"ஏன், இந்த மனநிலையில்
ஒரு கரடிகூட சிறகுமுளைத்துப் பறக்கும்
பிறகு, மூன்றாந்தர மதுவிடுதியில்
சிறிதுநேரம்புழுங்கிக்கொண்டிருந்தபின்ஒருசொல்
விர்ரென்று விண்ணோக்கிப் பறந்து
தூமகேதுவாய் ஒளிரும்
அதன் வால் வான்பரப்பில் நீண்டு
அதன் தோகை வானத்து ஒளிவிளக்காய்த் திகழ
அதன் கீழ் காதலரமர்ந்து அதைத் தம்
கண்ணுக்கு விருந்தாக்குவர்
தம் வனத்து லைலாக் மலர்களை முகர்ந்தபடி"

பிரான்சுக்கு அவர் சென்றிருந்தபோது, காதலிக்கத் தொடங்கிய டாடியானா என்ற பெண்ணோடு ஏற்பட்ட அனுபவத்தின் விளைவாகவே இக்கவிதையை எழுதி னார். ஆனால் இக்காதல் நிறைவேறவில்லை. மயாகோவ்ஸ்கியால் காதலிக்கப்பட்ட முதல் பெண், டெனிசோவா. அவரது முதல்காதல் தோல்வியில் முடிந்தது. "முகில் போன்ற மனிதன்" என்ற கவிதையில் இந்த முதல் காதல் அனுபவம் பிரதிபலிப்பதைக் காண லாம். சோக்கரடீஸின் உயிர்பிரியும் இறுதி தருணத்தை பிளேட்டோ காட்சிப்படிமமாக்கியதுபோல, மாயா கோவ்ஸ்கியின் இறுதி தருணத்தை எஸ்.வி.ராஜதுரை இப்படி பதிவு செய்துள்ளார். "சமநிலை பேணுவதில் எப்போதுமே தடுமாறும் மயாகோவ்ஸ்கி ஒரு பித்தனைப் போல் நடந்துகொள்ளத் தொடங்கினார். கணவரை உடனடியாக விவாகரத்து செய்துவிட்டுத் தன்னோடு சேர்ந்து வாழுமாறு கவிஞர் வெரோனிகாவை வற்புறுத்தினார். அவர்களது கடைசிச் சந்திப்பின்போது

அதே கோரிக்கையை முன்வைக்கிறார். பக்குவமாகவும் பண்போடும் நிதானத்தோடும் இப்பிரச்சனையை கையாள வேண்டும் என வெரோனிகா கூறுகிறார். அதை ஏற்றுக்கொள்வதாகக் கூறித் தன் காதலியிடம் புன்முறுவல் பூக்கும் மயாகோவ்ஸ்கியோ, அவள் தன் வீட்டைவிட்டு வெளியேறும் சமயத்தில் துப்பாக்கிக் குண்டொன்றைத் தன் மார்பில் செலுத்தி மடிகிறார்" (ரஷ்சியப்புரட்சி இலக்கிய சாட்சியம் 1989: 75),

மூன்று, ஈழத்து நவீன தமிழ்க் கவிதையின் நான்காம் தலைமுறையைச் சேர்ந்த அ.யேசுராசா. அவரது காதல் கவிதைகள் பிரிவுத்துயரின் அவஸ்தையை வெளிப்படுத்துகின்றன. எதிர்பார்ப்பும் ஏமாற்றமும் அவற்றின் உரியாகியுள்ளன. "காதல் முறிவும் அதை எதிர்கொள்ளலும் அவருடைய காதல் கவிதைகளின் முதன்மைப் பொருள்" என்கிறார் எம்.ஏ.நுஃமான். யேசுராசாவின் காதல் உணர்வினை அழகாக வெளிப்படுத்துகின்ற பிரதி "சுழல்". மு.பொன்னம்பலத்தின் மொழியில் சொன்னால், "மௌனியின் கதைகள் எப்படியோ அப்படியே இக் கவிதையும் படிப்பவனின் மன அவிழ்தலுக்கேற்ப, விரிதல் காட்டடக்கூடியது."

வாழ்க்கைக்கனவுகளை நீயே அழிக்கிறாய்
மறுபடியும்புதிய கனவுகள் தருகிறாய்.

வாழ்க்கையொரு சுழல்
வட்டமென்றுணர்த்தவா
பிரிதல் காட்டிப்
பின், நெருங்கி வருகிறாய்?

நடுக்குற்றநெஞ்சின் துயரச் சிதறல்திரட்ட
என் நெஞ்சினைத் தடவுகிறாய்
ஏற்றிய கற்பூரம் "அம்மன்" முன் எரிகையில்,
வணங்கித் திரும்பி
சிரிப்பவிழ்தல் காட்டுகையில்
என்,
உயிர்ச் சுடரினை வளர்க்கிறாய்!

பார்! வான் நிலவின் ஒளிமழையில்
பூமி நனைகையில்
கரிய இருள்வறட்சி கலைகிறது...

"சங்கம் புழைக்கும் மாயா கோவ்ஸ்கிக்கும்" என்ற பிரதிக்குள் இருக்கின்ற கவிதைசொல்லிகள் மூவரும் காதலில் தோல்வி அடைந்தவர்கள். முதலிரு கவிதைசொல்லிகளும் காதல் தோல்வியை சகிக்க வொண்ணாது உயிரை மாய்த்துக் கொண்டவர்கள். காதல் தோல்வியினால் தற்கொலை செய்து கொண்டதாக கருதப்படும் இரு கவிஞர்களையும் விழித்து, மூன்றாவது கவிஞரான யேசுராசா பாடுவதாகவே கவிதையாடல் அமைந்துள்ளது.. "காதலித்த பெண் வேறொருவனை மணந்த துயரில் தற்கொலை செய்தார்" எனக் குறிப்பெழுதும் யேசுராசா, சங்கம் புழை என்ற கவிஞனோடு மனசை தைக்கின்ற கவிமொழியில் இப்படி உரையாடுகின்றார்.

சங்கம் புழை!
உன்நெஞ்சை முட்கள் கிழித்த கதையறிவேன்
"குளிர்ந்துபோன என் நிராசைநித்தமும்
மூடுபனியாக, உன் வீதியிற்படரும்"
என்றபடி துயரில் நீ செத்துப் போவாய்
உயிர்தின்றது உன் காதல்.

சங்ககால அகத்திணை புலவனின் உள்ளத்தில் உதிக்காத அற்புதமான கவிவரிகளை யேசுராசாவின் கவிதா உள்ளம் வெளிப்படுத்தியிருக்கிறது. "உயிர் தின்றது உன் காதல்" என்றவரி இதற்கு போதுமான தாகும்.

"நிறைவேறாக் காதற் துயரில், கைத்துப் பாக்கியினால் சுட்டுத் தற்கொலை செய்துகொண்டார்" என்று மாயா கோவ்ஸ்கி பற்றி குறிப்பெழுதுகின்ற யேசு ராசா, மாயாகோவ்ஸ்கியின் கவிவரிகளை உள்வாங்கி இப்படி உரையாடுகின்றார்.

"...நொறுங்கியது காதற் படகு
வாழ்வும்நானும் பிரிந்தனம்..."
ஓ! மாயாகோவ்ஸ்கி,
துயரினிலாழ்ந்தாய்
குண்டுகளால் அதை வெல்லப்பார்த்தாய்.

காதல் துயரை குண்டுகளால் வெல்லப்பார்த்த மாயாகோவ்ஸ்கியை பற்றி ஈழக்கவிஞன் வ.ஐ.ச. ஜெய பாலன் பின்வருமாறு பாடியிருக்கிறார்:

சூரியன் தன்னை வாடாஎன்று
தேனீர் விருந்துக்கு அழைத்த
ஷரூசிய புரட்சிக் கவிஞன் மாயாகோஸ்கிபோல்
இன்னும் சற்று இங்கே தரித்திடின்
படுக்கை அறையில் திராட்சை மதுவை பகிர்ந்திட
வாவென நிலவை அழைக்கலாம்.
எனினும் அந்தக் கவிஞனைப் போல
காதல் இழப்பை சகிக்க ஒண்ணாது
வாழ்வை மாய்த்திட நினைப்பது மில்லோம்.
("சமர்" ஜனவரி 1980: 07)

சங்கம புழையோடும் மாயா கோவ்ஸ்கியோடும் பேசிய யேசுராசா, அடுத்து தன்னுடைய நிலையை வெளிப்படுத்துகின்றார். தன்னைப்போலவே காதலில் தோல்வி அடைந்த கவிஞர்களின் உணர்வுகளோடு தன்னுணர்வுகளையும் இணைத்திருக்கிறார்.

காதலின் வஸீகரக்
கடுமைதாக்க
நானும் உம்போல மனமழிந்த கவிஞன்தான்
இந்தவண்ணமெல்லாம் நமக்கேன் நிகழ்கிறது?
மெல்லிதயங்கொண்டிருந்தோம் என்ப தாலா?

காதல் தோல்வியினால் தற்கொலை செய்து கொண்ட கவிதைசொல்லிகளை முன்நிறுத்தி பேசுகின்ற புத்துயிர்ப்பு வார்த்தைகள்தான் கவிதைக்கு முத்தாய்பாய் அமைந்துள்ளன.

முதிரா இளைஞர் செயலென்று
உம்மையெல்லாம்
எள்ளுவார் அணி சேரேன்
என்றாலும்,
உமது வழி தொடரேன்
செய்வதற்கு இன்னும்

*பணிகள் மிக உளதே!*
*செயலற்று வாழ்வில் ஒதுங்க முடியாது*
*"பிறத்தியானெல்லாம் உள் நுழையுங் காலம்!"*

*முள்முடி குத்தும்*
*சிலுவை உறுத்தும்தான், என்றாலும்*
*சாவு வரை வாழ்வேன்!*
*சாவுக்கு அப்பாலும்*
*என் செயலிற் கவியில்*
*உயிர்த்தெழுவேன்*
*உயிர்த்தே எழுவேன்!*

*மு.பொன்னம்பலம் குறிப்பிடுவது போல, இது எல்லாவித விரக்கி, துயர், சபலங்களையும் துடைத்து வாழ்க்கை ஆமோதிப்பின் உச்சத்தைக்காட்டும் அற்புத மான வரிகள். உண்மைக் காதல் வயப்பட்டவர்களின் மனநிலையைப் புரிந்து கொள்ளும் அதே நேரத்தில், அது கைகூடாதபோது தற்கொலை புரிவதோ, செயலற்று ஒதுங்குவதோ கூடாது. மாறாக மேலும் மேலும் புத்துயிர்த்தெழவேண்டும் என்ற உந்துதல் கொண்டது இக்கவிதை. "அவரது நம்பிக்கையின் குரல், வெறும் சுலோகமாக அல்ல. அடிமன ஆழத்திலிருந்து மிக நம்பிக்கையாக, உறுதியுடன் தெளிவாக ஒலிக் கிறது. "சாவுவரை வாழ்வேன்/ சாவுக்கு அப்பாலும்/ என் செயலிற் கவியில்" உயித்தெழுவேன்/ உயிர்த்தே எழுவேன்" எத்தனை அழகாக. அந்த நம்பிக்கையின் குரல் எழுகிறது" என்கிறார் இமையவன் (அலை 3 பங்குனி – சித்திரை 1976:˙81), சங்கம் புழை, மாயா கோவ்ஸ்கி உங்களைப் போல் என்னால் உயிரை மாய்த்துக்கொள்ள முடியாது. செய்வதற்கு பணிகள் மிக உள்ளதே. செயலற்று வாழ்வில் ஒதுங்க முடியாது; அடுத்து அவர் கூறுவது தான் முக்கியமானது "பிறத்தி யான் (outsider) எல்லாம் உள் நுழையும் காலம்!" – இதனை சண்முகம் சிவலிங்கம் "வெளியார் வருகை" என்றும் சேரன் "அந்நியப் பதிவு" என்றும் கவிதைகளிற் குறிப்பிடுகின்றனர். இத்தகைய "நுண்ணிய உணர்திறன் வழியாக கிளம்பும்" சொல்லாடல்கள்தான் யேசராசா வின் கவிதையை உயிரோட்ட முள்ளதாக்கியுள்ளது.*

*காதல் தோல்வியின் "மாவலி"யை "முள்முடி குத்தும்/ சிலுவை உறுத்தும்" என்கிறார். இயேசுவின் தலையில் 1.5 அங்குல நீளம் உள்ள 90 முட்களை சூட்டினார்கள் முள் கொடிய விஷமுள்ளது. ஒரு முள் ஒரு தேள் கொட்டுவதற்கு சமன். 90 தேள்கள் தொடர்ந்து யேசுவின் தலையை கொட்டிக் கொண்டிருப் பதற்கு சமனான வேதனை. "இரட்சணிய யாத்திரிகத்தில்" சிலுவை பற்றி H.A.கிருஷ்ண பிள்ளை பாடிய வரிகள் மனசுக்குள் பதியமாகியுள்ளது. "நோக்கில் அணு ஒவ்வொன்றும் நூறு ஆயிரங் கோடி மா கயத்தின் சும்மை மலிந்த பாவந் திரட்டி ஆக்கு சிலுவை..." பிரிதலின் இரங்கல் இத்தகையது. ஆனால். இத்தகு வலியையும் தாண்டி,*

*சாவு வரை வாழ்வேன்!*
*சாவுக்கு அப்பாலும்*
*என் செயலிற் கவியில்*
*உயிர்த்தெழுவேன்*
*உயிர்த்தே எழுவேன்!*

*என்று உரத்து முழங்குவது கவிதைசொல்லியின் வலிமையாகியுள்ளது.*

*"இது யேசுராசாவின் சிறந்த கவிதைகளுள் ஒன்று எனினும் ஒரு பிழையான தகவலை அடிப்படை யாக கொண்டு எழுதப்பட்ட கவிதை" என்று கூறுகின்ற எம்.ஏ.நுஃமான், அதுபற்றி பின்வருமாறு விளக்குகின்றார்: "புகழ்பெற்ற மலையாளக் கவிஞர் சங்கம் புழை கிருஷ்ணபிள்ளை (!911–1948) காதல் தோல்வியினால் தற்கொலை செய்து கொண்டவர் அல்ல. அவர் திரு மணம் செய்து நான்கு பிள்ளைகளின் தகப்பனாக வாழ்ந்து, தனது 36ஆவது வயதில் காசநோய்க்கு ஆளாகி இறந்தவர், ஆனால், காதல் தோல்வியினால் தற்*



கொலை செய்து கொண்டவர் சங்கம் புழையின் உற்ற நண்பனும் பள்ளித் தோழனும் இளமையிலேயே புகழ் பெற்ற மலையாளக் கவிஞனுமான எடப்பள்ளி ராகவன் பிள்ளை (!909-1956) என்பவர். ஒரு பணக்கார வீட்டுப் பெண்ணுக்கு டியூசன் கொடுக்கப்போய் அவள்மீது காதல் வசப்பட்டு, அவளுடைய பெற்றோரின் எதிர்ப்பி னால் பிரிய நேர்ந்தது. தனது 27ஆவது வயதில், அவளது திருமண நாளன்று தூக்கிட்டுத் தற்கொலை செய்து செய்து கொண்டார். ராகவன் பிள்ளையின் மறைவின் பின்னர் அவரின் நினைவாக சங்கம் புழை "ரமணன்" என்ற ஒரு நீண்ட இரங்கற்பா எழுதினார். மாயா கோவ்ஸ்கியின் மரணம் பற்றியும் அது கொலையா, தற்கொலையா என்ற தீராத சர்ச்சை உண்டு. ஆயினும் இந்தக் கவிதையைப் பொறுத்தவரை இந்தத் தகவல் முக்கியமானதல்ல. சங்கம் புழைக்கும் மாயா கோவ்ஸ்கிக்கும் பதிலாக வேறு பெயர்களையும் போட்டுக்கொள்ள முடியும். அதனால் கவிதையின் பொருள் வீச்சுப் பாதிக்கப்படாது" (பார்க்க, ஜீவநதி 156 ஆவணி 2021: 11,!2),

ஆங்கில கவிஞன் ஜோன் கீட்ஸ், 24 வயதில் காச நோயினால் காலமானது போல, மலையாளக் கவிஞன் சங்கம் புழை அதே கொடிய நோயினால் காலமாகும் போது அவனது வயது 38. சங்கம் புழையின் ஆத்ம நண்பன் எடப்பள்ளி ராகவன்பிள்ளை காதல் தோல்வியினால் தற்கொலை புரிந்ததை, "கண்ண தாசன்" இதழ் சங்கம் புழை காதல் தோல்வியினால் தற்கொலை செய்து கொண்டதாக எழுதிவிட்டது. அதை படித்த நினைவில் யேசுராசா இவ்வாறு எழுதிவிட்டார். ஆனால் பெயர் மாறிப்போனதால் கவிதையின் கருத்தியலுக்கு எந்தஊறும் விளைய வில்லை. சங்கம் புழைக்கு பதிலாக எடப்பள்ளி ராகவன் பிள்ளை என்றிருந்திருக்க வேண்டும். எம்.ஏ.நுஃமான் குறிப்பிடுவதுபோல, தரவுப் பிழையினால் பொருள் வீச்சில் பாதிப்பு ஏற்படவில்லை. ஒரு புதிய வெளிப்பாட்டு உத்தியில் இக்கவிதை சித்தரிக்கப்பட்டுள்ளது. கவிதைக் குரிய சொற்செறிவுடன் "கவிதையாடல்" சொற் சித்திர மாகியுள்ளது.

ஒரு விமர்சன அரங்கில் இக்கவிதை பற்றி முன் வைக்கப்பட்ட விமர்சனத்தை உள்ளவாங்கி, அதற்கு யேசுராசா வெளிப்படுத்தியுள்ள எதிர்வினை அலை 31 (சித்திரை 1988: 1099) இல் பின்வருமாறு பதிகை ஆகி யுள்ளது. சில மாதங்களின் முன்னர் எனது அறிப்படாத வர்கள் நினைவாக...! நூலின் "விமர்சன அரங்கு" யாழ்ப் பாணத்தில் நடைபெற்ற போது, நேரில் சமூகமளிக்க முடியாமையினால் பேராசிரியர் கா.சிவத் தம்பியினால் அனுப்பிவைக்கப்பட்டிருந்த விமர்சனக் கட்டுரை, வாசிக்கப்பட்டது. அது ஒரு சுருக்க மான கட்டுரை. எனது கவிதைகள் என்னை "ஒரு புனைவு நிலைவாதியாகவே! (Romanticist) காட்டுவதாக வும், எனது "கவிதை யாக்கத்தின் மிகச் சிக்கற்பாடான அம்சம் எனது மொழியேயாகும்" என்றும் அதில் அவர் தெரிவிக்கும் கருத்துக்கள், ஆச்சரி யத்தையே தரு கின்றன. இவற்றோடு வேறு சில கருத்துக்களையும் அவர் தெரிவித்த போலும். அவற்றை உதாரணங்களின் மூலம் நிறுவவில்லை. ஆதலால் அவற்றை ஒருபுறம் வைத்து விட்டு "சங்கம் புழைகக்கும் மாயா கோவ்ஸ்கிக்கும்" என்ற கவிதைபற்றிய அவரது கருத்தை மட்டும். பரிசீலிக்க முனைகிறேன். "மாயாகோவ்ஸ்கியின் மரணத்துக்கு முந்திய அவனது புரட்சிகரக் கருத்து நிலைகள், சாதனைகள் யாவற்றையும் மறந்து அவனை வெறும் உணர்ச்சிநிலைப்பட்டவனாகக் காட்டுவது வரலாற்று முரண் என்றே கருதுகிறேன்.

மயாகோவ்ஸ்கியின் பணிகள் பற்றிய தெளி விருப்பின் நீங்கள் நிச்சயமாக,

உனது வழி தொடரேன்
செய்வதற்கு இன்னும்
பணிகள் மிக உளதே1

என்று கூறியிருக்க மாட்டீர்கள்" என்று அவர் கூறுகிறார் சித்திரலேகா மௌனகுருவும் இதையொத்த கருத் தினையே வெளியிட்டார்.

இந்தக்கவிதை ஒரு தனிநிலைக் கவிதை. மாயா கோவ்ஸ்கியின் முழுவாழ்வையும் பற்றிய விமர்சனக் கட்டுரை அல்ல. அவரதும் "சங்கம் புழை"யினதும் காதல் தோல்வி அத்துயரைத் தாங்க முடியாது அவர்கள் தற்கொலை புரிந்தனர் என்பதில் அனுதாபங் கொண்டிருந்த போதும் அவர்களைப் போல் காதலில் தோல்வியுற்ற போதிலும், தற்கொலை செய்யமாட்டேன், ("உனது வழி தொடரேன்") என்பதையே, கவிதை சொல்கிறது. எனவே, "மயா கோவ்ஸ்கியின் புரட்சிரக் கருத்து நிலைகள், சாதனைகள் மறந்து" என்ற குற்றச் சாட்டு எழும்ப நியாயமே இல்லை. கவிதையில் தெளி வாகவே உள்ள இந்த அம்சத்தை விட்டு விட்டு, அது கூறாத ஏதோ வொன்றைப் பற்றிச் சொல்லவரும் இவர்களின் செயல், சென்ற வருடம் நோபல் பரிசு பெற்ற நைஜீரியரான வோல் ஸொயிங்காவின் கருத் தொன்றையே, எனக்கு ஞாபகப்படுத்துகின்றது: "இலக்கியம் எதைச் செய்ய வில்லையோ அதைப் பற்றிப் பக்கம் பக்கமாக எழுதிக் குவிக்கும் இவர்கள் (அதாவது யாந்திரிகப்பாங்கான மார்க்சிய விமர்சகர்கள்). இலக்கியம் என்ன செய்கிறதோ அதைத் தொடுவதே யில்லை."

அ.யேசுராசா தமிழ்பெயர்த்த புகழ்பெற்ற ரஷ்யக் கவிஞர் அன்னா அக்மதோவாவின் "பிரிதல்" என்ற கவிதையுடன் இதனை நிறைவு செய்கின்றேன். இக்கவிதை பற்றி "அங்குமிங்குமாய்"(2021: 32) நூலில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார். "இது ஓர் அழகிய மெல்லுணர்வுக் கவிதை. பெண்ணின் குழம்பி மங்கிய மனநிலையையும், எதிர்கொள்ளும் சூழலின் சிக்கலை யும், மாலை, சரிவான பாதை என்பன குறிக்கின்றன் "தூய ஊற்று" காதலுக்கும், "செடார் மரங்கள்" காதலருக்கும் குறியீடாக உள்ளன."

மாலை,
சரிவான பாதை என் முன்னால்.
நேற்றுதான்,
என்னைமறவாதே" என
காதலோடு அவன், வேண்டினான்.
இன்று வெறுங்காற்றும்,
இடையனின் அழுகுரலும்மட்டும்.

தூய ஊற்றினருகில்.
"செடார்" மரங்கள் அலைபுறுகின்றன.

(1914)

குப்பிழான் ஐ.சண்முகன்



# "நோக்கரிய நோட்டம்"

"ஹலோ, ஹலோ ஆர் பேசுறது"

சமையலறையில் ஏதோ சமைத்துக் கொண்டிருந்த திவ்யா, முன் விறாந்தையில் ஐபோன் மணிச்சத்தம் கேட்டு, கைவேலையை விட்டுவிட்டு, விறாந்தைக்கு வந்து ஐபோனை எடுத்துக் கேட்டாள்.

"ஹலோ ஹலோ ஆர் பேசுறது"

"இதோ படம் வருகிறது. பார்த்து ஆரென்று சொல் பார்ப்போம்" உற்று உற்றுப் பார்த்தாள். எதிர் முனையில் பெண் கண்ணைச் சிமிட்டி சிமிட்டி காட்சி கொடுத்தாள்.

"ஓ சர்மி, எவளவு காலமடி உன்னைப் பார்த்து. வட் ஏ செப்ரைஸ். முதல்பார்வையில் ஆரென்று தெரியேலை. கொஞ்சம் சதைபோட்டு வடிவாய் வந்திருக்கிறாயடி"

"கடைசியாய் உன்னைப் பார்த்து ஒரு மூண்டரை வருஷம் இருக்குமா? முதல்நாள் பின்னேரம் சாடைமாடையாய் உன்ரை விசயத்தை சொல்லிப் போட்டு போனாப்போலை உன்னைப் பார்க்கவே முடியேலை. எங்கே போனாய், எப்பிடிப் போனாய் ஒண்டுமே தெரியாது. உன்ரை அண்ணாக்களும் வந்து என்னட்டை விசாரிச்சவை. எனக்குத் தெரியா தெண்டதை அவையள் நம்பேலை."

"அதெல்லாம் பெரிய கதை. பிறகு சொல்லுறேன். இப்ப என்ணெண்டு என்னைக் கண்டுபிடிச்சனி"

"நீயும்தான் வடிவாய் வந்திட்டாயடி. முந்தின குட்டித் திவ்யா மாதிரி இப்ப இல்லை. முகத்திலை ஒரு பொலிவும் களையுமாய் பெரிய மனிசிமாதிரி. உங்கை வாழ்க்கை எப்பிடிப் போகுது."

"அதெல்லாம் ஆறுதலாய் பிறகு சொல்லுறேன். என்ன மாதிரி என்ரை நம்பர் கிடைச்சது."

"பேஸ் புக்கிலே மிஸ்ஸிஸ் முகுந்தன் என்ற பேரிலை இருக்கிறது நீயாயிருக்கலாமெண்டு ஆரோ சொன்னவை. எடுத்துப் பார்த்தேன். ரைம் லைனிலை உன்ரை பதிவுகளைப் பார்த்தால், அது நீதான் எண்டு தெரிஞ்சுது. நல்லவேளையாய் புறோபைலிலை உன்ரை நம்பரும் கிடந்தது."

"ஆ, அப்பிடியோ. சரியடி. சமையலறையில் சமையலில நிண்டனான். போன் சத்தம் கேட்டதாலை அரையும்குறையுமாய் விட்டுட்டு வந்திட்டேன். இன்னும் ஒரு மணித்தியாலத்திற்கிடையிலே முகுந்தன் லஞ்சுக்கு வந்திடுவான். பிறகு உன்னோடை ஒண்டரை, இரண்டு மணித்தியாலத்தாலை கதைக்கட்டே"

"இப்பவே இங்கை இரவு பதினொண்டைத் தாண்டியிட்டுது. உங்கை பகல் பதினொண்டு - பன்னிரண்டாய் இருக்கும் தானே. ஒண்டரை இரண்டு மணித்தியாலத்திற்குப் பிறகெண்டால் இங்கை நடுச்சாமமாய் போடும், கனக்க கதைக்க வேணும். நாளைக்கு கொஞ்சம் நேரத்தோடை கதைப்போமோ"

"ஓமடி. நாளைக்கு கொஞ்சம் நேரத்தோடை சமைச்சுப் போட்டு எடுக்கிறேனடி. எவ்வளவு காலத்திற்குப்பிறகு என்ரை ஆக்களெண்டு உன்னோடை கதைச்சது சந்தோசமாய் கிடக்கு."

"எனக்கும்தான். உன்ரை தொடர்பு கிடைச்சது எவளவு சந்தோசம். அப்ப நாளைக்கு கதைப்போம். சரியோ, bye"

"ஓகே. சீயு bye"

அடுத்தநாள் காலையில் மத்தியானச் சமையல் எல்லாவற்றையும் முடித்துவிட்டு, கைகால், முகத்தைக் கழுவி நிமிர்ந்தபோது, ஐபோன் மணி இடைவிடாது வா வாவென அழைத்தது. அவசர அவசரமாக கையை சட்டையில் துடைத்துவிட்டு, ஐபோனை எடுத்தாள் நேரம் பத்தரை மணியாகிவிட்டிருந்தது. எதிர்முனையில்

சர்மிளா பேசினாள்.

"ஹாய் எப்பிடி இருக்கிறாய் திவ்யா. சமையலெல்லாம் முடிஞ்சுதோ அல்லது நேற்றுப் போலக் குழப்பிப்போட்டேனோ."

"இல்லையடி எல்லாம் முடிச்சுப் போட்டு, உனக்கு எடுக்கலாமென வெளிக்கிடத்தான் நீ எடுத்தனி. நீ எப்பிடி இருக்கிறாய்."

"fine. நான் குழப்பினதாலை நேற்றைய சமையல் ஏதேன் இசகுபிசகாய் போச்சுதே"

"அப்பிடி ஒண்டும் பெரிசாயில்லை. குக்கரை நிப்பாட்டாமல் வந்ததாலை, அதிலையிருந்த வெங் காயப் பொரியல்தான் கொஞ்சம் கருகிப்போச்சு."

"அப்ப சாப்பிடேக்கை முகுந்தன் முகம் சுழிச்சவனே."

"நல்ல கதை கதைக்கிறாயடி. அந்தாள் என்னை ஒண்டுக்கும் குறை சொல்லுறதுமில்லை. எதிலை யெண்டாலும் குறை வைக்கிறதுமில்லை."

"அப்ப நல்லாய்தான் கைக்குள்ளை வைச்சிருக் கிறாயடி. அப்ப என்னமாதிரி வாழ்க்கை போகுது."

"அவனுக்கு இங்கை ஒரு கொம்பனியிலை நல்ல வேலை. நல்ல சம்பளம் கொடுகிறாங்கள். வேலையும் கஷ்டமில்லை. என்னையும் வேலையொண்டுக்கும் போக வேண்டாமெண்டிட்டான். நாங்கள் இரண்டு பேரும்தானே. பக்கத்திலை சின்னனாய் ஒரு எப்பார் மெண்ட்டிலை இருக்கிறோம். எல்லா வசதியுமிருக்கு, ஜாலியாய் வாழ்க்கை போகுது. உன்ரைபாடுகள் என்ன மாதிரி"

"உனக்குத் தெரியும்தானே. வீட்டிலை பிரச் சினைகள் இல்லை. இரண்டு பக்கமும் சம்மதம் தானே. தேவன்தான் கொஞ்சம் பொறு தங்கைச்சியின்ரை அலுவலை முடிச்சுப்போட்டு செய்வோம் என்கிறான். அதுசரி, அண்டைக்குக் கடைசியாய் என்னைச் சந்தித்தாபோல நடந்ததைச் சொல்லடி."

"படிக்கேக்கையே எனக்கும் முகுந்தனுக்கு மிடையிலை ஒரு அண்டஸ்ராண்ட் இருந்தது உனக்குத் தெரியும்தானேடி. டிக்கிறி முடிச்ச கையோடை, அவன் அமெரிக்கா போனப் போலையும் எங்களுக்குள்ளை தொடர்பிருந்ததை உனக்குச் சொன்னனாந்தானே. பிறகு வீட்டிலை தெரிஞ்சு போச்சு. சாதி அதுஇதுவெண்டு சொல்லி வீட்டாக்களுக்கு விருப்பமில்லை. எதுக்கும் தயாராயிரு எண்டு முகுந்தன் தகவல் அனுப்பினதும் உனக்குத் தெரியும்தானே. வீட்டுக்குத் தெரியாமல், முகுந்தனோடை வெளிக்கிட்டு கொழும்புக்கு வந்து, பிறகு அமெரிக்காவிற்கு வந்திட்டம். உங்கையிருந்த எல்லாத் தொடர்பும் அறுந்து போச்சு. அவன்ரை தங்கைச்சி மட்டும்தான் இடைக்கிடை கள்ளமாய் கதைக்கிறவள்."

"அப்ப நீ வீட்டு நிர்வாகமும், சமையல் சாப்பாடும்"

"என்னடி வீட்டுநிர்வாகம். ஒரு மண்ணாங் கட்டியும் இல்லை. காலமையிலை ரீயும், விஸ்கெற் அல்லது பிறெட். இருக்கிறதை சாப்பிட்டு, எட்டரை ஒன்பது மட்டில் முகுந்தன் வேலைக்குப் போனால், பன்ரண்டரை ஒண்டுக்கு லஞ்சுக்கு வருவான். சாப்பிட்டு கொஞ்சம் இருந்திட்டு இரண்டரை ஒண்டுக்குப் போனால், பின்னேரம் நாலுக்கு வருவான், அஞ்சுக்கும் வருவான், ஆறுக்கும் வருவான். அது அன்றைய வேலை நிலமைகளைப் பொறுத்தது. பின்னேரம் எங்கை யெண்டாலும் விசிற் அடிப்போம் படம் பார்ப்போம் கோயிலுக்கும் போவோம்."

"அப்ப மத்தியானமும் வீட்டிலை கொஞ்ச நேரம் நிற்பானெண்டு சொல்லுறாய். நிண்டு என்ன செய்யிற னீங்கள்."

"உனக்கு பகிடி கூடிப்போச்சுதடி; இப்ப கொஞ்ச நேரத்தாலை வந்திடுவான். நீயும் ஒருக்கா கதையேன்."

"கதைச்சும் நானென்ன செய்யிறது. விஸ் பண்ணலாம் சுகம் சுவாத்தியத்தை விசாரிக்கலாம்"

"இந்த முசுப்பாத்தியைக் கேளடி; அண்டைக் கொரு ஞாயிற்றுக்கிழமை. ஞாயிறு முகுந்தனுக்கு லீவு நாள். உடம்பு ஒரு மாதிரி கிடக்கு புளிக்கஞ்சி காய்ச்சு வோமோ எண்டு கேட்டான். உங்கை இருக்கேக்கை நான் சமையலறைப் பக்கமும் போறேலையெண்டது உனக்குத் தெரியும்தானே. என்ரை நிலைமை அவனுக்கு விளங்கிப் போச்சு. தானே எல்லா அடுக்குகளும் பார்த்து நல்ல ரொப்பாய் ஒரு புளிக்கஞ்சி காச்சினானடி. மச்சம் மாமிசம் காய்சுறதெண்டால் என்னைக் குசுனிப் பக்கமும் வரவிடான். எல்லாம் அவன் தான்."

"அப்ப நீ மகாராணி மாதிரி இருக்கிறாயெண்டு சொல்லேன்."

"ஓம் அப்பிடித்தான். நேற்று எனக்குப் பசிக் கேலை எண்டதாலை நான் முகுந்தனோட சாப்பிடேலை. அவன் போனாப்போலை, கொஞ்சநேரம் கழிச்சுச் சாப்பிட்டா, கறிக்கு உப்புப்போட மறந்து போன னெண்டு தெரிஞ்சுது. அவன் அதை வெளிக்காட்டாமல், நல்லாயிருக்கு, நல்லாயிருக்கெண்டு, சப்புக்கொட்டி சாப்பிட்டுட்டு போட்டான். பிறகுதானே நான் விட்ட பிழை தெரிஞ்சுது."

"அப்ப நல்லாய்தான் உன்னிலை மயங்கிக் கிடக்கிறானடி."

"அடுத்தமுறை கதைக்கேக்கை ஒருக்கா எங்கடை வீட்டையும் நோட்டம் பார்த்துச் சொல்லடி. இப்பவும் கோபமாய் இருக்கினமோ என்னையும் முகுந்தனையும் கரிச்சுக் கொட்டுகினமோ அல்லது கோபமெல்லாம் அடங்கிப் போச்சுதோ"

"பொறடி; கொஞ்சம் பொறடி நான் ஒரு உண்மையை சொல்லட்டே. உங்கடை வீட்டாக்கள்தான் குறிப்பா உன்ரை அம்மா தான் உன்னோடை கதைக்கச் சொல்லி நம்பரையும் தேடிப்பிடிச்சுத் தந்தவா. நானும் உன்னோட தொடர்பு ஏற்படுத்த தெண்டிச்சனான் தான். ஆனால், உன்ரை நம்பர் ஒண்டுமே கிடைக்கேலை. உன்ரை கொண்ணன் தான் எங்கேயோ தேடிப்பிடிச்சு இந்த நம்பரைக் கொண்டந்து தந்தவன்."

"அப்பிடியே சங்கதி. சரியான சந்தோசமாய் கிடக்கடி. முகுந்தனுக்கு சொன்னா அவனும் சந்தோசப் படுவான். உனக்கும் தெரியாத ஒரு செய்தியை சொல்லப் போறேனடி. நான் இந்த இரண்டு மாசமாய் சுகமில்லாமல் இருக்கிறேன்."

"வாழ்த்துக்கள் வாழ்த்துக்கள் வாழ்த்துக்கள். நான் இதை உங்கடை வீட்டாக்களுக்கு சொல்லிப் போட்டு பிறகு எடுக்கிறேனடி. உன்ரை கொம்மா சரியான சந்தோசப்படுவா. bye"

"பிறகு கட்டாயம் எடு சீயு bye."

கி.நடராசா

# பழந்தமிழ் இலக்கியங்களில் அறிவியல் கருத்துக்கள்

**உயிரினங்களின் வளர்ச்சி**

மருத்துவத்துறையின் வளர்ச்சியினூடாக வளர்ந்ததே உயிரினங்களின் தோற்றம் பற்றிய அறிவியல் கருத்துக்களாகும். சித்த வைத்தியர்கள் ஓரறிவு முதல் ஆறறிவு படைத்த உயிர் வர்க்கம் அனைத்தையும் அறிந்து வைத்திருந்தார்கள். உயிரினங்களின் பரிணாம வளர்ச்சிக் கோட்பாட்டை டார்வின் வெளியிடுவதற்கு முன்னரே தமிழ்ப் புலவரான அகத்தியர் அதனை நன்கு அறிந்திருந்தார். அவரிடம் பாடம் கேட்ட தொல் காப்பியர் ஓரறிவு முதல் ஆறறிவு படைத்த உயிர் வர்க்கம் அனைத்தையும்தன் குருவான அகத்தியரிடம் கேட்டறிந் ததை தனது நூலில் குறிப்பிட்டுள்ளார்.

ஆறு அறிவும் எவை என்பதை உயிர்களின் பகுப்பும் சிறப்பும் மரபும் என்ற தலைப்பில் குறிப்பிடு கின்றார்.

"ஒன்றறி வதுவே உற்றறி வதுவே
இரண்டறி வதுவே அதனொடு நாவே
மூன்றறி வதுவே அவற்றொடு மூக்கே
நான்கறி வதுவே அவற்றொடு கண்ணே
ஐந்தறி வதுவே அவற்றோடு செவியே
ஆறறி0 வதுவே அவற்றொடு மனமே
நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத்தினரே"
(தொல் - பொருள்- மரபியல் - 571)

ஓரறிவு உயிராவது உடம்பினாலே அறிவது; ஈரறிவு உயிராவது உடம்பினாலும் வாயினாலும் அறிவது; மூவறி உயிராவது உடம்பினாலும் வாயினா லும் மூக்கினாலும் அறிவது; நாலறிவு உயிராவது உடம்பினாலும் வாயினாலும் மூக்கினாலும் கண்ணினா லும் அறிவது; ஐந்தறிவு உயிராவது உடம்பினாலும், வாயினாலும், மூக்கினாலும், கண்ணினாலும், செவி யினாலும் அறிவது; ஆறறிவு உயிராவது உடம்பினா லும், வாயினாலும், மூக்கினாலும், கண்ணினாலும், செவியினாலும், மனத்தினாலும் அறிவது என உயிரினங்களை ஆறு வகையாகத் தொல்காப்பியர் வகைப்படுத்தியுள்ளார்.

புல், பூண்டு, செடி, கொடி, மரம் போன்றன வற்றிற்கு உயிரே இல்லை என்று கூறப்பட்ட காலமொன்று இருந்தது. இந்திய தாவரவியல் அறிஞ ரான JEGADISH CHANDRA BOSE என்பவர் இருபதாம் நூற்றாண்டளவில் *(1858-1937)* தாவரங்களுக்கு உயிர், உணர்வு, அறிவு உள்ளன என்பதை நிரூபித்துக் காட்டி விருது பெறுவதன் முன்னரே தொல்காப்பியர ஓரறிவி லிருந்து ஆறறிவுக்கு உரிய உயிரினங்களின் பெயர்ப் பட்டியல் ஒன்றை தருகின்றார்.

1. ஓரறிவு உயிர்கள் :
"புல்லும் மரனும் ஓரறிவினவே
பிறவும் உளவே அக்கினைப் பிறப்பே"
(மரபியல் - 572)

புல், மரம் முதலியன ஓரறிவுடையன. இவை போல கொட்டி, தாமரை போன்றவையும் ஓரறிவுடையன.

2. ஈரறிவு உயிர்கள் :
"நந்தும் முரளும் ஈரறிவினவே
பிறவும் உளவே அக்கினைப் பிறப்பே"
(மரபியல் - 573)

நந்தும் முரளும் ஈரறிவுடையன. இவற்றுள் நந்து என்பதனால் சங்கு, நத்தை, அலகு, தொன்னை என்பன வும் முரள் என்பதனால் சிப்பி, கிளிஞ்சல் ஏரல் போன்றவையும் இதற்குள் அடங்குகின்றன.

3. மூவறிவு உயிர்கள் :
"சிதலும் எறும்பும் மூவறிவினவே
பிறவும் உளவே அக்கினைப் பிறப்பே"
(மரபியல் - 574)

சிதலும், எறும்பும் மூவறிவுடையன. வேறும் இருக்கின்றன எனக் கூறப்பட்டதால் அவை அட்டை முதலானவற்றைக் குறிப்பிட்டன.

4. நாலறிவு உயிர்கள் :
"நண்டும் தும்பியும் நான்கறிவினவே
பிறவும் உளவே அக்கினைப் பிறப்பே"
(மரபியல் - 575)

நண்டும் தும்பியும் நாலறிவுடையன. வேறும் சில

இருக்கின்றன என்றமையால் நிமிறு, சுரும்பு போன்றன அடங்கும்.

*5.* ஐயறிவு உயிர்கள் :

“மாவும் புள்ளும் ஐயறிவினவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே“
(மரபியல் - *576*)

நான்கு கால்களையுடைய விலங்குகள் மற்றும் பறவைகள் போன்றனவற்றைக் குறிக்கும். வேறு என்ற வகையில் பாம்பு, மீன், முதலை, ஆமை முதலான வற்றைக் குறிப்பிடலாம்.

*6.* ஆறறிவு உயிர்கள் :

“மக்கள் தாமே ஆறறிவுயிரே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே“
(மரபியல் - *577*)

மக்களே அறிவுடையவர் என்று கூறப்படுபவர். பிற என்றவகையில் தேவர், அகரர், இயக்கர் போன் றோரைக் குறிப்பிடுகின்றார்.

இவற்றை உற்றுநோக்கும் போது ஓர் உண்மை வெளிப்படுகின்றது. தொல்காப்பியர் காலத்திலேயே தாவரவியல், உடற்கூற்றியல், பறவையியல், விலங்கியல் போன்ற அறிவியற் துறைகள் வளர்ச்சி பெற்றிருந்ததை உணர முடிகின்றது.

உயிரியல் கொள்கைக்கு வடிவமைத்த டார்வி னின் கோட்பாட்டை விளக்குவனவாக நமதுபுராண இதிகாச இலக்கியங்கள் விளங்கின. திருமாலின் தசாவ தாரக் கோட்பாட்டை நுனித்து ஆராய்ந்தால் சில உண்மைகளைக் கண்டறிய முடியும். நீரில் வாழும் உயிராக மச்சாவதாரம் காணப்படுகின்றது. நீரிலும் நிலத்திலும் வாழும் தன்மையுடைய உயிராக கூர்ம அவதாரம் காணப்பட்டது. நிலத்தில் மட்டும் வாழ் கின்ற தன்மையுடைய விலங்காக வராக அவதாரம் அமைந்தது. தொடர்ந்து விலங்கும் மனிதனூடாக நரசிம்ம அவதாரமும் அதன் பின்னர் வளர்ச்சியடைந்த முழு மனிதனாக கிருஷ்ண, இராம அவதாரங்கள் காணப் பட்டன. இங்கு கூறப்பட்டவற்றை உற்று நோக்கினால் மனிதனை நெறிப்படுத்தும் தத்துவங்களை மீறிய விஞ்ஞான அதிசயம் பொதிந்து கிடப்பதை அறியலாம்.

மாணிக்க வாசகர் பாடிய திருவாசகத்தில் வரும் சிவபுராணமும் உயிரினங்கள் பற்றிய விபரங்களைத் தருகின்றது.

“புல்லாகிப் பூடாய் புழுவாய் மரமாகி
பல் விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிப்
கல்லாய் மனிதராய் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்
செல்லா நின்ற இத்தாவர சங்கமத்துள்”
(சிவபுராணம் பாடல் வரி *26 - 31*)

என வரும் பாடல் வரிகளில் உயிரினங்களின் பிறப்பு பற்றி கூறப்பட்டுள்ளது. இங்கு கூறப்பட்ட உயிர்களின் தோற்ற முறைமை செய்யுளாதலின் அவை தோன்று முறைமையில் வைத்து உரைகொள்ளற் பாற்று. எல்லா உயிர்ப் பொருள்களும் நிலையியற் பொருளாகிய தாவரமும் இயங்கியற் பொருளாகிய சங்கமும் என இரு கூற்றுள் அடங்கும். தாவர வகையுள் கல், புல், பூண்டு, மரம் என்னும் நான்கும் சங்கம வகையுள் புழு, பாம்பு, பறவை, பல் விருகம், மனிதர், அசுரர், முனிவர் பேய் கணங்கள் தேவர் என்னும் பத்தும் கூறப்பட்டனவாகும்.

தாவர வகையுள் முதற் கண் கொள்ளத்தக்க கல் அல்லது மலை ஒருவகை அறிவு விளக்கமுமின்றிக் கிடந்த உயிர்களின் நிலையேயாகும். அந் நிலையினின்று ஒற்ற தகுதி வந்த போது ஓரறிவு உயிர்களாகிய புல், பூண்டு, மரமாகிய தோற்றத்தையடையும் அவற்றினின்று அறிவு சிறிது சிறிதாக மேற்படும் போது சங்கம வகையுள் அவற்றிற்கேற்ற உடம்பினைப் பெற்று ஈரறிவுயிர்களாகிய புழுக்களையும் மூவறிவுயிர்களாயிய கறையான் எறும்பு களாகியும், நாலறிவுயிர்களாகிய நண்டு தும்பிகளையும் ஐந்தறிவுயிர்களாகிய பாம்பு, பறவை, பல்விருகமாகியும் ஆறறிவுயிர்களாகிய மனதர் அசுரராகியும் ஆறறிவிற்கு மேற்பட்ட முனிவர், பேய் கணங்கள், தேவர்களாகியும் பிறவி எடுக்கும். (மேற்குறிப்பிட்ட கருத்து ஆராய்ச்சி உரையில் குறிப்பிடப்பட்டன)

பூமியில் கிடக்கும் கல் வளர்ச்சியடைவதை காண்கின்றோ மாதலின் அதுவும் ஒரு வகை உயிர்த் தோற்றமுடையது என்பதை டார்வினுக்கு முன்னரே மாணிக்கவாசகர் கூறிவிட்டார். ஆயினும் அது உணர்ச்சி யுடையதன்று.

**மண் தொடர்பான அறிவியல் கருத்துக்கள்**

இன்று நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்ற காலம் “அறிவியல் யுகம்” என்று கூறலாம். அறிவியலை அறிந்தி ராத நம் முன்னோர் இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்னர் மண்ணின் வகைகளையும் எவ்வகையான மண்ணில் எவ்வகையான பயிர் வளரும் என்ற அறிவுடை யோராகக் காணப்பட்டனர். மண்ணின் இயல்பை அறிவதற்கு கருவிகளோ செயன்முறை வடிவம் காணும் வசதிகளோ இல்லாத காலம் என்பதை நினைவிற் கொள்ள வேண்டும்.

உலகில் தாவர, சங்கமம் எனப்படும் உயிரினங் கள் வாழவும் பல்கிப் பெருகவும் மண் முதன்மையானது. இம் மண் புவியின் மேற்பரப்பில் செறிவாக இறுகிக் காணப்படுகின்றது என்பதை “மண்திணி கிடக்கை என சங்க கால இலக்கியங்கள் குறிப்பிட்டுள்ளன. சில உதாரணங்கள் வரமாறு.

“மண் திணி கிடக்கை”
“மண் செழு ஞாலம்”
(பதிற்றுப்பத்து பாடல் *69 12*ம் வரி)
“மண் திணிந்த நிலம்”
(புறநானூறு *2*ம் பாடல் - *1*ம் வரி)

மண்ணின் வகைகளை பழந்தமிழ் இலக்கியங்கள் செம்மண், வண்டல் மண், களர் மண், வெண்மணல், உவர் மணல் என வகைப்படுத்துகின்றன.

**செம்மண் :**

சிவந்த மண் படர்ந்த செம்மண் நிலப்பரப்பு தொடர்பாக அகநானூறு என்ற சங்க கால நூலில்,

"அரக்கத்து அன்ன செந்நியப் பெருவழி"
(பாடல்14 1ம்வரி)
"ஒவத்தன்ன கோபச் செந்நிலம்"
(பாடல் 54 4ம்வரி)
"குறும்புதற் பிடரின் நெடுங்கால் அலரி
செந்நிய மருங்கின் நுண் அயிர் வரிப்ப"
(பாடல் 304 4-5வரி)

குறிப்பிட்டுள்ளன. நுண் அயிர் என்பது நுண் மணல் (துகள்கள்) எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. கோடை காலத்தில் நீரின்றிவரட்சிக் குள்ளாகும் போது செம்மண் துகள்கள் புழுதிகளாக மேற்பரப்பில் படிந்து விடும். விவசாய நடவடிக்கைக்கு மிக உகந்த மண் இது என்பதை நன்கு அறிந்திருந்தனர். சிறுதானியங்கள் பயிரிட உவப்பான மண் என்பதை உணர்ந்தனர். நீர் வளம் குறைந்து இறுகிக் காணப்படுவதால் இம் மண்ணில் நெல் விளையாது இதனை,

புலால னடை முதற் பரவு சேர்ந்திருந்த
புன் புலச் சீனூர் நெல் விளையாதே
வரகுத் தினையும் உள்ளவை எல்லாம்
(புறநானூறு 328 1-3 வரிகள்)

என புறநானூறு குறிப்பிடுகின்றது. இது விவசாய மண்ணியல் சார்ந்த ஓர் அறிவியல் கருத்தாகும்.

**வண்டல் மண் :**

வண்டல் மண் என்பது நீரும் நிழலும் கொண்ட மருத நிலத்தில் காணப்படும் வளமான மண்ணாகும். சிறிய மண் துகள்களைக் கொண்டிருப்பதால் அதிகளவு ஈரப்பதம் உடையது என்பதை நன்கு அறிந்து கொண்டனர். ஆற்று நீராய் கொண்டு வந்த மண் துகள்களே வண்டல் மண் எனப் பெயர் பெற்றது.

"இருங்கனி பரந்தஈர வெண்மணல்" என நெல்நல்வாடை (16ம் வரி) குறிப்பிடுகின்றது.

வண்டல் மண் நீரைத் தேக்கி வைக்கும் இயல்புடையதால் மீண்டும் ஒரு முறை நெல் விதைக்க பயனுள்ளது என்பதை நற்றிணை,

"அரிகால் மாறிய அங்கண்அகல் வயல்
மறுகால் உழுத ஈரச் செறுவின்
வித்தொடு சென்ற வட்டி பற்பல
மீனொடு பெயரும் யாணர் ஊர்"
(பாடல் 210 1-4வரிகள்)

என குறிப்பிடுகின்றது.

**களர் மண் :**

இன்றைய அறிவியலின் படி, "கரையும் உப்புகள் மிகுதியில்லாத பதினைந்து வீத அளவிற்கு மேல் சோடியம் அயனிகள் கொண்ட மண் களர் மண்" எனப்படும். சிறியளவிலான அமிலத் தன்மை கொண்ட மழை குறைவான பகுதிகளில் காணப்படும். இதன் இயல்புகளை நம் பழந்தமிழரின் அறிவியல் சிந்தனை களுக்கு இலக்கிய ஆதாரங்கள் வரமாறு.

"கள்ளி போகிய களரியம் பறந்தவை" என புறநானூறு கூறகின்றது. (பாடல் 245; வரி 3)

களர் மண் படிவுகளில் கரையாத உப்புக்கள் உள்ளனஎன்பதால் மண்ணின் மேற்பரப்பில் வெண்ணிறம் படிந்திருக்கும் என்பதைக் கண்டறிந்தனர். இதனை நற்றிணை என்ற நூல்

"பைங்காய் நிள்ளிடம் ஓரிஇய செங்காய்
கருங்களி ஈந்தின் வெண்புறக் கனரிட
இடுநீறு (பாடல் 126)

என வலியுறுத்துகின்றது.

**வெண் மணல் :**

இம் மண் ஏனைய மண்ணிலிருந்து வேறுபாடு அடையும்தன்மை கொண்டது. மண் துககள்களுக்கிடையே நெருக்கம் குறைவாக இருக்கும். கடற் கரைப் பகுதிகளில் காணப்படும் மணற் பரப்பு நீரைத் தேக்கி வைக்காது உறிஞ்சும் இயல்புடையது. மணற் குன்றுகள் எவ்வாறு உருவாகின்றன என்பதற்கு நற்றினைப் பாடல் ஒன்று,

"அயிர்த்துகள் முகுந்தஆனா ஊதையோடு
எல்லியும் இரவும்எள்ளாது கல் ஏலினக்
கறங்கிசை இனமணி கை புணர்ந்து ஒலிப்ப
நிலவுத் தவழ்மணற்கோடு ஏறிச் செலவர்"
(நற்றிணை 163ம் பாடல் 2-5 வரிகள்)

**இதர அறிவியற் குறிப்புகள் :**

ஒவ்வொரு தாக்கத்திற்கும் சமமானதும் எதிரானதுமான மறுதாக்கம் உண்டென்பது விஞ்ஞானி நியூட்டனின் கருத்து இதனை வள்ளுவர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே குறிப்பிட்டுள்ளார்.

"சினத்தைப் பொருள் என்று கொண்டவன் கேடு
நிலத்தறைந்தான் கை பிழையாதற்று"
(குறள் வெகுளாமை 307)

வெருண்டவருக்கு உரிய தீங்கை குறிப்பிடும் போது வல்லமையை தெரிவித்து பின் அதனால் வருகின்ற கேட்டையும் குறிப்பிடுகின்றார்.

**ஆழிப் பேரலைகள் :**

உலகில் அழிவு என்பது ஒன்று உள்ளது. அதனை அறிவிக்கும் வகையில் இயற்கை இடையிடையே சீற்றம் கொண்டு அழிவைத்தருவதும் உண்டு. அழிந்த உலகம் மீண்டும் தோன்றும் இந்தக் கருத்தினை சங்க இலக்கியங் களில் ஒன்றான பரிபாடல் விரிவாக கூறுகின்றது. முழுமையாக அறிய விரும்பும் வாசகர்கள் பரிபாடல் இரண்டாம் பகுதியை வாசித்து அறியவும்

"தொல்முறை இயற்கையின்மதியொ
... மரபிற்றாக
பசும் பொன்னுலகமும் மண்ணும் பழ்பாட
விசும்பில் ஊழி ஊழ்ஊழ் செல்ல"
(பரிபாடல் 2 வரிகள் 1-4)

தொல்முறை இயற்கை .... ஊழ் ஊழ் செல்ல என்ற அடிகளில் இவ்வுலகத்தின் ஒடுக்க முறை கூறப்பட்டுள்ளது. ஒடுக்க முறையில் தோற்ற முறையும் விளங்கும். பரம் பொருளாகிய மூலப் பொருளில் இருந்து வானம் தோன்றி, வானத்திலிருந்து காற்றுத்தோன்றி காற்றிலிருந்து தீ தோன்றி, தீயிலிருந்து நீர் தோன்றி நீரில் இருந்து நிலம் தோன்றியது.

**பொறியியல் :**

இன்றைய மனித வாழ்க்கையில் நாம் கடைப்பிடிக்கும் தொழில் நுட்ப முறைகள் பலவற்றை பண்டைய தமிழர்கள் அறிந்திருந்தனர். பல வகையான இயந்திரப் பயன்பாடுகள் பற்றி அறியப்பட்டிருந்தன. நப்பசலையார் என்ற புலவர் சோழன் குளமுற்றத்து துஞ்சிய கிள்ளிவளவனைப் புகந்துரைக்கும் போது,

"தூங்கு எயில் எறிந்த நின் ஊங்கணோர் நினைப்பின்" (புறம் 39 பாடல்வரி 6)

"இமயஞ் சூட்டிய ஏமவிற்பொறி" (புறம் 39 பாடல்வரி 15)

என பொறியியற் கருவிகள் குறிப்பிடப்பட்டிருந்தன.

நகர அமைப்பு, கட்டிட பொறியியல் துறையில் மதுரை மாநகரின் அமைப்பை பரிபாடல் பின்வருமாறு கூறுகின்றது.

"மாயோன்கொப்பூழ்மலர்ந்த தாமரை
பூவோடு புரையும் சீரும், பூவின்
இதழகத் தனைய தேருவும், இதழகத்து
அரும் பொருட்டனைத்தே அண்ணல் கோயில்"

மதுரை மாநகரின அமைப்பு தாமரை மலரைப் போலவும் தாமரையின் மையம் மன்னனின் இருப்பிடமாகவும் பிறதெருப் பகுதிகள்இதழ்கள் போலவும் காணப்பட்டன.

**ஒளிவில்லைகள் :**

ஒளிவிலகல் காரமாக ஒளி வில்லைகளைக் கொண்டு (LENS) பொருள்களை உருப்பெருக்கி காண்பதை ஒளியியலில் இயற்பியல் மாணவர் இன்று கற்று வருகின்றனர். கபில தேவனார் சிறு புல்லின் மீது படிந்துள்ள பனித்துளியிலேயே நெடுந்தொலைவில் உள்ள ஒரு பனைமரத்தின் விம்பம் விழுகின்றதை குறிப்பிடுகின்றார்.

"தினையளவு போதாச் சிறு புன்னீர், நீண்ட
பனையளவு காட்டும்படித்தால் - மனையளகு
வள்ளைக்கு உறங்கும் வளநாட வள்ளுவனார்
வெள்ளைக் குறட்பா வரி.

(திருவள்ளுவமாலை கபிலதேவர்)

**கணிதத்துறை:**

எண்ணும் எழுத்தும் கண் எனக் கொண்ட பண்டைத் தமிழர், நூல் தொகுப்புகளின் பெயர்களைக் கூட, எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினெண் மேற்கணக்கு, பதினெண் கீழ்க் கணக்கு எனப் பெயரிட்டனர். ஐங்குறுநூறு, அகநானூறு, புறநானூறு இன்னா நாற்பது இனியவை நாற்பது எனக் குறிப்பிட்டிருந்தனர்.

"இரண்டு முதல் ஒன்பான் இறுதி முன்னர்
வழங்கியல் மாவென் கிளவி தோன்றின்
மகர வளவொடு நிகரலு முரித்தே"

(தொல் - 480)

என தொல்காப்பியம் குற்றியலுகரப் புணர்ச்சி நூற்பாவில் மா என்னும் அளவை கூறப்பட்டுள்ளதால் ஏனைய அளவுகளும் தொல்காப்பியர் காலத்தில் வழங்கிள.

கணக்கு இல்லாத வாழ்வியல் என்பது பொய் யானது. எண் கணிதம் தொடர்பான கருத்தொன்று பரிபாடலில் காணப்படுகின்றது.

"நெய்தலும் குவளையும்ஆம்பலும் சங்கமும்
மைஇல் கமலமும் வெள்ளமும் துதலிய
செய்குறி ஈட்டம்"

(பரிபாடல் 2 -13-15 வரிகள்)

இதில் ஆம்பல் என்பது ஆயிரம்கோடி என்ற பெரும் எண்ணைக் குறிக்கின்றது.

வெள்ளம் என்பது கோடி கோடியைக் குறிக்கின்றது. கமலம் என்பது நூறாயிரம் கோடியைக் குறிக்கின்றது. சங்கம் என்பது பத்து நூறாயிரம் கோடியைக் குறிக்கின்றது. (சங்கநிதி பதுமநிதி என்பது தேவாரம்)

**அணுவியல் அறிவு :**

இன்றைய அறிவியல் உலகம் அணுவைப் பிளக்கவும் சேர்க்வும் முடியும் என்பதை ஆராய்ந்துள்ளது. இவ்வுண்மையைஆயிரம் வருடங்களுக்கு முன்னர்

"அணுவைந் துளைத்து ஏழ்கடலைப் புகட்டி குறுகத் தரித்த குறள்" என்று ஔவையார்திருவள்ளுவ மாலையில் கூறியதனை அறியாதவரே இல்லை. அணுவைத் துளைக்கும் அறிவியலை தமிழ் காப்பியமான கம்பராமயணமும் எடுத்துக் கூறுகின்றது.

"சாணினும் உளன் ஓர் தன்மை அணுவினைச் சதக் கூறிட்ட
கோணினும் உளன்; மாமேருக் குன்றிலும்உளன்"

(இரணியன் வதைப்படலம் ; பாடல் இல 124)

இங்கு அணுவைப் பிளந்து நூறு கூறாக்கி அதில் ஒரு பகுதிக்கு கோண் என்று கம்பன் பெயர் சூட்டுகின்றான்.

பழந்தமிழ்இலக்கியங்கள் சிந்தனைக் கருவூலம் எனக்குறிப்பிடலாம். பழந்தமிழ் இலக்கியங்களை நுண்மான் நுழைபுலத்தோடு ஆராயும் இடத்து அறிவியல் கருத்துக்கள் ஆழப்புதைந்திருந்தன என்பதை அறியக் கூடியதாக இருந்தது.





நூல்:
பின் தொடரும் வலி

ஆசிரியர்:
மு.அநாதரட்சகன்

விலை - 600.00

வெளியீடு - ஜீவநதி

நீ.பி.அருளானந்தம்



# சிக்கிமுக்கிக்கல்

அவர்களுடைய வீடே இப்பொழுது சோக மாகிப் போய்விட்டது. ஏன்...? ஏனென்றால் தங்கள் பாசமான மகனுக்கு இப்படியான ஒரு நிலைமை ஏற்பட்டு விட்டதே என்கிறதில் தாய் தகப்பனாக உள்ள அவர்களுக்கு தொண்டைக் குழியில் சிக்கிய தவிப்பு மாதிரியாகத்தானே எல்லாமே நினைக்கவும் வேதனை யாக இருக்கும்.

ஊருக்குள்ளே இப்பொழுது ஈசல்கள் பறந்தது மாதிரியாகவும் கதைகள் ஒவ்வொரு விதமாக பரவவும் ஆரம்பித்து விட்டன. அடித்த மின்னனிலே முளைத்த காளான்கள் மாதிரியாகத்தான் அவரவர் இஷ்டத்துக்கு அவர்கள் ஒவ்வொருத்தரிடமும் ஒவ்வொரு சோடிப்பு கதைகள். அந்தக் கதையிலே காணும் சுவையும் இன்பத்திலுமாக அவர்களுக்கு நல்ல பொழுதுபோக்கு.

இப்படியான கதைகள் எல்லாம் இவர்கள் குடும்பத்தில் நடந்தேறிய அந்த உண்மையான சம்பவங்கள்தான் என்ன? திருமண வாழ்வில் வாழும் அந்த வாழ்க்கை தோற்றுப் போவதை விட அதிகமான தோல்வி வேறு எதிலுமே அதைப் போன்று ஏற்படுவதே யில்லை தானே. திருமண தம்பதிகள் விஷயத்திலே, இங்கே இந்த பக்கம் தான் சரியானது. அந்தப் பக்கம் தான் மிகவும் தவறானது என்று இடையில் நின்றதாய் தீர்ப்புக் கூறுவதென்பதும் இந்தக் காலத்து சூழ்நிலை யிலே எந்த ஒரு ஞானியால் தான் சரியானதாக முடியும். மனத்தளவில் ஜேம்ஸூம் இவ்வாறாகத்தான் யாவற்றை யும் மனவருத்தத்துடன் தனக்குள்ளேயாக நினைத்துப் பார்த்தார். ஜேம்ஸூக்கு றேமன் நெருங்கிய உறவினர். அவர் இவருக்கு நல்ல ஒரு நண்பரும் என்பது தான் மிகவும் பொருத்தமான ஒன்று. அந்த வகையில் அவர்கள் குடும்பத்துக்கும் இவர்களது குடும்பத்திற்கும் மிகவும் அன்னியோன்னயமான நெருங்கிய அன்பான உறவு தொடர்ந்து எப்போதுமாய் இருந்தது. அடி கொடி வங்கடியாய் இவர்கள் இருவரது குடும்பங்களும் வாழ்வது கொய்யாத்தோட்டம் தான் என்று யாழ்ப்பாணத்திலுள்ள இந்த இடத்தை குறிப்பிட்டதாய் சொல்லுமளவிற்கு வாழ்ந்ததாக வருபவர்கள்தான் இந்த இரண்டு குடும்பத்தவர்களும்.

இவர்கள் இரண்டு குடும்பத்தினர்களுக்கும் பிள்ளைகள் என்று சொல்லப் போனால் ஆண் பெண் என்றதாக, இரண்டு இரண்டு பிள்ளைகள். தங்கள் பொறுப்பிலிருந்து விடுதலை செய்துவிட்டது போல ஜேம்ஸ் குடும்பத்தினர், சரியான வயது வர தங்கள் இரண்டு பிள்ளைகளுக்கும் வேளைக்கே விவாகம் செய்து கொடுத்துவிட்டார்கள்.

அவர்களது இரு பிள்ளைகளும் இப்போது வெளிநாட்டிலே தான் இருந்ததாய் வாசம் பண்ணு கிறார்கள். பிள்ளைகள் வெளிநாட்டில் இருக்கிறார்களே என்று ஜேம்ஸூம் மனைவியும் இதனால் பூரித்துப் போய் விடவில்லை. அதற்கு மாறாக பெரிய பெரிய பயங்கள் தான் இவர்கள் இருவரையும் போட்டு இப்பொழுது ஆட்டத் தொடங்கியதாக வந்து விட்டது. காரணம் றேமன் குடும்பத்தில் நடந்த அந்த சம்பவம் ஜேம்ஸையும் அவர் மனைவியின் மனதையும் பாதித்ததான நிலைமைக்கே கொண்டு வந்ததாகவே வைத்து விட்டது. றேமனின் மகள் திருமணம் செய்தாளே! அந்தக்குடும்பம் பிரச்சனையில்லை. அவர் நல்ல கணவனைப் பெற்றதால் இனிதாக வாழ்வு நல்ல முறையில் நடக்கிறது. தன் மகளின் திருமண வாழ்க்கையை றேமனும் சரி அவரது மனையும் சரி ஒரு அழகு உற்சாகத்துடன் தான் ஜேம்ஸிற்கும் மனைவிக்கும் கூறி மகிழ்வார்கள்.

ஆனால் மகனின் திருமண வாழ்வுக்குள் நடந்த அந்த சம்பவத்தை அப்படி என்ன நடந்ததென்று அவர் சொல்லும் போது, அதைக் கேட்ட அந்த நாளே இரவில் ஜேம்ஸூம் மனைவியும் படுக்கவென்று சென்ற பின்பு அந்த இரவே தூங்காமல் தூக்கத்தை தொலைத்ததாகத் தான் நிம்மதியற்றதாக இருந்தார்கள். ஈழயுத்தம் நடை

பெற்றுக் கொண்டிருந்த காலத்திலே ஜேம்ஸினதும் றேமனினதும் குடும்பத்தில் அவர்களுடைய பிள்ளைகள் வயது குறைந்த சிறு பிள்ளைகளாகத்தான் இருந்தார்கள். உறங்கிக் கொண்டிருந்த தமிழ் இனத்தவர்களுக்கு, ஒரு யுத்தம் வாழ்வை பிறப்பிக்கப்பட வேண்டியதான சூழ் நிலை, அந்த யுத்தத்தின் கணங்களில் சுயநல ஆசையின் சம்பந்தம் எல்லாம் உடைந்து ஒற்றுமையான நிலை யிலே அந்தக் கஷ்டத்திலும் ஒரு அழகு உற்சாகத்துடன் தான் தமிழர்கள் என்ற உணர்ச்சியுடன் தீவிரமாக இருந்தார்கள்.

இந்த காலம் மின்சாரம் தொலைந்து விட்டது, சங்கீதம் வானொலியில் பாடிக்கொண்டிருக்க கேட்டால் கூட காணுமே அதுவும் கூட பெரிதாக அப்பொழுது இல்லை. இந்த நாட்களிலே றேமன் தன் மனைவி பிள்ளைகளோடு ஒரு லாந்தர் விளக்கை கையில் தூக்கி பிடித்த சகிதமாக ஜேம்ஸ் வீட்டுக்கு பொழுது பட்ட பின்பு வந்து விடுவார். அங்கே ஜேம்ஸூம் றேமனும் சீட்டாட்ட விளையாட்டில் சில மணி நேரத்தை கழிப்பார்கள். யோசித்து வெற்றியை தேர்ந் தெடுப்பதற்கான விளையாட்டுத்தானே சீட்டாட்டம் என்கிற விளையாட்டு. அவர்கள் இருவரும் இப்படி சீட்டாட்டத்தில் பொழுதை கழிக்க அவர்களது மனைவியர்கள் இருவரும் அன்றைய சூழ்நிலையிலே காதுகளில் வழி வருகிற செய்திகளாக வெளிப்பட்டவை யாவற்றையும் கதைத்தபடி நேரத்தை செலவழிப்பார்கள் பிள்ளைகளுக்கு நேரத்தை போக்க ஒன்றுதான் வழி அவர்கள் தங்கள் வயதுக்கேற்ற சின்னப்பிள்ளைகள் விளையாடும் விளையாட்டுக்களை விளையாடவென்று தொடங்கிவிடுவார்கள்.

றேமனுக்கு மூத்த பிள்ளை ஆண் பிள்ளை! வீட்டுப் பெயர் அவனுக்கு ரஞ்சன்! அவன் இந்த நேரம் பிள்ளைகளோடு சேர்ந்து விளையாட மாட்டான். அவனுக்கு தகப்பனும் அங்கிளும் சீட்டு விளையாடும் போது அதைப் பார்த்து ரசிப்பதில் தான் இன்பம். தன் புத்தியை உபயோகித்து யோசனை செய்வது போல் பெருவிரலை வாயில் வைத்து சூப்பிக் கொண்டு சீட்டாட்டத்தை பார்த்து அவன் ரசித்துக் கொண்டிருப் பான். றேமன் சீட்டாட்டத்தை கவனிப்பதோடு தன் மகனையும் இந்நேரம் கவனிப்பார்.

"தம்பி... என்ன இது விரல் சூப்பாத... கைய எடு வாயால சீக்"

என்று தகப்பன் இப்படி பேசினாலும் அவன் வாயில் வைத்து சூப்புகின்ற விரலை வெளியே எடுக்கமாட்டன். அந்த செயலில் அவனுக்கு பலன் அதிகரித்திருப்பது போல தகப்பனை பார்த்த படி தன் வைராக்கியத்தோடு தான் அவன் இருப்பான்.

ஜேம்ஸூக்கு சீட்டாட்டம் இப்படி வேறு கவனத்தில் திசை திரும்பி சுவாரசியமற்றுப் போவதற்கு றேமனையும் விட்டு விட மனமில்லை. எனவே கையிலுள்ள சீட்டிலேயே கவனத்தை வைத்தபடி.

"சரி சரி அதவிடும் றேமன்... அவன் கை சூப்பி பழகீட்டான்... விரல் சூப்பிற பிள்ளைக்கு மூளை விவேகம் கூடவப்பா..."

அவர் சிக்மன் பிராய்ட் மாதிரி தத்துவம் ஒன்றையும் சொல்லுவார்.

"இவனுக்கு ஜேம்ஸ் வேப்பெண்ணை விரலிலே பிரட்டியும் பயனில்லை. அப்படி இருந்தும் விரல் சூப்பிறத விட மாட்டான் என்டுறான். அடி போட்டா லும் அதையே தான் செய்யிறான்...."

"சரி சரி விடும் விடும்...." ஆனாலும் பல் மிதக்காம விட்டா சரிதான்."

"அதுவும் பெரிய பிரச்சனை தானே... எண்டா லும் இவனுக்கு முரட்டு சுபாவமும் அல்லோ இருக்குது."

"நீரும் அப்படித் தானே இருக்கிறீர் உம்முடைய மகனும் அப்படித்தானே உம்முடைய குணத்தோட இருப்பான்!"

என்று ஜேம்ஸ் அப்படி சொன்னதற்கு பதில் றேமனிடமிருந்து கிடைக்கவில்லை. அவர் சிட்டாட்டத் துள்ளே சரணாகதியடைந்து விட்டார்.

இப்படிப்பட்ட இந்த சூழ்நிலையோடு பல வருடங்கள் கடந்து விட்டன. போர்ச் சூழலுக்குள் அகப் பட்டு அல்லல் பட்டு அவஸ்தைப்பட்டு வாழ்பவர்களது மனத்துன்பத்தை புகைப்படம் எடுத்து அடையாளம் காட்டுவதென்பது முடியாததொன்றல்லவா! கஸ்டத்தின் அனுபவம் அவர்கள் எல்லோரையும் வேறொருவனாகத் தான் மாற்றி இருக்கிறது. போர்ச் சூழலென்றாலும் வயதும் பிள்ளைகளின் உடலைப் பொறுத்த அளவில் அது தன்னை முற்றிலுமாக புதுப்பித்துக் கொண்டு தானே இருக்கும்.

ரஞ்சனும் காளை வயசுக்கு வந்து விட்டான். விரல் சூப்பும் சக்தி அவனுக்கு இப்போது தேவைப்பட வில்லை.

கல்வியின் சிறந்த திறனைப் பெற்று விட்டதால் கனடா நாட்டிலே நல்ல உத்தியோகமும் அவனுக்குக் கிடைத்து விட்டது. முட்களே இல்லாத மலர்கள் மலர்ந்து கொண்டிருப்பதைப் போன்ற மகிழ்ச்சியான ஒரு வாலிப வாழ்க்கை இப்போது அவனுக்கு.

றேமன் தம்பதியினர் ரஞ்சனுக்கான திருமண பேச்சை ஆரம்பித்தர்கள். திருமணம் செய்து வைப்ப தென்பது சுலபமான ஒரு காரியமா என்ன! எதிர்த்துருவங் களில் உள்ளது போன்றுள்ள வாழ்க்கை நிலையில் உள்ள ஒரு ஆணையும் பெண்ணையும் திருமண வாழ்க்கைக்குள் இணைப்பது என்பது சிக்கலான ஒரு காரியம் தானே! இதனால் மிக அக்கறையோடு விசாரித்துப் பார்த்து நல்ல மதிப்பும் மரியாதையுமான ஒரு குடும்பத்தில் உள்ள பெண் பிள்ளையைத்தான் ரஞ்சனுக்கு றேமன் தம்பியினர் பின்பு திருமணம் செய்து வைத்தார்கள். அந்த மணப்பெண்ணின் தாய் தகப்பன் யாழ்ப்பாணம் தான் என்றாலும் அவர்களது பெண் பிள்ளை கனடாவில் தான் பிறந்து வளர்ந்தவளாக இருந்தாள். மேலைநாட்டு நாகரீகமெல்லாம் தீட்டு என்று நம்மவர்களால் பேசப் பட்ட அந்தக்காலம் மாதிரியா இந்தக்காலம்! அமைதி யும் நிம்மதியும் மிக்க இடம் வெளிநாடு தான் என்று அங்கே எம்மவர்களெல்லாம் இப்போது இங்கிருந்து சென்று வாழத்துடிப்பதான மாறுபட்ட காலமல்லவா இந்தக்காலம்.

றேமன் தம்பதியினரும் தங்கள் மருமகளை மிக உயர்வாக "எங்களுடைய மகன் கனடாவில் பிறந்து

வளர்ந்த பிள்ளையைத்தான் கலியாணம் செய்திருக் கிறார்" என்று அதை மதிப்பாகவும் பலருக்கு சொல்லி பெருமைப்பட்டும் வந்தார்கள்.

ரஞ்சனுக்கு திருமணமாகி இப்போது ஒரு மாதம் கடந்தாகி விட்டது. தாய் தகப்பனிடம் வந்து அவர்களோடு சில நாட்கள் இருந்து அவர்களது ஆசிர்வாதத்தையும் பெறுவதோடு உறவினர்களையும் சென்று சந்திக்க வேண்டும் என்ற விருப்பத்தோடு ரஞ்சன் தன் மனைவியையும் கூட்டிக் கொண்டு இலங்கைக்கு வந்தான்.

மனைவியோடு ஊருக்கு வந்த சுகத்தோடு ரஞ்சனுக்கு தாய் தகப்பனையும் கண்டு கொண்டதில் சந்தோஷமாயிருந்தது. பின்பு ஜேம்ஸ் குடும்பம் புது மணத்தம்பதிகளை தங்கள் வீட்டுக்கு விருந்துக்கு வரவேண்டும் என்று அழைத்ததின் பேரில் மனைவியை யும் கூட்டிக் கொண்டு ரஞ்சன் அங்கு போனான்.

கனடாவில் பிறந்திருந்தாலும் பிறநாட்டு நாகரீக வேலிக்குள் இல்லாத மாதிரியாகத்தான் ரஞ்சனின் மனைவி, உடலின் மூச்சுப்போல சொந்தங் களின் அன்பு தேவை என்று காட்டக் கூடிய அளவிற்கு றேமனிடத்தும் அவர் மனைவியிடத்தும் அன்பாக அளவளாவினாள். அவளது இந்த குணம் றேமனுக்கும் அவரது மனைவிக்கும் நன்றாக பிடித்துவிட்டது.

"தம்பி ரஞ்சன் உமக்கு அருமையான அழகும் நல்ல குணவதியான பொம்பிளையும் கிடைச்சிருக்கு... நீர் அதிஸ்டசாலியப்பா"

என்று றேமன், றஞ்சனைப்பார்த்து சொன்னார்.

"ஏன் அங்கிள் எனக்கும் கூட நல்ல குணமான மாப்பிளையும் கிடைச்சிருக்குத்தானே ... நானும் கூட அதிஸ்ட சாலி தானே?"

என்று றேமன் சொல்லவும் அவரை பார்த்து ரஞ்சனின் மனைவியும் சொல்லிவிட்டு சிரித்தாள்.

"நீர் சொல்லுறது சரிதானம்மா... ஆனா நான் ஒரு கதையை எல்லாத்துக்கும் ஒத்துப்போகக் கூடியதா சொல்லுவன்.. அது என்னென்டா பிள்ளை.. உமக்கும் எங்கட ரஞ்சன் மாதிரி ஒரு நல்ல பொடியன் மாப் பிள்ளையா கிடைக்காதம்மா... அதே மாதிரி ரஞ்சனுக்கும் கூட உம்மை மாதிரி இப்படி ஒரு மாதிரி நல்ல பொம்பிளை அவருக்கும் எங்கயும் கிடைக்கா தம்மா அந்தளவுக்கு இரண்டு பேருமே நல்ல பாக்கியம் செய்தனியள்தான்" என்று றேமனின் மனைவி முழுமை யான ஆனந்தத்துடன் இப்படி சொன்னாள். புது மாப்பிள்ளை பெண்ணுக்கு றேமனின் வீட்டில் தடல் புடலாக விருந்துபசாரம் நடந்தது. அவர்கள் இருவரும் சாப்பிடுவதற்கு முன் றேமன் அவர்களை பார்த்து. "கிறேப் வைன் குடிப்பீங்களா?" என்று கேட்டார். ரஞ்சன் உடனே தன் மனைவியை பார்த்தான். இது சாதாரணமானது தான். அவள் உதட்டில் சிறு புன்னகை தவழ தலையாட்டினாள். வைன் பரிமாறப்பட்டது. உணவு உட்கொண்டு முடித்து மாப்பிள்ளை பெண் பிள்ளை தங்கள் வீட்டுக்கு போய் விட்டார்கள். சில நாள் இலங்கையில் தங்கி இருந்து விட்டு பின்பு அவர்கள் இருவரும் கனடாவிற்கு சென்று விட்டார்கள். அங்கு போன பின்பு அச்சாணியற்று சரிந்த வண்டில் மாதிரி அவர்கள் குடும்பத்திலே என்ன பிரச்சனை வந்தது. அங்கு நடந்த சம்பவங்களை றேமன் தன் சினேகனான ஜேம்ஸுக்கு வேதனையில் மூழ்கி மடிந்ததான சோகத் துடன் தான் சொன்னார்.

"பார்த்தால் என்ர மகனிலும் குற்றம் தான் ஜேம்ஸ்" கதையை ஆரம்பித்தார் றேமன்.

"ச்ச.., அப்படியில்லை... ரஞ்சன் நல்ல குணமான பெடியன்.. எந்த வித கெட்ட பழக்கமும் அவனுக்கு இல்லையே"

"இருந்தாலும் அவனிட்ட முரட்டு சுபாவம் இருக்குதே ஜேம்ஸ். அந்த சுபாவத்தை அவன் தன்ர மனக்கட்டுப்பாட்டில கொண்டும் வரல்லையே. இதால தானே அந்தப் பிரச்சனையே பிறகு ஏற்பட்டுது."

"பிரச்சனை பிரச்சனை என்கிறீரே அப்படியா என்ன பிரச்சனையப்பா நடந்தது?" ஜேம்ஸ் சற்று பதற்றப் பட்டார்.

"ஜேம்ஸ் என்ர மகனின்ட குடும்பத்தில் நடந்த அந்த பிரச்சனையை, உம்மட்ட தனிய நான் தான் கதைக்க முடியும்! அப்படியில்லாமல் என்ர மனுசியோடயும் அம்மட மனுசியோடயுமா ரெண்டு குடும்பத்தவயளும் ஒன்டா இருந்து சரி பிழைகளை கதைக்கக் கூடியதா அங்க அவயளுக்குள்ளயா நடந்த அந்த பிரச்சனைஎண்டுறது ஒரு வெக்கக்கேடான விஷயமாகத்தான் இருக்குது ஜேம்ஸ்"

"வெக்கக் கேடா! என்ன அப்படி ஒரு வெக்கக் கேடு! என்ன கதை நீர் என்னேபமயா கதைக்கிறீர்?"

"ஜேம்ஸ் அங்க என்ர மகனின்ட குடும்பத்துக் குள்ள நடந்த அந்த சம்பவத்த அவன் எனக்குச் சொல்லக் கேட்டு உண்மையில என்ர மனம் செத்தது மாதிரியாப் போயிட்டுது. ஆனாலும் என்ர மனதுக்கு உயிர் கொடுத் தது மாதிரி கொஞ்சம் தேற்றரவு பெறவேண்டுமென்று தான் நான் அதையெல்லாம் உமக்கு சொல்கிறேன்.. ஜேம்ஸ்... ரஞ்சனின் மனைவி! என் மருமகள் இருக்கிறாளேயப்பா அவள், நானும் நீரும் நினைக்கிறது போல இல்லையப்பா இல்லை இல்லை!"

"ஏன்? ஏனப்பா அப்படியா சொல்லுறீர் நீர்? "

என்று இந்த ஏன் என்ற கேள்விக்கு மேல் ஏதும் ஒன்றை கேக்கவே சிரமமாயிருந்தது ஜேம்ஸுக்கு.

"ஜேம்ஸ் ஒன்று சொல்லவே! பிறர் மதிக்க வாழுறது தான் வாழ்க்கை! எண்டு நாங்கள் நினைக்கிறோ மப்பா! ஆனால் அப்படி வாழுறதை அடிமைத்தனம் என்டெல்லே அங்கே பிறநாட்டுக்குப் போனதுக்குப் பிறகு அங்குள்ள நம்மட ஆக்களும் நினைக்கிதுகள். என்ர மருமகளும் அந்த விதத்திலயா தானே நடந்ததுக்குப் பிறகு இருக்கிறாள்"

"இந்தக்கதையக் கேட்க எனக்கு குழப்பமா இருக்கிது றேமன்"

"நான் ரஞ்சன் தகப்பன் எணடுற அளவில உம்மை விட சரியா நான் குழம்பினன் ஜேம்ஸ்.. அவயள் ரெண்டுபேருக்குள்ளேயும் இப்படி தானப்பா பிரச்சனை என்டுறது வந்தது.. என்ர மகன் முரடன் என்டுறது உமக்குத் தெரியும் தானே"

"ரஞ்சன் பார்த்தா முரட்டு சுபாவம் உள்ளவன் தான் என்றாலும் அவன் நல்ல இரக்கம் உள்ளவன் அவன்,

அன்பு உள்ளவன் அவன், மன்னிக்கிற சுபாவம் உள்ளவன் அவன் , நன்றியப் பராட்டுறவன், எல்லாத்துக்கும் மேலா மன்னிக்கிற சுபாவம் கொண்ட நல்ல பிள்ளையல்லே அவன்"

ஜேம்ஸ் ரஞ்சனுக்கு புகலாரம் சூட்டுவது போல சொன்னார்.

"ஜேம்ஸ், நீர் அவ்வளவா நல்லா எல்லாம் என்ர மகனைப்பற்றி அறிஞ்சிருக்கிறீர்.. ஆனால் அவள் அதை உணர்ந்ததா இல்லையே"

என்று ஜேம்ஸ் சொன்ன புகழாரத்துக்கு தானும் முட்டுக் கொடுப்பது போல மகனை விட்டு மருமகளை பற்றி குறை கூறுவது போல சொன்னார் றோமன்.

"அப்படியென்றால்.."

ஒரு நெம்பு நெம்பியது போல விசயத்தை அறிய அவர் கேட்டார்

"அவன் ஒரு நாள் அவளிண்ட மேலில கை வைச்சிட்டான். ஒரே சும்மா ஒரு அடி பிழை எண்டு கண் கோபத்தில அவளை ஒரு அடிச்சுப் போட்டான்"

"பிறகு"

"அதன் காரணமா அவள் என்ன பிறகு செய்தாள் தெரியுமா?"

"என்ன செய்தாள்"

"அதையப்பா சொல்லவே எனக்கு வெறுப்பா இருக்கிது. சொல்லுறதுக்கு எனக்கு வெட்கமாகவும் இருக்கிது. ஜேம்ஸ்"

றேமன் இப்படி சொல்ல ஜேம்ஸுக்கு மனம் "திக் திக்" என்று அடித்துக் கொண்டது. ஏதோ சூனியத்துக்குள் இறங்குவதான மன நிலைமையோடு.

"சரி அப்படி அவள் என்ன தான் செய்தாள் எண்டு சொல்லுமன்!" என்று முட்டுக் குடுத்தாற் போல் முதுகை நிமிர்த்தி வைத்தபடி கேட்டார்.

"அவள் றேமன், ரஞ்சனோடு கோவிச்சுக் கொண்டு தன்ரைய பழைய காதலனோடயா அவன்ர வீட்டிலே எல்லே போய் பிறகா இருந்திட்டாளப்பர்"

"கோதாரி அப்படியே செய்தாள்! அந்தப் பிள்ளை அப்படி செய்தவளேயப்பா?"

"அங்க எல்லாம் சட்டமும் அப்படித்தானே சாதகமா இருக்கெண்டுறன்"

"அதுக்குப்போய் இங்கத்தைய எங்கட ஒரு தமிழ் பொம்பிள அப்பிடியா இப்படி ஒரு கோவலம் செய்யிறது? அட அவன் ரஞ்சன் எங்கட பிள்ளை அவன் சொல்லப் போனா பாவமெல்லேயப்பா அவன்"

"எங்கட பிள்ளைய மாத்திரம் நாங்கள் அப்பிடி கதைக்கேலுமே அவள் வந்து அங்கயும் பிறந்த பிள்ளை எல்லே"

"எனக்கு தலை சுத்துதப்பா... பிறகு என்னப்பா அங்க எல்ல நடந்ததா ஆச்சுது?"

"இந்தப் பிரச்சனை பிறகு அங்க இருக்கிற அவயள் கோயில் பூசைக்கு எண்டு போற அந்த கோயில் பாதர் வரைக்குமா கதை போயிற்றுது"

"பிறகு"

"அந்த பிள்ளையின்ர தாய் தகப்பனும் பாதரிட்டயா போய் எல்லா விசயத்தையும் சொல்லி நீங்க தான் பாதர் பிறிஞ்ச இந்தக் குடும்பத்தை ஒன்டா சேர்த்து வைக்கவேணும் எண்டு மன்றாட்டமாய் சொல்ல பிறகு அவர் பாதர் போய் ரஞ்சனிட்டயும் கதைச்சு, அவளையும் கோயிலுக்கு வரச்சொல்ல அவளிட்டயுமா நல்லவிதமா எல்லாம் கதைச்சு, பிறகு இரண்டு பேரையும் இப்ப ஒண்டா சேர்த்து, பழையபடி குடும்பமா சீவிக்க வெண்டதா வழி பண்ணியிருக்கிறார்"

"அப்பா.. என்னப்பா.. இப்பிடியெல்லாம் குடும்பங்கள் வழிய இப்பயா நடக்குது ஆண்டவனே! இந்த விஷயத்தை கேள்விப்படவே எனக்கு மனம் கொதிக்குதப்பா"

என்று ஜேம்ஸ் பளிச்சென்று தன் கண்களை முழித்தபடி யோசனை மிகுதியோடு இப்படி சொன்னார்.

"ஜேம்ஸ் உங்களுக்கே எங்கட கதையை கேட்க இப்படி மனம் கொதிச்சா... எங்களுக்கு எப்பிடி எப்பிடியா இதெல்லாம் கேள்விப்பட மனம் அக்கினியா வேக்காட்டில வெந்து எரிஞ்சு பத்தி எரியும்.. எல்லாம் நாங்க பெரிசா கோட்டை கட்டியதா வைச்சிருந்த நினைப்பெல்லாம் மண்ணாங்கட்டி மேல மழை பெஞ்சது மாதிரி கரைஞ்சு போச்சப்பா கரைஞ்சதாப் போச்சு"

என்று இவற்றை சொன்னதோடு இருந்த இருக்கையிலிருந்து றேமன் எழுந்து நின்றார். பின்பு சற்று தொலைவில் ஜேம்ஸின் மனைவியும் தன் மனைவியும் இருந்து கதைத்துக் கொண்டிருந்த அந்த இடத்தை பார்த்தார். தன்னுடைய மனைவியும் அங்கே இருந்தபடி, தான் இப்போது ஜேம்ஸுடன் கதைத்த கதையைத்தான் அங்கும் அவள் ஜேம்ஸின் மனைவியுடனும் கதைத்திருப் பாள் என்று அவருக்கும் நன்றாக அது விஷயம் விளங்கியது.

றேமன் மனைவியைப் பார்த்தபடி "இனி நாங்கள் வெளிக்கிடுவோம்" என்ற சமிக்கையை காட்டுவது போல அவளை நோக்கி தலையை ஆட்டி காண்பித்தார். அதை புரிந்து கொண்டு றேமனின் மனைவியும் உடனே எழுந்து நின்றபடி புறப்பட தயாராகி விட்டாள்.

இந்த உரையாடலின் பின்பு வற்றிப் போன திரியில் ஊறிப்போன மிச்ச எண்ணெயும் எரிந்து முடிகின்ற மாதிரியான ஒரு சூனியத்தில் இருக்கின்ற மன நிலையாக இரு குடும்பத்தவர்களின் மன நிலைமையும் சலித்தான நிலைமையில் இருந்தன. றேமன் குடும்பத் தினர் இதற்குப் பிறகு ஜேம்ஸின் குடும்பத்தவர்களிடம், வீட்டுக்கு செல்வதாக சொல்லிக் கொண்டு, அங்கிருந்து தங்கள் வீட்டுக்குப் போக புறப்பட்டு போய் விட்டார்கள்.

ஜேம்ஸுக்கு அன்றிரவு படுக்கைக்கு சென்றும் றேமனின் குடும்பத்துக் கவலை அவரை நித்திரைக்கான நிலைமைக்கு போக விடவில்லை. அவர் மனைவியும் அப்படியான நிலைமையிலேயே படுக்கையில் கிடந் தாள். நடு நிசியில் ஊரே உறங்கிப் போய்விட்டது. ஆனால் இவர்களோ நித்திரையின்றி திண்டாடிக் கொண்டிருந்தார்கள்.

இப்படியே சில மாதங்கள் கடந்தன. காலம் கடக்க எந்தக் கவலையும் மனதில் நின்ற இடத்தில் நிற்கவா போகிறது. அது கடந்து போகும் தானே. அப்படியான முறையில் தான் இரு குடும்பத்தவர்களும்

மனம் தேற்றரவாகி சீவியத்தை போக்காட்ட தொடங்கிவிட்டார்கள்.

துன்பத்தைப் புரட்டி போட்டால் இன்பம் என்கிற பழைய சீவியமாகிவிட்டது இரு குடும்பத்தவர் களுக்கும்.

ஜேம்ஸின் மனைவி அன்று உறவினர் ஒருவரின் வீட்டுக்கு அவர்களை போய் சந்தித்து வரவேண்டு மென்று தனியே தான் மட்டும் புறப்பட்டு போய் விட்டு வந்தாள். வெளியே இன்று போய்விட்டு வந்த சுகம் அவள் முகத்தில் இருந்தது.

ஜேம்ஸ் தன் மனைவி வீட்டுக்குள் வந்த நேரம் கதைப்புத்தகம் ஒன்றை கையில் வைத்தபடி வாசித்துக் கொண்டு அதிலே மூழ்கியவாறு இருந்தார். ஜேம்ஸின் மனைவி வீட்டுக்கு வந்ததும் உடைமாற்றிக் கொண்டு வந்து கணவரின் அருகிலே ஒரு கதிரையில் இருந்தாள். கணவர் புத்தகம் வாசிக்கும் நேரம் அதிலிருந்து விடுபட மாட்டார் என்பது அவளுக்கு தெரியும். என்றாலும் அவள், அவர் காதில் விஷயத்தை போடுவோம் என்ற அளவில் பிறகு கதைக்க ஆரம்பித்தாள்.

தன் கதையிலே முன்னம் அவள் தான் சென்ற இடத்தில் அங்கு நடந்தவை கதைத்தவற்றையெல்லாம் கண்ணாடி பிடித்து காண்பிப்பது போல சொல்ல தொடங்கினாள்.

ஜேம்ஸூம் புத்தகம் படித்துக் கொண்டிருப் பதை நிறுத்தாது அந்த வாசிப்பை தொடர்ந்ததாய் மனைவி கதையையும் காதில் போட்ட அளவாய் "ம்" போட்டுக் கொண்டிருந்தார். ஜேம்ஸின் மனைவி பாதிக்கதை முடிந்து தான் பஸ்ஸில் பயணித்து வந்த கதையை ஆரம்பித்தாள்.

"நான் பஸ்ஸில வரேக்கப்பா"

"ம்"

"ஒரு பெடியன் நான் இருந்த என்ரை சீற்றில எனக்கு அருகா இருந்தான்"

"ம்"

"அவன் என்னப்பார்த்து என்ன சொன்னான் தெரியுமா?" அவள் சொல்ல அதற்கு மாத்திரம்.

"என்னவாம்"

என்று அவர் "ம்" சொல்வதை தவிர்த்து விட்டு கேட்டார். ஆனாலும் இப்பொழுதும் ஜேம்ஸூக்கு வாசிப்பதில் கவனம் இருந்தது.

"நான் அப்பா இந்த வயசிலயும் நல்ல இளமையா இருக்கிறனாம் அப்பா?"

அவள் இதை சொல்லிவிட்டு சந்தோஷத்தில் சிரித்தாள். அவரும் புத்தகத்தை படித்துக் கொண்டே கொஞ்சம் போல சிரிப்பை வெளிக்காட்டினார். இதற்கு போய் ஏதுவும் சொல்லி ஏன் இவளின் சின்ன சந்தோசத்தை கெடுப்பான் என்று அவர் தனக்குள் புத்தகப் படித்ததோடு யோசித்தும் கொண்டார்.

"புத்தகம் படிச்சுக் கொண்டிருந்தா இவருக்கு டிசபல்லுறது ஒண்டுமே பிறகு காதில ஒண்டும் விழாது"

என்று சொல்லிவிட்டு பூவாய் இருக்கிற யோசனையோடு ஜேம்ஸின் மனைவி அந்த இருக்கையி லிருந்து எழுந்து சமையலறைக்கு போய்விட்டாள்.

---

# கந்தர்மடம் அ. அஜந்தனின் 2 கவிதைகள்

## வேட்டைக் கழுகுகள்

நீண்ட நெடும் பாதையோரங்களில்
சிந்திக் கிடந்த நத்தைக் கூடுகள்
உயிர்ப்பற்று உடைந்தும் புதைந்தும்
மண்ணுக்கு உரமாகிப் போயின

தொலைந்த குஞ்சுகளின் எச்சங்களாய்
உதிர்ந்த அதன் இறகினை
வாயில் கவ்வியபடி அலைந்த
தாய்ப் பறவைகள் தன்னையிழந்துவிட்டன

துணையிழந்த வானம்பாடிகள்
நிறமிழந்து வெளுத்துப்போய்
மண்ணுக்கும் விண்ணுக்குமாய்
விழுந்து எழுகின்றது

கழுகுகளோ தன் குஞ்சுகளோடு
வானுயர் மரக்கிளைகளில்
வாயில் நத்தையின் உடற் தசைகளோடும்
குஞ்சுகளின் குருதிக் குவளையுடனும்
வானவில்லை ரசித்தபடி.

## மகிழ்வதின் எல்லை எதுவெனக் காண்மீர்

மகிழ்வெது வெனும்நிலை தெளிவுறா வண்ணம்
புறமகிழ்ந் தாடுதல் புனிதமென்றாகா
தேவையும் விருப்பும் வேறென் றுணரும்
தேளிநிலை காண்ப தறிவாம்


பணமும் பதவியும் யாம் கொண்ட பண்பினை
நெடுதூரம் துரத்தும் சமூக இடுக்குகளில்
துணிவும் பணிவும் சமநிலை காண்பின்
நலமும் வளமும் வரமெனச் சேரும்

குலமும் பலமும் குறையெனக் கூறி
குடியில் தாமே உயர்வெனக் கொள்ளும்
பண்பிலார் பலர் புண்படப் பரவி வாழும்
மானிடக் கூட்டமிந்தப் பாருக்கே பாரமாவர்

வ.ந.கிரிதரன்

# குடிவரவாளன்






## அத்தியாயம் நான்கு:

## மதகுருவின் துணிவு!

அந்தக் காலை நேரத்திலும் கடலில் சில ஐரோப்பிய உல்லாசப் பயணிகள் சிலர் கடலில் குளித்துக் கொண்டிருந்தனர். "விதேசிகள் ஆனந்த மாகக் குளித்துக் கொண்டிருக்கின்றார்கள். இங்கு நான் சுதேசியோ உயிரைத் தப்ப வைப்பதற்காக ஓடிக் கொண்டிருக்கின்றேன். அவர்களுக்கு இருக்கின்ற உரிமைகள் கூட எனக்கில்லையே" இவ்விதமாக அந்தக் கணத்திலும் இளங்கோவின் சிந்தையிலொரு எண்ணம் கோடு கிழித்தது. கொழும்பிலிருந்து காலிக்குச் செல்லும் புகையிரதக் கடவைகள் வழியாகக் குண்டர் களின் நடமாட்டம் சிறிது அதிகமாகவிருந்ததை அவ தானித்தவன் கடற்கரை மணலினுள் இறங்கியவனாகக் கடலையும், அதன் வனப்பையும், அங்கு நீராடிக் கொண்டிருந்தவர்களையும் பார்த்தவனாக இராம கிருஷ்ண மடமிருந்த திக்கை நோக்கி நடந்தான். அடிக் கொருதரம் திரும்பி நண்பன் பின்தொடர்வதை உறுதி செய்து கொண்டான். நண்பனைப் பொறுத்தவரையில் பார்வைக்குக் கிராமத்துச் சிங்கள இளைஞனைப் போன்று சிறிது வெண்ணிறமான தோற்றத்தில் சுருண்ட தலைமயிருடனிருந்தான். சிங்களம் வேறு மிகவும் இயல்பாகக் கதைக்குமாற்றல் பெற்றவன். தப்பி விடுவான். இவனைப் பொறுத்தவரையில் நிலமை வேறு. "ஒயாகே நம மொக்கத?", "டிக்கக் டிக்கக் தன்னவா" போன்ற ஒரு சில ஆரம்பச் சிங்கள வார்த்தைகளைத் தவிர சுட்டுப் போட்டாலும் இவனுக்குச் சிங்களம் வராது. ஒரு முறை இவனது பல்கலைக் கழக வாழ்க்கையில் நிகழ்ந்ததொரு சம்பவம் இவனது சிங்கள மேதமை யினை வெளிப்படுத்தவல்லது. ஒருமுறை இவனை பகிடிவதை செய்த மாணவர்கள் சிலர் இவனிடம் அரை இறாத்தல் சீனி வாங்கி வரும்படி கூறியிருந்தனர். அப்பொழுது பல்கலைக்கழகத்துக்கு அண்மையி லிருந்த சிங்களவரொருவரின் பலசரக்குக் கடைக்குச் சென்றவன் "எக்கா மாறா"வென்று ஒன்றரை இறாத்தல் பாணுக்குக் கூறுவது நினைவுக்கு வரவே அரை இறாத்தல் சீனிக்கு "சீனி மாறா"வென்று ("சீனி பாகயா" என்றுதான் கூறவேண்டும்) கேட்டு அங்கிருந்தவர்களின் சிரிப்புக்காளானான். மேலுமின்னுமொரு சம்பவம் அவனது இரயில் பயணத்தில் நடைபெற்றிருந்தது. ஒரு முறை யாழ்தேவியில் கொழும்புக் கோட்டையிலிருந்து யாழ்நகர் நோக்கிச் சென்று கொண்டிருந்தவனுக்கு அங்கிருந்த உணவகத்தில் "மட்டன் ரோ"லொன்று வாங்கியுண்ணவேண்டுமென்று விருப்பம் வந்தது. அந்த உணவகமோ சிங்களவரொருவரால் நடாத்தப்பட்ட உணவகம். அவரிடம் "ரோல் கீயத"வென்று தனக்குத் தெரிந்த சிங்களத்தில் வினாத்தொடுத்தான். அதற்கவர் "எக்கா விசிப்பகா" என்றார். உடனேயே இவனுக்கோ ஆனந்தம் தலைவிரித்தாடியது. ஊரில் கூட ஒரு "ரோல்" ஒரு ரூபா இருபத்தியைந்து சதத்திற்கு விற்பனையாகும் போது இங்கு எவ்வளவு குறைந்த விலையில் ஒன்று இருபத்தியைந்துக்கு விற்கிறானே என்று சந்தோசப்பட்ட வனாக இரண்டு ரோல்களை வாங்கி ஆசை தீர உண்டு விட்டு அதற்குரிய பணமாக ஐம்பது சதத்தை எடுத்துக் கொடுத்தான். அதற்குப் பதிலாக வெளிப்பட்ட அந்தச் சிங்களவரின் முறைப்பிற்குப் பின்னர்தான் ரோலின் விலை "ஒரு ரோல் இருபத்தியைந்து சதமல்ல ஒரு ரோல் ஒரு ரூபா, இருபத்தியைந்து சதமென்பதே" அவனுக்கு விளங்கியது. இந்த நிலையில் நாட்டில் நிலவிய அரசியற் சூழல் காரணமாகச் சிங்களம் படிப்பதிலேயே அவனுக்கு ஆர்வமற்றுப் போயிற்று. சிங்கள மொழியில் இவ்விதமானதொரு பாண்டித்தியம் பெற்றவனின்

மொழியறிவினை இந்தச் சமயம் பார்த்து யாராவது சிங்களக் காடையன் வந்து பரீட்சித்துப் பார்த்தால் அவனது கதி அதோ கதிதான். அவனது எண்ண மெல்லாம் எப்படியாவது இராமகிருஷ்ண மடத்தினுள் சென்று விட்டால் போதுமென்பதாகத்தான் அச்சமயத்தி லிருந்தது. காடையர்கள் கடந்த கலவரத்தில் விட்டு வைத்ததைப் போல் இம்முறையும் இராமகிருஷ்ண மடத்தை விட்டு வைப்பார்களென்று அவனது மனம் ஏனோ அச்சமயத்தில் நம்பியது. ஒரு வழியாக அவனும் நண்பனும், ராமகிருஷ்ண மண்டபத்தை அடைந்து விட்டார்கள். ஆனால் கைக்கெட்டியது வாய்க்கெட்டாத நிலைதான். இராமகிருஷ்ண மண்டபத்தின் முன்புற வாசற் கதவு பூட்டப் பட்டிருந்தது. வாசலின் முன்புறமாக இராமகிருஷ்ண வீதியில் காடையர் கும்பலொன்று நின்று மண்டபத்தையே வேடிக்கை பார்த்தபடியிருந்தது. அவனும் நண்பனும் அவர்களோடு அவர்களாக நின்று வேடிக்கை பார்ப்பது போல் பாவனை செய்தார்கள். அடிக்கொருதரம் கொழும்புத் தமிழர்கள் சிலர் வாகனங்களில் வந்து மடத்தின் முன்னால் இறங்கிக் கொண்டிருந்தார்கள். அவ்விதம் வந்தவர்களை உள்ளிருந்து வந்த பாதுகாவல் அதிகாரி அடிக்கொரு தரம் வாசற் கதவினைத் திறந்து உள்ளே விட்டு விட்டு மீண்டும் மூடிக் கொண்டிருந்தான். அத்தகையதொரு சமயத்தில் அவனும் நண்பனும் அபயம் தேடி வந்த பாதிக்கப்பட்ட தமிழர்களுடன் சேர்ந்து உள்ளே நுழைந்து விட்டார்கள். மண்டபத்தினுள் மேலும் பல தமிழர்கள் என்ன நடக்குமோ ஏது நடக்குமோவென்ற பயப்பிராந்தியுடனிருந்தார்கள். வெளியில் இன்னும் காடையர்கள் கூட்டம் வேடிக்கை பார்த்த படியே யிருந்தது. வரவர அவர்களது கூட்டமும் அதிகரித்த படியேயிருந்தது. உள்ளிருந்த தமிழர்களில் தமது தேன் நிலவினைக் கொண்டாட வந்து அங்கு தங்கியிருந்த இளந்தம்பதியொன்றுமிருந்தது. பார்க்கப் பாவமாக விருந்தது.

இத்தகையதொரு சூழலில் அங்கிருந்தவர் களில் சிறிது உயரமாகத் திடகாத்திரமாகவிருந்த தமிழ் இளைஞனொருவன் அங்கிருந்த இளைஞர்களைப் பார்த்துப் பின்வருமாறு கூறினான்:

"இன்னும் கொஞ்ச நேரத்திலை வெளியிலை வேடிக்கை பார்க்கிற குண்டர்கள் உள்ளுக்குள் வந்து விடுவான்கள். நாங்கள் பயப்படக் கூடாது. எதிர்த்து நிற்க வேண்டும்." நடைமுறைச் சாத்தியமற்ற துணிச்சலாக அது அவனுக்குப்பட்டது. இத்தகைய சமயங்களில் ஆத்திரப்படாமல், சமயயோசிதமாக, நிதானத்துடன் சிந்தித்துப் பிரச்சினையை அணுக வேண்டும். அவசரப் பட்டுக் காரியத்தைக் கெடுத்து விடக் கூடாதென்று இவனுக்குப் பட்டது. அவ்விதம் கூறிய அந்த இளைஞன் உள்ளே சென்று எங்கிருந்தோ "அலவாங்கு" அளவி லிருந்த இரும்புத் துண்டங்களைக் கொண்டு வந்து அங்கிருந்த இளைஞர்கள் கைகளில் கொடுத்தான்.

வெளியில் காடையர்களின் அட்டகாசம் வினாடிக்கு வினாடி அதிகரித்தபடியேயிருந்தது. அதனை அடிக்கொருதரம் ஜீப்புகளில் வந்து "ஜெயவீவா" கோசமிட்டுச் சென்ற சிறிலங்கா இராணு வத்தினரின் உற்சாகமும் அதிகரிக்க வைப்பதாக விருந்தது. இராமகிருஷ்ண மண்டபத்தின் முன்னால் நின்று ஸ்ரீலங்காக் காவற்படையினர் சிலர் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தனர். இவற்றால் மேலும் உற்சாகமுற்ற காடையர் கூட்டம் மண்டபத்தினுள் நுழைய முற்பட்டது. பாதுகாவல் அதிகாரிகளும் நிலைமை கட்டு மீறவே ஓடிப்போய் விட்டார்கள். காடையர்கள் உள்ளே வரமுற்படுவதைக் கண்டதும் மண்டபத்தினுள்ளிருந்த தமிழர்கள் ஆளுக்கொன்றாய் பிரிபட்டு மண்டபத்தின் ஒவ்வொரு பக்கமாய் ஓடினார்கள். அதுவரையில் இளைஞர்களுக்கு எதிர்த்து நிற்கும்படி ஆலோசனை வழங்கிய இளைஞன்தான் முதலில் ஓடி மறைந்தவன். மற்றவர்களும் கைகளிலிருந்தவற்றை அப்படி அப்படியே போட்டு விட்டு ஆளுக்கொருபக்கம் ஓடி விட்டார்கள். இவ்விதமாக ஓடியதில் நண்பனும் இவனும் பிரிபட்டுப் போனார்கள். பெண்களெல்லாரும் படிகள் வழியாக மொட்டை மாடிக்கு ஏறிச் சென்றார்கள். அவ்விதம் சென்றவர்கள் ஒளிவதற்கு இடமில்லாத நிலையில் தண்ணீர்த் தாங்கிக்கும் மொட்டை மாடித் தரைக்குமிடையிலிருந்த சிறிய இடத்தில் நெருக்கி யடித்து குடங்கிக் கொண்டார்கள்.

இளங்கோ மொட்டை மாடிக்கு வந்தபோது மொட்டை மாடியில் நீட்டிக் கொண்டிருந்த தூண்களைத் தவிர ஒளிவதற்கென்று ஏதுமில்லை. தண்ணீர்த் தாங்கிக்கடியில் குடங்கிக் கிடந்த பெண்களின் நிலை பரிதாபமாகவிருந்தது. வயது முதிர்ந்த தமிழரொருவர் வருவது வரட்டுமென்ற நிலையில் மொட்டை மாடிக்குள் நீட்டிக் கொண்டிருந்த தூணொன்றின் பின்னால் சாய்ந்த வராக வானத்தையே பார்த்தபடியிருந்தார். அகதிகளாக விண்ணில் மேகங்கள் அலைந்து கொண்டிருப்பதுபோல் பட்டது. அப்பொழுதுதான் அவன் ஆரம்பத்தில் ஆயுதம் தந்து விரைந்து மறைந்து போன இளைஞன் நீர்த் தாங்கியின் மேல் மல்லாந்து படுத்து ஆகாயத்தையே நோக்கியபடியிருந்ததை அவதானித்தான். அவ்விதம் அவன் படுத்திருப்பதைக் கீழிருப்பவர்கள் யாரும் லேசில் பார்த்து விட முடியாது.

இச்சமயம் நகரில் கலவரம் சுவாலை விட்டு எரியத் தொடங்கியிருப்பதை வெள்ளவத்தைப் பக்க மிருந்து வந்த புகைப் படலம் தெரியப்படுத்தியது. அதனைத் தொடர்ந்து புகையிரதப் பாதைகள் வழி யாகத் தமிழர்கள் தெகிவளைப் பக்கம் நோக்கி ஓடிக் கொண்டிருந்ததையும் அவதானிக்க முடிந்தது. வயது முதிர்ந்த பெண்கள் சேலைகளை முழங்கால்கள் வரை யில் தூக்கியபடி ஓட முடியாமல் ஓடிக் கொண்டி ருந்தார்கள். எதிரிலிருந்த "ஓட்டல் பிரைட்டனி"ல் தங்கியிருந்த உல்லாசப்பயணிகள் சிலர் அருகில் நடப்பதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்கள். சிலர் பல்வேறு விதமான புகைப்படக் கருவிகள் மூலம் படம்பிடித்துக் கொண்டிருந்தார்கள்.

இதே சமயம் இராமகிருஷ்ண மடத்தின் முன்பாக அதன் வளாகத்தில் தரித்து நின்ற யாழ்ப் பாணத்துப் பிள்ளையார் விலாசுக்குச் சொந்தமான பஸ் வண்டியொன்றைக் காடையர்கள் எரியூட்டினார்கள். இன்னுமொரு ஜீப் வண்டியை மண்டபத்தின் கீழ்த்தளக் கண்ணாடிச் சுவரொன்றுடன் மோதினார்கள். அத்துடன் மண்டபத்தினுள் காடையர்கள் நுழைந்து விட்டார்கள். அவர்களொருவன் மொட்டை மாடிக்கு வந்து எட்டிப் பார்த்தான். பார்த்தவன் "உத்தா இன்னவா" என்று கத்தி சென்றான். மீண்டும் வந்து மொட்டை மாடியிலிருந்து கீழ்ச் செல்லும் படிகளுக்கண்மையில் நின்றவனாக அனைவரையும் இறங்கும்படி சைகை காட்டினான். அவ்விதம் இறங்கியவர்களின் கைகளிலிருந்தவற்றை பிடுங்கி விட்டுத்தான் இறங்க அனுமதித்தான். பலர் அவசர அவசரமாகத் தப்பி வந்தபொழுது கொண்டு வந்திருந்த நகைகள், பணம் போன்ற பலதையும் இழந்தார்கள். உயிருக்கே உத்தரவாதமில்லா நிலையில் யாருக்கு வேண்டும் உடமை? இவ்விதமாக இறங்கியவர்களை மீண்டும் மேலே கலைத்தது கீழிருந்து வந்த காடையர்களின் கூச்சல். மீண்டும் ஒவ்வொருவரும் ஒவ்வொரு திக்காக ஓடினார்கள். பலர் ஒவ்வொரு தளங் களிலுமிருந்த கழிவறைகளில், குளியலறை களிலெல்லாம் ஓடி ஒளிந்து நின்றார்கள். அவ்விதமாகக் கழிவறையொன்றினுள் அவனும் அந்தப் புதுமணத் தம்பதியினரும் சிறிதுநேரம் அகப்பட்டுக் கொண்டார் கள். பயத்தால் கதி கலங்கிப் போயிருந்தனர் அந்தப் புதுமணத் தம்பதியினர்.

காடையர்களில் சிலர் இராமகிருஷ்ண மண்டபத்தையும் எரியூட்ட முனைந்தார்கள். அதுவரை யில் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த காவற்துறை யினரில் சிலர் அப்பொழுதுதான் உள்ளே நுழைந் தார்கள். அத்துடன் அம்முயற்சியினைக் கைவிட்ட காடையர்கள் வளாகத்துக்கு வெளியில் நின்று மீண்டும் வேடிக்கை பார்க்கத் தொடங்கினார்கள். அச்சமயத்தில் அருகிலிருந்த தமிழர்களுக்குச் சொந்தமான வீடுகளை யெல்லாம் உடைத்து அங்கிருந்த பொருட்களை யெல்லாம் எடுத்துக் கொண்டு ஆண்களும், பெண் களும் சிறுவர்களும் வீதி வழியாக ஓடிக் கொண்டி ருந்தார்கள். அவ்விதம் ஓடிக் கொண்டிருந்தவர்களை உற்சாகப் படுத்தும் வகையில் அடிக்கொருதரம் இராணுவச் சிப்பாய்கள் "ஜெயவீவா" கோசமிட்டபடி ஜீப்புகளில் விரைந்து கொண்டிருந்தார்கள்.

அதன் பின்னர் உள் நுழைந்த காவற்துறை யினர் அனைவரையும் அங்கிருந்து செல்லும்படி பணித் தார்கள். வெளியில் காடையர்களின் அட்டகாசமிருக் கையில் எங்கு போவது? அனைவரும் அருகிலிருந்த இராமகிருஷ்ண மடத்துத் தலைவரான துறவியின் வீட்டினுள் நுழைந்து கொண்டார்கள். இதே சமயம் ஆரம்பத்தில் இராமகிருஷ்ண மடத்திலிருந்து தப்பி யோடுகையில் பலர் அருகிலிருந்த தென்னைகளைப் பிடித்து வெளிப்புறமாகத் தப்பியோடினார்கள். அவ்விதம் ஓடியவர்களில் ஒருவனாகத்தான் அவனது நண்பனு மிருக்க வேண்டும். இராமகிருஷ்ண மடத் துறவியின் வீட்டினுள் அடைக்கலம் புகுந்தவர்களில் அவனைக் காணவில்லை.

பிரச்சினை அத்துடன் ஓயவில்லை. மீண்டும் தமிழர்கள் துறவியில் இல்லத்திலிருப்பதை அவதானித்து வைத்த காடையர்கள் சிலர் துறவியின் இல்லத்தைச் சுற்றிச் சுற்றியே வந்து கொண்டிருந் தார்கள். உள்ளே அகப்பட்டுக் கொண்டிருந்தவர்களில் சிலர் கொழும்பில் செல்வாக்கான தமிழர்கள். அவர்கள் தங்கள் செல்வாக்கினைப் பாவித்து மேலிடங்கள் பலவற்றுடன் தொடர்பு கொள்ள முயன்று களைத்துப் போனார்கள். எந்தச் சமயத்திலும் காடையர்கள் உள் நுழைந்து விடலாமென்ற நிலை.... எதிர்காலம் நிச்சயமற்றிருந்த நிலையில் அனைவருமிருந்தார்கள். ஒரு சில காடையர்கள் ஆயுதங்களுடன் துறவியின் வீட்டினுள் நுழைய முற்பட்டார்கள். உள்ளிருந்து வெளியில் நடப்பதை அனைவரும் அவதானித்துக் கொண்டிருந் தார்கள்.

அந்தச் சமயத்தில்தான் அந்தச் சம்பவம் நிகழ்ந்தது. அந்தத் துறவி உயர்ந்த ஆகிருதி படைத்தவர். கம்பீரமான தோற்றம் மிக்கவர். மிகுந்த துணிவும் நெஞ்சுரமும் மிக்கவரென்பதை அப்பொழுதுதான் அவன் அவதானித்தான். நீண்டதொரு சாய்வு நாற் காலியினை இல்லத்துக் கதவின் முன்னால் இழுத்துப் போட்டு விட்டுக் காடையர்கள் யாரும் உள் நுழைய முடி யாத வகையில் மிகவும் சாவதானமாக அந்நாற்காலியில் சாய்ந்து கொண்டார். அந்தக் காடையர்களைப் பார்த்து என்னை வெட்டிப் போட்டு விட்டு வேண்டுமானால் உள்ளே செல்லுங்கள் என்னும் தோரணையில் அவ்விதமாக அவர் நடுவில் மறித்து நின்றது உள்ளே நுழைய முற்பட்ட காடையர்களை ஏதோ விததில் கட்டிப் போட்டு விட்டது. அந்த மதகுரு மட்டும் அன்று அவ்விதம் தடுத்திரா விட்டால் என்ன நிகழ்ந்திருக்குமோ? அன்று மாலை வரை இந்நிலை நீடித்தது. இதே சமயம் இராமகிருஷ்ண மண்டபத்தினுள் அகப்பட்டிருந்தவர்கள் ஓரளவு நிலைமை சீராகத் தொடங்கியதும் அங்கிருந்த வசதிகளைப் பாவித்துத் தேநீர் போட்டுக் கொண்டு துறவியின் இல்லத்தில் தங்கியிருந்தவர்களுக்குக் கொண்டு வந்து தந்தார்கள். அப்பொழுதுதான் அவனது பிரிந்து போன நண்பனை அவன் மீண்டும் சந்தித்தான். "என்ன நடந்தது?" என்றவனுக்கு அவன்

"அதுவொரு பெருங் கதை. தப்பிப் பிழைத்ததே அருந்தப்புத்தான். பிறகு விபரமாகச் சொல்லுகிறேன்" என்றான். அதன் பின்னர் அனைவரும் ஒன்று சேர்ந்து அனைவருக்கும் உணவு தயாரித்துப் பகிர்ந்துண்டார்கள். இரவாகி விட்டது. அன்றிரவே லொறிகளில் ஆடுமாடு களைப் போல் அனைவரையும் திணித்து பம்பலப் பிட்டியிலுள்ள சரஸ்வதி மண்டபத்தினுள் கொண்டுவந்து இறக்கி விட்டார்கள்.

(தொடரும்...)

காடுலாவு காதை பாகம் 2
நாவல் தொடர்

**3**

தமிழ்க்கவி

# காடுலாவுகாதை 2



செட்டிகுளம் பூவரசன் குளத்திலிருந்து பதினான்கு கிலோமீட்டர் தூரம். அடர்காடு இடையில ஒரு சிங்களக்குடியேற்றமும்(வாரிக்குட்டியூர்), அப்பால் ஒரு அங்கீகரிக்கப்படாத தமிழர்குடியேற்றமும் (கல் லாறு), கடந்து சென்றால் ஒரு கிறிஸ்தவ கிராமமும் (கிறிஸ்தவ குளம்) இருக்கும் அவ்வளவுதான். இவை ஒவ்வொன்றிலும் ஐம்பது அறுபது குடும்பங்களுக்கும் குறைவாகவே வசித்து வருகின்றனர்.

செட்டிகுளத்தின் பின்புறமாக வரும் பெரும் அடர்வனம் தொடர்காடு. கிளைவிட்டு செறிவாக தெற்கு நோக்கி சென்று சிங்கராஜ வனத்தை தொடுகிறது. அது விலங்குகள் சரணாலயம். இதன் எல்லை புத்தளத்தை அண்மித்து முடிவுறும். கிழக்கே நேரியகுளம் ஊடாக மதவாச்சியையும் வடமேற்கே ஆண்டியாகுளம் பறையனாலங்குளம் பிரதான வீதி செட்டிகுளம் நகரை ஊடறுத்து செல்கிறது. நேரியகுளம் மாங்குளம் சந்தியில்... ஆம் இங்குமொரு மாங்குளம் உண்டு. இவ்விடத்தில் வடக்கு நோக்கி சாய்வாக பிரியும் பெரு வீதி பஸ் போக்குவரத்துடையது. வீரபுரம் பாவற்குளம் முதலாம் படிவம் ஊடாக வெங்கலச்செட்டிகுளம், ராசேந்திரன்குளம், கடந்து நெழுக்குளத்தில் மன்னார் வவுனியா வீதியை தொடுகிறது.

வவுனியாவிலிருந்து மன்னார் வீதி வழியே புறப்படும் பேருந்துகள் நெழுக்கும் வழியாகவும் தாலிக்குளம் வழியாகசென்று பாவற்குள நான்காம் ஐந்தாம் படிவங்களை கடந்தும், பூவரசன்குளம் வழியாக முன்னர் குறித்த வழிகளூடாகவும் செட்டிகுளத்தை அடையலாம். எமக்குத் தெரிந்து செட்டிகுளப்பிரதேசம் புளொட் அமைப்பின் கட்டுப்பாட்டில் இருந்தது எனலாம் ஏனெனில் அங்கே அவர்களுடைய பாரிய முகாம் முசல்குத்தி காட்டுக்குள் இருந்தது. இந்திய ராணு வத்தின் வெளியேற்றம் நடந்த அந்தக்காலத்தில் முதன் முதலாக இந்த வனத்துக்குள் அலையும் சந்தர்ப்பம் அவளுக்கு வந்தது. மிகவும் துயரத்துடன் தற்கொலை செய்து கொள்ளலாம் என்ற மனநிலையை எதிர்த்து அந்த கொலை நடந்தாலும் கவலையில்லை என்பதாக வரித்து இந்த வனத்துக்குள் புகுந்தேன்.

அன்றைய ஒட்டுமொத்த தமிழ்த்தாய்மாருக்கு இதைவிட வேறு கதியில்லை பருந்துகளைப்போல எமது பிள்ளைகளை இறாஃஞ்சிச் சென்ற இயக்கங்களிட மிருந்து எமது பிள்ளைகளை நாம் மீட்டாக வேண்டும். அதுமட்டுமே இந்த பெற்றவர்களின் பெருந்துயராக இருந்தது. என்பிள்ளை பயந்தவன், பசிதாங்கமாட்டான். அவனுக்கு ஆஸ்த்துமா நெஞ்சு வருத்தக்காறன். அவன் எங்களை விட்டு தனிய எங்கயும் போனதில்லை பாவியள் என்ன செய்தாங்களோ... என்ற பதைப்பு ஒவ்வொரு பெற்றோருக்கும் ஆனால் எத்தனை பேரால் வனங் களுக்குள் செல்ல முடியும் அவர்களின் பிரதேசத்துள் கால்வைத்தாலே நெற்றியை குண்டு துளைக்கும் என்ற அச்சம் எல்லோருக்கும் இருந்தது. அப்படி இந்த பிள்ளைகளை எப்படி கைவிட்டோம். காலையில் பாடசாலைக்கு சென்ற பிள்ளைகள் மாலையில் வீடு திரும்பவில்லை. பாடசாலைக்கு ஓடிச் சென்று பார்த்தால் பாடசாலை அமைதியாக கிடந்தது. பேருந்தில் சென்றால் நாம் அங்கிருந்து வேறிடங்களில் தேட முடியாது. எனவே அவள் தனது மிதிவண்டியை தயார்

செய்தாள். அது ஆண்களுக்கான மிதிவண்டி பின்னே மூடை கட்டுவதற்காக கரியலும் பூட்டியிருந்தாள். முன்புறம் மடுக்கந்தைப் பெண்களால் வீட்டுக்கு வீடு கொண்டு வந்து விற்கப்பட்ட கல்பன் உமல் பையை கொழுவியிருந்தாள். அதன் கைப்பிடியை வலுவாக்க அடிப்பையிலிருந்து ஒரு தோல் காப்பாக வைத்து தைத்திருந்தேன். அந்த பையுள் ஒரு சொலுசன் பேணி, கொம்பவுண்ட்., பழைய ரியூப்துண்டுகள் சிறிய அரம் பழையது, ஒரு பழந்துணி பின்புறம் கரியலில் வரிந்து கட்டிய காத்தடிக்கும் பம் ஒன்று. ஒரு போத்தல் தண்ணீர். அவ்வளவுதான் ஏதாவது தேவைப்பட்டாலும் என்று ஒரு பத்து ரூபாக்காசு. தனது பயணம் தயாரான போது அவள் தந்தை சொன்னார்.

“பிள்ளை அவதானம் முக்கியம் கண்ணையும் மூக்கையும் கவனமாக கவனி எங்கயும் தொலைவுக் காட்டை பாத்தபடி போ. ஏதும் கருப்பா தெரிஞ்சா நிதானி அது அசைஞ்சா யானை அசைவில்லாட்டி போ வெயிலேறிட்டா தெருவுக்கு மிருகங்கள் வராது. அதுக்காக ஓண்டுக்கு ரெண்டுக்கெண்டு பத்தைக்க இறங்காதை, ரெண்டுபக்க ரோட்டையும் பாத்திட்டு வீதிக்கரையிலயே கழிக்கிறதுதான் புத்தி. மோட்டை யளுக்க கால் வையாதை.”

சென்ற வாரம்தான் இயக்கத்திற்கென்று ஓடிப்போய் திரும்பிவந்த மகன் வந்து “அம்மா நானும் வரட்டே” என்று கேட்டான்..

“அய்யோ ராசா நீ வீட்டில பத்திரமா இரு அது போதும்” என்றவாறே அவள் புறப்பட்டாள். இதே நேரம் அவளுக்குள் இன்னுமொரு யோசனையும் வந்தது.

“ஏன் இதைப்பற்றி பொலீஸில் ஒரு முறைப் பாட்டை கொடுக்கக்கூடாது.” போயிற்றுவந்து பாப்பம் என்று அந்த யோசனையை பின்தள்ளினாள். பம்பமடுச் சந்தியை கடந்தபோது புதிதாக ஆரம்பிக்கப்பட்டு இன்னும் முற்றாக வெளியாக்காத வனமாக இருந்த புதிய கோவிற்குளம் கிராமம் தெரிந்தது. எமது கிராமத்தவர்கள்தான். எனது பிள்ளை தப்பி ஓடிவந்தால் இந்த வனத்திலும் சேரலாம் தெரிந்தவர்கள் சொல்லி விட்டுப் போகலாமே என்று அந்த கிராமத்தில் இறங்க, அவளது தோழியொருத்தியின் வீடு மிக அருகிலேயே இருந்தது. கமலா அவள் பெயர். ஒரு தேநீர் கொடுத் தாள். அவர்கள் கோவிற்குளம் கிராமத்தின் நிரந்தர வாசிகள் விமானத்தள விஸ்தரிப்பிற்காக அவர் களுடைய காணிகளை இராணுவ முகாம் விழுங்கி விட்டது. அதற்குப்பதிலாக வழங்கப்பட்ட நிலம்தான் இது. அவர்கள் தமது கிராமத்தின் அடையாளமாக இதற்கு புதிய கோவிற்குளம் என பெயரிட்டிருந்தார்கள். இது பம்பமடுவிலிருந்து செக்கடிப்பிலவுக்கு திரும்பும் பாதையின் ஓரத்திலேயே அமைந்திருந்தது.

அவள் வந்த காரணத்தை அவளிடம் கூறி பிள்ளைகள் யாராவது வந்தால் எனக்கு அறிவியுங்கள் என்று கேட்டுக் கொண்டாள். அவள் அதுக்கு வாய்ப்பே யில்லை. ஏனென்றால் இது மிகவும் தூரம் என்றாள். லெச்சிமி சோர்வுடன் வவுனியா மன்னார் வீதியில் பூவரசனகுளம் நோக்கி பயணித்தாள். எப்போதும் ஆங்காங்கே வீதிக்கரைகளில் துப்பாக்கிகளை பரப்பி வைத்துக்கொண்டு இரண்டு மூன்று பேராக இருக்கும் இயக்கப்பொடியளை காணவில்லை. நெழுக்குளம் பகுதியில் நேற்று முன்தினம்தான் ஒரு மோதலில் ஒரு குழுவினரை விடுதலைப்புலிகள் தாக்கி அழித்ததாக வானொலி அறிவித்திருந்தது. அதை எண்ணியவாறே பம்பமடு ஏற்றத்தில் தனது மிதிவண்டியை வலிந்து மிதித்து ஏற்றிக் கொணடிருந்தாள். அப்போதுதான் அவளுக்கு தேநீர் அருந்தும் நினைவு வந்தது. மிதிவண்டியை நிறுத்தி இறங்கினாள். என்னைக்கடந்து ஒரு பேருந்து அல்ல சிற்றூர்தி சென்றது. வீதியில் ஏற்பட்ட பரபரப்புக்கு மத்தியில் ஒரு வாகனம் பூவரசன் குளப்பக்கமிருந்து வவுனியாவை நோக்கி சென்றது. வீதியில் ஒரு அளவு சனப்பிழக்கம் இருந்தது. எல்லோரும் ஆவென்று வாயைப்பிளந்து பார்த்தனர். அங்கே ஒருவர் சொன்னார், சொன்னார் என்ன கத்தினார். “புலிப் பெட்டையள்”

“செட்டிகுளம் முசல்குத்திக்காட்டுக்க பெரிய சண்டை அதுக்குப் போயிற்றுத்தான் திரும்பிப் போகினம்.” அவளது உடல் பதறியது.

“அங்க எந்த இயக்கம்” அவளையறியாமலே கேட்டு விட்டாள்..

“எதெண்டில்லப்பின்ன எல்லாரும் ஒருவருக் கொருவர் ஒத்தாசையா ஒண்டடிமண்டடியாத்தான் இருக்கிறாங்கள். அடி தூளடியாம்” அவள் தேநீர் அருந்தும் எண்ணத்தை கைவிட்டு மிதிவண்டியை வேக மாக மிதித்தாள். கிறிஸ்தவகுளம் கடந்தபோது ஒரு பாலத் தடியில் அவளுக்கு முன்பே பேருந்தில் வந்திறங்கிய தனது கிராமத்தவர்களை கண்டாள். எனவே அவர்களுடன் தானும் மிதிவண்டியை உருட்டியவாறு நடந்து சென்றாள்..

செட்டிகுளம் புகையிரதப்பாதையருகே அவர்கள் தடுக்கப்பட்டனர்.

அன்றுதான் முதல்முதலாக விடுதலைப் புலிகளை காண்கிறார்கள்.

அந்த அனுபவத்தை ரசிக்க முடியாமல் பிள்ளைகளின் பாசம் பதைப்பாக இருந்தது.

“எங்க போறீங்கள் அங்க ஒருவரும் இல்லை பிள்ளையள் வேற இடத்துக்கு அனுப்பியாச்சு இப்ப ஒருவரையும் பாக்க ஏலாது. நாங்கள் கொண்டுவந்து விடுவம் நீங்கள் திரும்பிப் போங்க” என்றான் ஒரு விடுதலைப்புலி உறுப்பினன்.

இராணுவம் போன்று அனைவரும் பச்சைநிற சீருடையிலிருந்தார்கள்.

அப்போது வரிச்சீருடை வரவில்லை. மனம் பதைப்பில் நாங்கள் வெகுநேரம் அதிலேயே நின்றாலும் திரும்பி செல்ல வேண்டியதாயிற்று எங்கள் பிள்ளை களுக்கு என்னவாயிற்று.

பெரும் போரில் சிக்கி அப்பாவிகளான சிறுவர்கள் என்ன செய்திருப்பார்கள்.

(தொடரும்)

கோகிலா மகேந்திரன்

# 3 முடிவைத் தொடுவாய் முயன்று

"நீங்கள் விரும்பியதைச் செய்வது சுதந்திரம். நீங்கள் செய்வதை விரும்புவது மகிழ்வு" என்று மிக அழகாகவும் சரியாகவும் சொன்னார் பிராங்க் டைகர். (Frank Tyger)ஆம்! ஒருவர் தனது முடிவுகளைச் சிறப்பாக முன்னெடுப்பதற்குச் "சுதந்திரம்" மிக மிக இன்றியமை யாதது.

எவ்விதக் கட்டுப்பாடோ, தடையோ, வலியோ, இடைஞ்சலோ இல்லாது ஒருவர் நினைக்கவும் பேசவும், அசையவும் உணரவும், செயற்படவும் முடியுமா யிருக்கும் நிலையே தனிநபர் சுதந்திரம் எனப் பொது வாகக் கூறலாம். ஜனநாயக நாடுகள் என வலியுறுத்திக் கூறப்படும் எத்தனை உலக நாடுகளில் பொதுமக்கள் மத்தியில் இந்த நிலை முழுமையாகக் காணப்படுகிறது என்பது பெரும் ஆய்வுக்குரிய விடயம் என்பது வேறு.

இந்தப் பிரபஞ்சத்தை முழுமையாக அனுபவிப் பதற்குத் தேவையான அசைவுகளைப் பிரச்சினை இன்றிப் பெறுதலே சுதந்திரம் என்பது சிலரின் விளக்கம்.

அகத்தடைகளைத் தாண்டித் தெளிவாகச் சிந்திக்கும் நிலையே சுதந்திரம் என்பது இன்னும் ஒரு சாராரின் கருத்து.

கடவுள் போன்ற ஒரு உயர்ந்த, மிகப் பெறுமதி யான விடயத்துடன் தன்னை முழுமையாக இணைத்துக்கொண்டதாக உணர்வதே சுதந்திரம் வேறு ஒரு குழுவினருக்கு!

"தந்ததுன் தன்னைக் கொண்டதென் தன்னைச்
சங்கரா ஆர் கொலோ சதுரர்
அந்தமொன்றில்லா ஆனந்தம் பெற்றேன்"

என்று மணிவாசகர் கூறுவது இந்த நிலைச் சுதந்திரத்தைத்தான்!

மேலே கூறப்பட்ட சுதந்திரத்துக்கான வரைவிலக்கணங்கள் யாவும் அந்தந்த நிலைகளில் சரியானவைதான்!

வேறு ஒரு இன்பத்தை விரும்பிச் சுதந்திரத்தை இழப்பவர்களை

"கண்ணிரண்டும் விற்றுச் சித்திரம் வாங்குவ தற்கு" ஒப்பிடும் பாரதி, சுதந்திரத்தின் மேன்மையைப் பல பாடல்களில் கொட்டித் தீர்ப்பான். அது தேச விடுதலை யோடு பின்னப்பட்ட சுதந்திரம்.

'Nuns Fret not at their convent 's narrow room. (கன்னியர் மடத்தின் சிறிய வசிப்பிட அறைபற்றி, அங்குள்ள கன்னியாஸ்திரிகள் கோபப்படுவதோ எரிச்சல் படுவதோ இல்லை) என்பது புகழ்பெற்ற ஆங்கிலக் கவிஞன் வில்லியம் வேர்ட்ஸ்வேர்த்தின் அவதானிப்பு. "சில வேளைகளில் ஒரு சிறிய அறை வாழ்வு கூட ஒரு பெரிய சுதந்திர உணர்வைத் தரலாம்" என்ற கூற்றில் ஒரு அக முரண் இருப்பதுபோலத் தோன்றினாலும் வெளிச் சூழலின் அளவைவிட, மனதின் நிலையே சுதந்திரத்தில் முக்கியமானது என்று வேர்ட்ஸ் வேர்த் சரியாகக் கணித்தார் எனலாம். துன்பப்பட்டவர்களைப் பற்றி எப்போதும் சிந்தித்துச் செயற்பட்ட அன்னை திரேசா எளிமையான வாழ்வுக்கு நன்கு பழக்கப்பட்டவர்.

"நீ உண்மையை அறிவாய் .உண்மை உன்னைச் சுதந்திரத்துக்கு இட்டுச் செல்லும்." என்பது பைபிள் வாக்கியம்.

எந்த ஒரு உயிரினதும் சுதந்திரத்திற்காகக் கடுமையாக உழைக்கக்கூடிய மனப்பாங்குகொண்ட இளைஞன் ஒருவன் மலைப் பாதையொன்றில் நடந்து கொண்டிருந்தான். பகல் முழுவதும் நடந்து களைத்துப் போன அவன் இரவு நேரத்தைக் கழிப்பதற்காகப் பாதை யோரச் சத்திரம் ஒன்றில் தங்கினான். அமைதியான அந்தச் சத்திரத்தின் முற்றத்தில் ஓர் அழகிய பஞ்ச வர்ணக்கிளி தங்கக் கூண்டில் அடைக்கப்பட்டிருந்தது. அது இவனைக் கண்டநேரம் முதல் அடிக்கடி, "சுதந்திரம், சுதந்திரம், சுதந்திரம் ..." என்று சொல்லிக் கொண்டே இருந்தது. மற்றவர்களைப் பார்த்தும் அது அப்படிப் பேசியதோ என்பது அவனுக்குத் தெரியாது. "நானும் எத்தனை கூண்டுக் கிளிகளைப் பார்த்திருப் பேன்.! சொல்லிக் கொடுக்கும் சொற்களைக் கிளி பேசும் என்பது உண்மைதான். ஆனாலும் வேறு எந்தக் கிளியும் இப்படி இடைவிடாமல், சுதந்திரத்திற்காகக் கத்திக் கத்திப் போராடியது கிடையாது. பாவம் இந்தக்கிளி! தனது இனத்தவருடன் சேர்ந்து சுதந்திரமாகப் பறந்து திரிய விரும்புகிறது." என்று நினைத்த இளைஞன் அதற்கு உதவ விரும்பினான். கிளியின் சிறகுகள் வெட்டப் பட்டிருக்கின்றனவா என்று அவதானித்தான். அப்படித் தெரியவில்லை. அர்த்த சாமப் பொழுதில்,சத்திரத்தில் எல்லோரும் தூக்கத்தில் இருந்த சமயம், இவன் மெதுவாக எழுந்து, அடிமேல் அடிவைத்து நடந்து, கூண்டுக்கு அருகில் சென்று, கூண்டின் பூட்டை வெட்டிக் கிளியைத் திறந்துவிட்டான். "நீ யாருக்கும் தெரியாமல்

பறந்துபோய்விடு கிளியே! நான் போய்ப் படுத்துக் கொள்கிறேன்" என்றான். தான் பெரிய புண்ணிய காரியம் செய்ததாக அவனுக்கு ஒரு நிம்மதி! என்ன ஆச்சரியம்! ஐந்து நிமிடம், பத்துநிமிடம், பதினைந்து நிமிடம் என்று நேரம் ஓடியதே தவிரக்கிளி ஓடவில்லை. அது தங்கக் கூண்டின் கம்பிகளை முன்னரைவிட இறுகப்பற்றியபடி அமர்ந்திருந்தது.

இது செவிவழி தொடரும் ஒரு நாடோடிக் கதையாக இருக்கலாம். ஆயினும் பல சமயங்களில் "பழக்கம்" என்பது சுதந்திரத்தைவிடப் பாதுகாப்பானது போல, நெருக்கீடு குறைவாக இருப்பதுபோலத் தோன்றுவது மனிதருக்கும் பொருந்தும் என்பதை மறுக்க முடியாது.

எது எப்படி இருந்தாலும், உடல் ஆரோக்கி யத்துடனும், உள நலத்துடனும் சந்தோஷமாக, அமைதியாகச் சுதந்திரமாக வாழ விரும்புகிறவர்கள் சில விடயங்களைக் கவனித்தாக வேண்டும்.

முதலாவதும் முக்கியமானதுமான விடயம் பேச்சில் தூய்மை பேணுதல் .! மனிதனை ஏனைய உயிர் அங்கிகளில் இருந்து உயர்த்தி வைத்திருப்பது மொழிப் பயன்பாடு. சில முலையூட்டிகளும், பறவைகளும் மட்டுப் படுத்தப்பட்ட அளவில் மொழியைக் கையாளுவதாகக் கூறப்படுகின்ற போதிலும், மனிதரின் மொழிதான் அவர்களின் இச்சைவழி இயங்குவதும், ஆக்கத்திறன் மிக்கதுமாகும். அதனால்தான் ஒருமனிதர் என்ன பேசுவார், எப்போது எப்படிப் பேசுவார் என்பதை ஊகிப்பது கடினமாகின்றது

ஆயினும் எல்லா உயிரங்கிகளையும் போலவே மனிதனுக்கு மொழி வழங்கப்பட்டது அவர்களின் இனத்தை வளர்க்கவும், நிலை நிறுத்தவும்தானே ஒழிய அழிப்பதற்காகவல்ல !

நாங்கள் பேசுவது சுருக்கமாகவும், நேராகவும், உண்மையாகவும் இருக்கவேண்டும். விடயத்தைச் சுற்றிச் சுற்றி வந்துகொண்டிருக்கத் தேவையில்லை. மற்றவர்களைப் புறங்கூறுவதும், இழிவுபடுத்துவதும் அவசியமற்றது. தன்னை நம்புகிற மனிதர் உண்மை பேசுவார்.

"வாழ்வு என்பது உன்னைக் கண்டறிவதல்ல.

வாழ்வு என்பது உன்னை ஆக்கத்திறனுடன் உருவாக்குவது" என்பார் பேர்னார்ட் ஷா !

பொதுவாக நாங்கள் எங்களை மற்றவர் முன் உயர்வானவராகவும், பெரியவராகவும், தகுதியானவரா யும், அச்சமற்றவராயும், நேர்மையானவராயும் காட்டிக் கொள்வதற்கே பொய் பேசுகிறோம். பெரும்பாலும் அந்த எதிர்பார்ப்பும் நடப்பதில்லை. பொய்யை மணந்து பிடிப்பது இலகு. அதற்கு பொலிகிராப் (polygraph) இயந்திரம் தேவையில்லை. மனிதர்கள் இயல்பாக இருக்கும்போது, தளர்வாக இருக்கும்போது உண்மை பேசுகிறார்கள் அல்லது உண்மை பேசும்போது தளர்வாக இருக்கிறார்கள். பொய் உரைக்கும்போது உடல் தொழிலியல் கூறுகள் கிளறப்படுவதால், அவர் களின் இதயத் துடிப்பு வேகம் கூடுகிறது. குருதி அமுக்கம் உயருகிறது .சுவாச வேகம் அதிகரிக்கிறது; வியர்வைச் சுரப்பும் தோலின் கடத்தல் தன்மையும் (வெப்பம், மின்)மேலே செல்கின்றன. இவற்றின் அடிப் படையில்தான் "பொய்யறி கருவி" வேலை செய்கிறது. 98%ஆன சந்தர்ப்பங்களில் அக்கருவியின் அளவீடு சரியாக இருக்கிறதாம். ஏன்தான் இந்தப் பொய் கூறும் தொல்லை?

எமக்கு இயல்பான உண்மையைப் பேசும்போது எமது மன அமைதி அதிகரிக்கிறது. நாம் மனதைத் திறந்து பேசும்போது "உலகம் அவ்வளவு மோசமில்லை" என்று மற்றவர்களும் உணர்வதால் அவர்களும் ஊக்க மடைகிறார்கள். நாமும் வீரமுடன் வலிமையாக இருப்பதாக உணர்கிறோம். நாம் உண்மையாக இருப்பது எம்மைப்பற்றி, மற்றவர் மனதில் ஒரு நல்ல, நிலையான பதிவை ஏற்படுத்துகிறது. நாம் சொல்வதைக் கேட்கவும், நம்பவும் பலர் தயாராகிறார்கள். இது இன்னொரு வகை யில் எங்களைத் தேவையற்ற தொல்லைகளில் இருந்து பாதுகாக்கிறது. இப்படியே தொடரும் நேர்வட்டம் எங்கள் சுய கணிப்பு, நம்பிக்கை, மன நீதி ஆகியவற்றைப் பெரு மளவு உயர்த்திவிடுகிறது. இவ்வளவு இலாபத்தையும் இழந்துவிட்டு நாம் ஏன் பொய் பேசுகிறோம் ?

"தக்காரும் தக்கவரல்லாரும் தந்நீர்மை
எக்காலும் குன்றல் இலராவர்"

என்பது நாலடியார்.

தகுதி உடைய பெரியவர்கள் எப்போதும் தூய்மை பேணுவர். சக மனிதர் ஒருவர் பொய் பேசுவது எமது அவதானத்தில் வரும்போது அவர், "தக்கார்" இல்லை என முடிவு செய்துகொள்ளலாம்.

அதே நேரத்தில், மற்றவர்களால் சொல்லப்படும் சொற்கள் எதையும் அல்லது நடைபெறுகின்ற சம்பவங்கள் எதையும் எங்களுக்கானது மட்டும் என்று எடுத்துக்கொள்ள வேண்டியதில்லை.

"Sticks and stones may break your bones

but words can never hurt you" என்று எடுத்துக் காட்டுவார் டேயில் கானேகி. (தடிகளும் கற்களும் உங்கள் எலும்புகளை உடைக்கலாம். ஆனால் சொற்கள் உங்களைக் காயப்படுத்த முடியாது.)மற்றவர்கள் சொல்வதும் செய்வதும் அவர்களின் தரத்தைப் பொறுத்தது .அவர்களின் விளக்கத்தைப் பொறுத்தது.

உங்கள் தோல் நிறம் சற்றுக் கறுப்பானது என வைப்போம். நீங்கள் பாதையிலே நடந்து போய்க் கொண்டிருக்கிறீர்கள். உங்களைக் கடந்துபோகும் பதின்ம வயதுக் கூட்டம் ஒன்று உங்களைத் திரும்பிப் பார்த்து "கரிக்கட்டி" போகுது என்று கூறிச் சிரிக்கிறது. அந்த வசனம் உங்களுக்கானது என்று கட்டாயம் எடுக்க வேண்டுமா?

ஒருவரின் தோல் நிறம் என்பது அவர் பற்றிய எந்த மதிப்பீட்டையும் செய்ய உதவமுடியாது என்பதே உண்மை. அப்படி நம்புகிறவர்களைப் பற்றியோ அல்லது தாம் அப்படிச் சொல்வதால் ஒருவர் புண்பட்டுப்போனால் தாம் பெரியவர்களாகிவிடலாம் என்று கருதுகிறவர் களைப் பற்றியோ நாம் ஏன் அலட்டிக்கொள்ள

வேண்டும்? அது அவர்களின் கல்விநிலை, அவர்கள் வளர்ந்த சூழல், அவர்களின் பெற்றோர், ஆசிரியர், நண்பர் குழாம்-இவற்றில் ஒன்றோ அல்லது பலவோ சரியில்லை என்பதைக் காட்டும் சுட்டி! உங்களைப் பற்றியதில்லை. வேண்டுமானால் அவர்களுக்காகப் பரிதாபப் படலாம். முடிந்தால் உதவலாம். கோபப் பட்டோ அல்லது புண்பட்டோ எதுவும் ஆகாது. உணர்ச்சிவசப்படுதல் மீள எமக்கே நட்டமாகும்.

"இருளுக்குப் பயப்படும் பிள்ளையை நாம் மன்னிக்கலாம். உண்மையான துன்பியல் என்பது ஒளிக்குப் பயப்படும் பெரிய மனிதர்கள்" என்பார் தத்துவ ஞானி பிளேற்றோ !

நாங்கள் ஒளியை விரும்புகிறவர்களாக இருந்தால் பலரது வாழ்விலும் ஒளியை ஏற்ற முனைபவர்களாக இருந்தால், ஊகங்களை ஒருபோதும் உருவாக்கவும் மாட்டோம். ஊகங்களை நம்பவும் மாட்டோம். எந்த ஒரு கணத்திலும் மிகச் சிறந்த ஒரு விடயத்தை அமைதியாகச் செய்துகொண்டிருப்போம்.

மற்றவர்கள் சொல்பவை எல்லாவற்றையும் கவனமாகக் கேட்போம் .ஆயினும் எல்லாவற்றையும் நம்ப வேண்டியதில்லை என்பது எமக்குத் தெரியும். ஏனென்றால் அவற்றில் மிகப்பல ஊகங்கள் இருக்கலாம்.

நேரான எண்ணங்களும், நேர்மையான சிந்தனைகளும், எப்போதுமே, நம்பகத் தன்மை, மேன்மை, முழுமை, சீரியநிலை, நிஜம் ஆகியவற்றுடன் தொடர்புபட்டவை.

அரிச்சந்திரன் எமக்கு நன்கு பரிசயமானவன். அந்தக் கதை எமக்கு நன்கு தெரியும். நற்றாலியா சில்வெஸ்டர் (Natalia Sylvester )இன் "றன்னிங்"(Running ) என்ற நாவலை வாசிப்போம்.

(தொடருவோம்).

# ஏகனின் நீதிப்பட்டயம்...



அடுத்தவன் பொருளில்
ஆசை கொள்ளாதே
அதைப் பிடுங்கி
அசிங்கமாய் வாழாதே

கிலோ என்ன விலை
கேட்கும் மனிதர்
நிறுத்து விற்கவோ
நீதியும் நியாயமும்

பேச்சு தோறும்
பூக்கள் மணக்கும்
நெஞ்சம் எல்லாம்
புலால் வெடுக்கு

குழி பறித்து
கோபுரம் எழுப்புவார்
வழி தெரியாதார்
விழுந்தே தொலைப்பார்

முலாமிட்ட முகங்காட்டி
முகமன் கூறுவார்
சலாம் போட்டபடியே
சகலதையும் சாதிப்பார்

வருணனையில் வாழ்த்தியே
வாகாய் வரவேற்பார்
கருணையின்றிப் பிடுங்கியபின்
போவென்றே இழிப்பார்

ஏமாந்த பின்னர்
ஏது பலன்?
ஈனத்தனம் அறிந்து
இருந்திடுவாய் சூதானமாய்

சந்து பொந்தெல்லாம்
அதிகரிக்கும் வேட்டை
சிந்து பாடித்திரியும்
பச்சோந்திகள் கூட்டம்

முட்டாள் என்றும்
முட்டாள் அல்ல
தட்டிக்கேட்க ஒருநாள்
தைரியமும் வரும்

ஏமாந்த பின்னர்
எழும் உறைப்பு
எட்டிக் காயெனவே
உள்வரும் கசப்பு

இலாப நோக்கத்தில்
எதையும் செய்யாதே
இறைவழியில் என்றும்
இணைந்தே வாழ்

உடல் பொருள் ஆவி
அவனுக்கென்று ஆனபிறகு
உள்ளத்தில் கலக்கம்
உருவாவதும் ஏனோ?

தெள்ளத்தெளிவாய்
தேட்டத்தில் மூழ்குவாய்
அள்ளக் குறையாத
அருளினைப் பெறுவாய்

ஏமாறுவதும் இழிவடைதும்
இவ்வுலகில் மட்டும்தான்
ஏகனின் நீதிப்பட்டயம்
ஏகுமுலகில் மகிழ்வாய்

- Dr ஜலீலா முஸம்மில்
ஏறாவூர்

க.பரணீதரன்



# “என்ன வேண்டும் சொல்லுங்கள் தருகின்றேன்” பல்துறைவல்லோன் கலாநிதி த. கலாமணி

*1951.11.12* ஆம் திகதி அல்வாயூரில் பிரபல அண்ணாவியாரும் இசைநாடக நடிகரும் சோதிடருமான சபாபதி தம்பிஐயா அவர்களுக்கும் பர்வதம் அவர்களுக்கும் மகனாகப் பிறந்தவர் த. கலாமணி அவர்கள். சிறுபராயம் முதல் கல்வியிலும் பக்தியிலும் அதிக நாட்டம் உள்ளவராக விளங்கினார். யா/தேவரையாளி இந்துக் கல்லூரியில் ஆரம்பக் கல்வியை கற்று தேவரையாளி இந்துக்கல்லூரியில் முதன் முதலில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தவர் என்ற பெருமையையும் பெற்றவர். இடைநிலைக்கல்வி, உயர்தரக் கல்வியை நெல்லியடி மத்திய கல்லூரியில் பெற்றார். பாடசாலைக் காலத்திலேயே கட்டுரைப் போட்டி, பேச்சுப்போட்டி, பாட்டுப்போட்டி என்பவற்றில் பங்கு கொண்டு முதலிடங்களைப்பெற்றார். பேராதனைப் பல்கலைக்கழகத்துக்கு தெரிவாகி விஞ்ஞான மாணிப் பட்டம் பெற்றுக் கொண்டார். தற்காலிக விரிவுரையாளராக யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தில் பௌதீகவியல் விரிவுரையாளராக பணியாற்றினார். பின்னர் சந்தைப்படுத்தல் உத்தியோகத்தராக சில காலம் கடமையாற்றி தொடர்ந்து யாழ்ப்பாணம் சென் பற்றிக்ஸ் கல்லூரியில் ஆசிரியராக கடமையாற்றினார். அந்நாளில் யாழ்ப்பாணத்தில் முதற் தர பௌதீகவியல் ஆசிரியராக வலம் வந்தார். இவரிடம் கற்ற பல மாணவர்கள் பௌதீகவியலில் சிறப்பு சித்தி பெற்றார்கள். இவர் பௌதீகவியல் கற்பிக்கும் முறை மாணவர்களுக்கு மிகவும் பிடித்தமானதாக இருக்கும். யாழில் உள்ள அனேகமான தனியார் கல்வி நிலையங்களிலும் பௌதீகவியல் கற்பித்தார். பின்னர் **1991** ஆம் ஆண்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்வியியல் துறை விரிவுரையாளராக உள்வாங்கப்பட்டார். அதே நேரம் அதிபர், ஆசிரிய ஆலோசகர் போன்ற பதவிகளும் இவருக்கு கிடைத்தன. ஆனால் மாணவர்களுடன் நேரடித் தொடர்புள்ள விரிவுரையாளர் பதவியில் இணைந்து கொண்டார். *1998* ஆம் ஆண்டு கலாநிதிப் பட்ட மேற்படிப்புக்காக அவுஸ்திரேலியாவில் உள்ள வொலோங்கொங் பல்கலைக் கழகத்தில் இணைந்து கொண்டார். கலாநிதிப் பட்டப்படிப்பை மேற்கோண்டு பட்டம் பெற்று யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்துக்கு மீண்டும் வந்து தன் கல்விச் சேவையை கடைசி நாள் வரை மேற் கொண்டார். ஆய்வுமுறையியலில் கலாமணி அவருக்கு நிகரானவர் எவரும் இல்லை என்று சொல்லும் அளவிற்கு இவரது ஆய்வுமுறையியல் சார் கற்பித்தல் அமையும். பலர் கலாநிதி த. கலாமணியின் மேற்பார்வையின் கீழ் மாணவர்களாக இருந்து கலாநிதிப்பட்டம், முதுமாணிப்பட்டம் பெற்றார்கள். மாணவர்களுக்காகவும் கல்விக்காகவும் தன் வாழ்க்கையை அர்ப்பணித்து

வாழ்ந்தவர். எந்த நேரமாயினும் மாணவர்களது சந்தேகங்களை தீர்த்து வைக்கக் கூடியவராகவும், மாணவர்களை வளப்படுத்துபவராகவும் செயற் பட்டார்.

ஈழத்து கலை இலக்கிய உலகில் 2007 ஆண்டு முதல் தொடர்ச்சியாக வெளிவந்து கொண்டிருக்கும் ஜீவநதி சஞ்சிகையின் பதிப்பாசிரியராக கலாநிதி த. கலாமணி அவர்கள் விளங்குகின்றார். 1974 ஆம் ஆண்டு தாயகம் சஞ்சிகையில் இவரது முதலாவது சிறுகதை "காலத்தின் கோலம்" பிரசுரமானது. மாணவப்பருவம் முதல் இறுதி நாள் வரை இசை நாடகம், சங்கீதம், படைப்பாக்கம், சொற்பொழிவு என தொடர்ச்சியாக இயங்கி வந்தவர். பௌதிகவியல் ஆசானாய், பௌதிகவி யல் விரிவுரையாளராய், பரீட்சகராய், கல்வியியல் விரிவுரையாளராய், கலாநிதியாய், முதுகல்வியியல் மாணிப் பட்டப் படிப்புக் கல்வியின் இணைப்பாளராய், சட்டத்துறைத் தலைவராய் கல்வியியல் ஆய்வாளராய், சிறுகதையாசிரியராய், கவிஞராய், விமர்சகராய், உளவியல் ஆய்வாளராய், பக்தி எழுத்தாளராய், இலக்கிய - ஆன்மிக சொற்பொழிவாளராய், கல்வியியல் இணைப்பாளராய், தொலைக்கல்வி விரிவுரையாளராய், ஆசிரியராய், இறுவட்டுப் பாடகராய், பதிப்பாசிரி யராய், தொகுப்பாசிரியராய், இசை நாடக நடிகனாய், சிறந்த துடுப்பாட்ட வீரனாய், அண்ணாவியாராய், குறும்பட நடிகனாய், சோதிடராய், மொழிபெயர்ப் பாளராய், காத்தவராயர் தேவஸ்தான பிரதம குருவாய், இசை நாடகக்கோனாக, நற்றமிழ்க்காவலனாக, கல்வியி யல் ஆய்வுக் கதிரோனாக, கலைஞான வாரிதியாக, சட்டத்துறைத் தலைவராக, யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரியின் போசகராக, அல்வாய் சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் ஆலய தலைவராக, அல்வாய் மனோகரா சனசமூக நிலைய செயலாளராக கலை இலக்கியச் செயலாளராக, அவையின் ஸ்தாபக ராக, மனோகராவின் சிறந்த பிரஜையாக, கடலின் ஆலோசகரா, சந்தைப்படுத்தல் உத்தியோகத்தராக, நாட்டார் வழக்காற்றியல் கழகத்தின் தலைவராக, மனோகர கான நாடக சபாவின் தலைவராக, தன் ஆளுமைத் திறனை வெளிப்படுத்தி வாழ்ந்தவர் கலாநிதி த. கலாமணி அவர்கள். விருதுகள், பட்டங்கள் என்று அலையாமல் தன்னாலான இலக்கிய, நாடக, கல்விசார் பணிகளை மேற்கொண்டு மாணவர்களையும் நண்பர் களையும் கலைஞர்களையும், சுற்றத்தவர்களையும் உயர்வடையச் செய்தவர். இலங்கையின் உள்ள பல ஆசிரியர்கள் இவரிடம் ஏதோவொரு இடத்தில் கற்றவர்களாக காணப்படுகிறார்கள். எந்த துறை சார்ந்த சந்தேகத்தையும் யாருக்கும் எவ்வேளையிலும் தீர்த்து வைக்கக்கூடிய திறனை இறைவன் இவருக்கு வழங் கினார். பல்துறைவல்லோன், இசை நாடகக் கோன், நற்றமிழ்க்காவலன், கலைஞான வாரிதி, இலக்கியத்துக் கான வாழ்நாள் சாதனையாளர் விழிசைச் சிவம் விருது போன்றவற்றை பெற்றவர். எல்லாவற்றிற்கும் மேலாக, கல்வி கற்றுப் பெற்ற பட்டமான கலாநிதி பட்டத்தைப் பெற்றுக் கொண்டமையை மிக உயர்வாகக் கருதி வாழ்ந்தவர் கலாநிதி த. கலாமணி.

கலாநிதி த. கலாமணி அவர்கள் உடுவிலைச் சேர்ந்த குயீன்ஜெசிலி ஆசிரியை அவர்களை காதலித்து பெற்றோர் சம்மதத்துடன் அல்வாய் சாமணந்தறை ஆலடிப் பிள்ளையார் ஆலயத்தில் திருமணம் செய்து கொண்டார். அவர்களின் இல்லறப்பேறின் பயனாக பரணீதரன், முரளீதரன், மதனாகரன் ஆகிய பிள்ளை களைப் பெற்றெடுத்தார். பரணீதரன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உளவியற்துறை தற்காலிக விரிவுரையாள ராக 2 வருடங்கள் கடமையாற்றியவர், அகவிழியில் தற்காலிக விரிவுரையாளராகவும் கரவெட்டி பிரதேச சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தராகவும் கடமையாற்றி இன்று ஜீவநதி, கடல் சஞ்சிகையின் ஆசிரியராகவும், நாங்கள் பத்திரிகையின் ஆசிரியராகவும் விளங்குகின்றார். முரளீதரன் யாழ்மாவட்ட நிறை வேற்று பொறியிய லாளராக விளங்குகின்றார். மதனாகரன் வவுனியாப் பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளராக கடமையாற்று கின்றார். அல்வாய் மனோகராக் கிராமத்தில் தம்பிஐயா பர்வதத்தின் மூன்று பிள்ளைகளான பர்வதாமணி, கலாமணி, கீதாமணி பட்டதாரிகளானார்கள். அது போல கலாமணியின் 3 பிள்ளைகளும், பர்வதாமணியின் 3 பிள்ளைகளும் பட்டதாரியானார்கள். கலாமணியின் இரண்டு மருமகள் மாரும்(விஷ்ணுவர்த்தினி, லக்சனா) பட்டதாரிகள். ஒரு கல்விக்குடும்பமாக ஊருக்கு முன்னுதாரணமான குடும்பமாக கலாமணி அவர்களின் வம்சம் விளங்குகின்றது. ஊருக்கு மட்டுமல்லாது தான் செல்லும் இடமெல்லாம் தன்னாலான உதவிகளை செய்தவர் கலாமணி. மனோகராவின் தலைசிறந்த ஆரம்பத்துடுப்பாட்ட வீரராக விளங்கியவர். அல்வாய் மனோகரா சனசமூகத்தின் கீதத்தை மிகச் சிறப்பாகப் பாடியவர். அல்வாய் வரசித்தி விநாயகர் உடனுறை காத்தவராயர் ஆலயத்தின் பிரதம குருவாக திகழ்ந்தவர். அல்வாய் சாமணந்தறை ஆலடிப்பிள்ளையாரின் திருவூஞ்சலை பாடி இறுவட்டாக பதிவு செய்து கொடுத்தார். அல்வாய் மனேகரா சனசமூக நிலையத்தின் நிலைய கீதத்தை உணர்வு ததும்ப எழுதிப்பாடி இறுவட்டில் பதிவு செய்து கொடுத்தார். ஊரில் மறைந்துள்ள ஆளுமைகளை தன் கட்டுரைகள் வாயிலாக வெளிப்படுத்தினார். ஊரின் வரலாற்றை நன்கு தெரிந்தவ ராக விளங்கினார். பல்வேறு ஊர் சார்ந்த சம்பவங்களை "நாங்கள்" ஆவணப்பத்திரிகையில் பதிவு செய்தார். ஊர் நன்மைக்காக பல காரியங்களையாற்றியதோடு நேர்மையான செயற்பாட்டாளராக விளங்கினார்.

பூதத்தம்பி, சத்தியவான் சாவித்திரி, கோவலன் கண்ணகி, பவளக்கொடி, அரிச்சந்திரா, வள்ளி திருமணம், நந்தனார், சதி சுலோசான, பாஞ்சாலி சபதம், வாலிவதை, சதி அகலிகை, நல்லதங்காள், மார்க்கண்டேயர், ஆத்ம லிங்கம் ஆகிய இசை நாடகங்களை அண்ணாவியம் செய்தும் நடித்தும் வந்தார். இசைநாடகத்துறையில் கலாமணி ஏற்ற பாத்திரங்கள் அத்தனையையும் பார்வையாளர்கள் மறந்து விடமாட்டார்கள். பூதத்தம்பி, சத்தியவான், சாவித்திரி, அர்ச்சுனன், விதுரன், மார்க்கண்டேயர், கோவலன், பாண்டியன், விருத்தன்,

லோகிதாசன், அசலாத்துப்பிள்ளை, நந்தன், காத்தான், இராமன், முருகன், இலக்குமணன், துஷ்யந்தர், பரத்துவாசர், நாரதர், இந்திரஜித், வாலி எனப் பல பாத்திரங்களை ஏற்று நடித்தவர். பூதத்தம்பி என்றால் கலாமணி தான் என்னும் அளவிற்கு அவரது பூதத்தம்பி பாத்திரம் அமைந்ததை யாரும் மறந்த விட மாட்டார்கள். 300 இற்கு மேற்பட்ட மேடைகளில் இசைநாடகநடிகராக மேடையேறி நடித்துள்ளார். பூதத்தம்பி நாடகம் 60 இற்கு மேற்பட்ட மேடைகளை கண்டது. அல்வாய் சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் ஆலயத்தின் சிவராத்திரி தினத்துக்கு கலாமணியின் நாடகத்தைப் பார்க்கவென வரும் மக்கள் கூட்டமே அதிகம். யாழ்ப்பாணப் பல்கலைகக்கழக நாட்டார் வழக்கியற் கழகத்தின் தலைவராக பல ஆண்டுகள் இருந்து பல்வேறு இடங்களில் இசை நாடகங்களை மேடையேற்றியதோடு, கழகத்திற்கு பல சேவைகளை யும், நிதிகளையும் சேகரித்து சங்கத்தின வளர்ச்சிக்கு உறுதுணையாக நின்றார். மானிடம் என்பது புல்லோ, நூறு பூக்கள் மலரட்டும், சூரியன், விஞ்ஞான தீபம், மனுஷா மனுஷா, தரிசு, விட்டில் பூச்சிகள் போன்ற நவீன நாடக எழுத்துருக்களையும் எழுதி நெறியாள்கை செய்து நடித்தார். பல்கலைக்கழக காலத்தில் மேடை யேற்றிய விட்டில் பூச்சிகள் நாடகம் பல்கலைக்கழகங் களுக்கு இடையிலான போட்டியில் முதற் பரிசைப் பெற்றுக் கொண்டது. நூறு பூக்கள் மலரட்டும் என்ற நாடகம் பெரும் வெற்றி கண்டது. ஊரில் உள்ள 35 இற்கு மேற்பட்டவர்களை பழக்கி இந்நாடகத்தை மேடை யேற்றினார். கலாநிதிப்பட்ட கற்கை நெறியை மேற்கொள்வதற்காக அவுஸ்திரேலியா சென்ற சமயம் அங்குள்ள ஈழத்து தமிழர்களை ஒருங்கிணைத்து பூதத்தம்பி, சத்தியவான் சாவித்திரி, பாஞ்சாலிசபதம், அரிச்சந்திரா போன்ற இசைநாடகங்களை அண்ணாவி யம் செய்து அங்குள்ள கலைஞர்களுக்கு பழக்கி அவுஸ்திரேலியாவில் இசை நாடகத்தை மலர்ச்சி உறச்செய்தார். மேலும் இளைய பத்மநாதனின் "ஒரு பயணத்தின் கதை" என்னும் வட்டக்களரிக் கூத்தின் பிரதம உரைஞராக அவுஸ்திரேலியாவில் நடித்தார். பல்வேறு இசை நாடகப் போட்டிகள், நாடகப் போட்டிகளுக்கு நடுவராகவும் கடமையாற்றினார். பல இளம் கலைஞர்களை தோற்றுவித்தார். இவரிடம் நிறைந்த குரல் வளம் காணப்பட்டமையால் எந்த பாட்டையும் இனிமையாகப்பாடும் வல்லமை பெற்றவராக விளங்கினார். அல்வாயூரில் இவரது அண்ணாவியத்தில் நூற்றுக்கு மேற்பட்ட இளைஞர்கள் சிறுவர்கள் நாடகங்களில் நடித்துள்ளார்கள். சிவராத்திரி வரப்போகுதென்றால் அல்வாயூர் களை கட்டத் தொடங்கி விடும். சிவராத்திரிக்கு ஒரு மாதம் வர முதலே ஆரம்பிக்கும் நாடக ஒத்திகைகளால் ஊரே கலை அம்சம் நிறைந்த ஊராக காணப்படும். கலாமணி அவர்கள் நீண்ட காலமாக இரண்டு நாடகங்களை மேடையேற்று வார். 1.சிறுவர்களுக்கான இசை நாடகம், 2. தமக்கான (வளர்ந்தோருக்கான) இசை நாடகம். அல்வாய் மனோகர கான நாடக சபா என்னும் நாடகக் குழுவை ஸ்தாபித்து இவரது தந்தையார் வழிப்படுத்தி நாடகங்களை மேடையேற்றி வந்தார். அவர் 2000 இற்கு மேற்பட்ட மேடைகள் ஏறியவர். அவரது வழியில் அவருக்கு பின்னர் அல்வாய் மனோகரா கான நாடக சபாவைப் பொறுப் பேற்று நாடகங்களை மேடையேற்றினார். தற்போது இவர் வழியில் இந்நாடக மன்றம் ஊடாக நான் (க.பரணீதரன்) நாடகங்களை மேடையேற்றுகின்றேன். இவரது நடிப்புத்திறனைப் பாராட்டி இவருக்கு "இசைநாடகக்கோன்" என்னும் கௌரவ பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

இசைநாடக மோதவிகளான அண்ணாவியார் ச.தம்பிஐயாவுடன் அரிச்சந்திரா மயானகாண்டம், மார்க் கண்டேயர் நாடகங்களிலும், அண்ணச்சாமி ஆசிரி யருடன் பவளக்கொடி நாடகத்திலும் வி.என். செல்வ ராஜாவுடன் கோவலன் கண்ணகி நாடகத்திலும், கே.வி.நற்குணம் அவர்களுடன் பூதத்தம்பி நாடகத்தி லும், வ.செல்வரத்தினம் அவர்களுடன் சத்தியவான் சாவித்திரி பூதத்தம்பி, ஸ்ரீவள்ளி நாடகங்களிலும், தைரிய நாதனுடன் பூதத்தம்பி நாடகத்திலும், வி.கே.பாலசிங்கம் அவர்களுடன் பூதத்தம்பி, வாலிவதை, ஸ்ரீவள்ளி நாடகங் களிலும் கே. சிங்கராஜாவுடன் பூதத்தம்பி நாடகத்தி லும்(35 மேடைகள் கே.சிங்கராஜா அழகவல்லியாக பெண் வேடம் தரித்தார் என்பது இங்கு குறிப்பிடத் தக்கது),யமன் பப்பாவுடன் சத்தியவான் சாவித்திரி நாடகத்திலும், சதி அகலிகை, அரிச்சந்திராவில் தனது தமக்கையார் பர்வதாமணியுடனும், அகலிகை நாடகத் தில் கே.ஐயாத்துரையுடனும், மா அழகானந்தனுடன் வாலிவதை, பூதத்தம்பி நாடகங்களிலும், மா.அனந்த ராசனுடன் சத்தியவான் சாவித்திரி, பூதத்தம்பி, வாலி வதை நாடகங்களிலும்(மா.அனந்தராஜன் சத்தியவா னாகவும் த.கலாமணி சாவித்திரியாகவும் சத்தியவான் சாவித்திரி நாடகத்தில் நடித்தார்), செ.விவேகானந்த னுடன் பக்தநந்தனார் நாடகத்திலும் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராசாவுடன் இவர்கள் சந்தித்தால் என்ற இதிகாச பாத்திரச் சந்திப்புகளில் இலக்குவனாகவும், இந்திரஜித்தாகவும், (சூர்ப்பனகை, இராவணன் -எஸ். சிவலிங்கராசா) கம்பவரிதி ஜெயராஜ் உடன் இவர்கள் சந்தித்தால் சந்திப்பில் த.கலாமணி வாலியாகவும் கம்பராக ஜெயராஜ் அவர்களும் நடித்தார்கள். மேலும் நாட்டார் வழக்கியற் கழகத்தில் பல இளம் கலைஞர் களுடன் நடித்ததோடு அவர்களை ஊக்குவித்து மெருகூட்டி நடிப்பிக்கவும் செய்தார். இவருடன் நடித்த ஏனைய நாட்டார் வழக்கியற் கழக கலைஞர்களாக ந.விமலநாதன், வை.விஜயபாஸ்கர், தயாநிதி, சஜீவன், பிரதீபன், விஜயேந்திரன், ரமணி போன்றவர்களைக் குறிப்பிடலாம். மனோகர கான நாடக சபாவில் சிவபாதம், சி.கணேசன், வே.கணேசவேல், சந்திரா, சிவனேஸ்வரி, அ.அகிலன், குணரத்தினம், யோகதாஸ் போன்ற பலரைக் குறிப்பிடலாம்.

ஆசிரியத்துவத்தின் மகத்துவத்தைப் புலப் படுத்தும் "ஒப்பிலாமணி" என்னும் குறும் படத்தில் ஒப்பிலாமணியாக நடித்து மாணவர்கள், ஆசிரியர்கள் மனத்தில் ஒப்பிலாமணியாக வாழும் பேறினைப்

பெற்றார். இந்த ஒப்பிலாமணி என்னும் குறும் படம் அனேகமான தமிழ்ப் பாடசாலைகளில் மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் காட்சிப் படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இந்த படத்தின் கதாநாயகன் போல் நிஜவாழ்க்கை யிலும் மாணவர்களுக்காக இறுதி மூச்சு வரை வாழ்ந்தவர்.



த.கலாமணி அவர்களின் விமர்சனப் பணியும் முக்கியமானதாகும். இவரது குரல் வளம் சபையை ஈர்த்து வைத்திருக்கக் கூடியதாக அமைந்ததோடு இவர் நூல்களை அணுகும் முறை தனத்துவமானதாக அமையும். அதாவது உளவியல், கோட்பாடுகளுடன் இணைத்து இவர் கூறும் முறை தனித்துவமானது. வடபகுதியில் கலாமணி, தெணியான், இ.இராஜேஸ் கண்ணன் கூட்டணி சேர்ந்தால் நூல்வெளியீடுகள் ஒரு தனித்துவமானதாக அமைவதுண்டு. பல கோயில்களில் தொடர் ஆன்மீகச் சொற்பாழிவு களை ஆற்றியுள்ளார். ஆய்வு மாநாடுகள் பல வற்றிற்கு தலைவராக, நடுவராக செயற்பட்டுள் ளார். பட்டிமன்றங்களில் தலைவராக, பேச்சாளர் களாக செயற்பட்டுள்ளார். அல்வாய் சாமணந் தறை ஆலடிப்பிள்ளையாரின் 2 ஆம் திருவிழா வின்போதே முதன் முதலில் கம்பன்கழகம் ஜெயராஜ் தலைமையில் அவர்களது குழு த.கலாமணி யின் அழைப்பின் பேரில் பட்டிமன்றம் பேச வந்தார்கள். கலாமணியின் அணியில் பேராசிரியர் எஸ்.சிவலிங்க ராசா, அதிபர் கி.நடராஜா ஆகியோரும் எதிரணியில் கம்பன்கழக குழுவினரும் இடம் பெற்றார்கள். “கம்பராமாயணத்தில் பெரிதும் பரிதாபத்திற்கு உரிய பாத்திரம் தசரதனா? வாலியா?” என்பதே தலைப்பு. கலாமணி குழுவினருடன் கம்பன் கழகத்தாரால் வாதிக்க முடியாதளவு அந்தப் பட்டிமன்றம் அமைந்நததை யாரும் மறந்திருக்க மாட்டார்கள். அதன் பின்னர் ஜெயராஜ் அவர்கள் இனி இந்த குழுவை எதிர்த்து பட்டிமன்றம் பேசுவதில்லை என நட்பாக கூறியமையும் மறந்துவிடலாகாது.

என்ன விடயத்தை கேட்டாலும், எந்த பாடத்தில் சந்தேகம் கேட்டாலும் அதனை விளக்கும் அறிவுடையவராக விளங்கினார். தனது துறை தவிர பல்துறைகளிலும் விற்பன்னராக விளங்கியமையால் இவரை பல்துறை வல்லோன் என கௌரவ பட்டம் கொடுத்து கௌரவித்தார்கள். இவரது மணிவிழா நெல்லிடிய மத்திய மகாவித்தியாலயத்தில் 1000 இற்கு மேற்பட்ட சபையோருடன் நடைபெற்றதை யாரும் மறந்து விட மாட்டார்கள்.

“அவை” என்ற இலக்கிய அமைப்பை ஸ்தாபித்து இலக்கிய, கலைஞர்களை மாதம் ஒரு முறை தனது இல்லமான கலைஅகத்தில் ஒன்று கூட்டி கலந் துரையாடி மகிழ்ந்தார். பல இலக்கியக் கூட்டங்களை யும், இலக்கியகாரர்கள் கௌரவிப்புக்களையும் தனது இல்லத்தில் நடாத்தி மகிழ்ச்சிப்படுத்தினார். இலக்கிய காரர்கள் அனைவரையும் மிகவும் நேசித்து உறவாடி னார். 60 இற்கு மேற்பட்ட அவைக்கூட்டங் களில் பங்கு பற்றினார். அவைக்கூட்டம் மூலம் ஒருவருக்கு ஒருவர் அறிமுகம் ஏற்பட வழிசமைத்துக் கொடுத்தார். நல்ல விடயங்களை கலந்துரையாட சந்தர்ப்பம் வழங்கினார்.

த.கலாமணி அவர்கள் நேர்மையான மனிதராக அனைவருடனும் இனிமையாகப் பழகும் மனிதராக, கேட்டவர்கெல்லாம் கல்வியை தானமாகக் கொடுக்கும் கல்வியின் வள்ளலாக, அநியாயங்களைக் கண்டு பொங்கி கொந்தளிப்பவராக, நீதிக்காக பேராடுபவராக, நல்ல குடும்பஸ்தனாக, நல்ல மகனாக, நல்ல அண்ணாக, தம்பியாக, மாமாவாக, சித்தப்பாவாக, தந்தையாக, கணவனாக, ஆசிரியனாக, இலக்கியவாதியாக, உறவினனாக, நண்பனாக நல்லதொரு தலைவனாக, அர்ச்சகராக, ஆன்மீகவாதியாக, மதியுரைஞராக, கொடை வள்ளலாக தன்னோடு பழகும் உறவுகளுடன் இனிமையான வாழ்வை வாழ்ந்து வந்தார். எந்தக் குறையும் இல்லாது சகல இன்பங்களை அனுபவித்து சகல சந்தோசங்களையும் கண்ணுற்று நிறைவான வாழ்வை வாழ்ந்து தனது குலதெய்வமான காத்தவராயனின் பாதங்களுக்கு பணி செய்ய 09.2.2024 இல் புறப்பட்டார். இவரின் இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்ட சனசமுத்திரமே இவரது நற்பண்புகளுக்கு சான்று பகரும் என நம்புகின்றோம்.

(மகன் என்பதற்கு அப்பால் ஒரு கலைஞன், எழுத்தாளன், கல்வியியலாளன் என்ற வகையில் த. கலாமணியின் உண்மையான செயற்பாடு களைப்பற்றிய எழுதப்பட்டதே இக்கட்டுரை. இங்கு எந்த மிகைப்படுத்தல்களும் இல்லை என்பதை மிகவும் அன்போடு கூறிக் கொள்கின்றேன்.)

# கலாநிதி த. கலாமணி பற்றிய சில சிறப்புப் பார்வைகள்

இன்று நமது கல்விப் புலத்தில் அதிகம் பேசப்படும் செயல்நிலை ஆய்வுகளை நமது தமிழ் கல்விப் புலத்துக்கு அறிமுகம் செய்து வருடம் தோறும் தனது மாணவர்கள் மூலமாக பல நூறு ஆய்வுகளைச் செய்தவர் கலாநிதி கலாமணி அவர்கள். சர்வதேச மயப்படுத்துவதில் அவற்றின் உள்ளடக்கத் தன்மைகள் பிரதேச தனித்துவம் கொண்டமையால் தடங்கல்கள் இருந்தாலும் அவ் ஆய்வுகளின் வழி கிடைக்கப்பெற்ற முடிவுகளைத் தேசிய மட்ட கல்வி முடிவுகள் எடுக்கும் சந்தர்ப்பங் களில் பரிந்துரை செய்தவர் கலாமணி அவர்கள்.

– பேராசிரியர் சிறி சற்குணராஜா

சேக்ஸ்பியரை அறிந்திருப்பது எத்துணை முக்கியத்துவம் வாய்ந்ததோ அத்துணை முக்கியத்துவம் மிக்கது வெப்ப இயக்கவியலின் இரண்டாம் விதியை அறிந்திருப்பதுமாகும்" என்று ஸ்நோபிரபு என்ற சிந்தனையாளர் ஒரு சமயம் குறிப் பிட்டார். அதன் உள்ளுறைந்த பொருள் என்னவென்றால், சம நிலை ஆளுமை மிக்க ஒருவர் கலைகளையும் விஞ்ஞானத்தை யும் அறிந்திருத்தல் வேண்டும் என்பதாகும். மேற் கூறிய கருத்துக்கு ஓர் எடுத்துக்காட்டு ஆளுமையினராக விளங்கியவர் நண்பர் கலாநிதி த.கலாமணி.அவர் எனது மாணவர், என்னுடன் இணைந்து கல்வியியல் துறையிலே பணி யாற்றியவர். தமது ஆசான்களை மனதார மதிப்பளிக்கும் மரபு வழிக்கல்வியின் தொடர்ச்சியாக விளங்கியவர். தமது பட்டப்படிப்புக்குரிய சிறப்புத்துறையாக அவர் இயற்பியலைத் தெரிந் தெடுத்தார். பெரும் விஞ்ஞானதத்துவங்கள் (SCIENCE PHILOSOPHY) இயற்பியற்துறையி லிருந்து தான் மேற்கிளம்பின. அத்துணை ஆற்றலும் வலிமையும் அந்த புலமைப் புலத்துக்கு உண்டு. விஞ்ஞானதத்துவங்களுக்கும் கல்வி மெய்யியலுக்கு மிடையே இணைப்பை நிலை நிறுத்தி, தமது புலமை நெடும் பயணத்தைத் தொடர்ந்து தமிழுக்கு வலிமை சேர்த்தவர்.

– பேராசிரியர் சபா.ஜெயராசா

ஈழத்து இசை நாடகத்தை வளர்த்த ஒரு பாரம்பரியத்தின் கடைசி கொழுந்து கலாமணியோ என்று நான் எண்ணுவது உண்டு. பல்கலைக்கழக விரிவுரையாளராக இருந்து கொண்டும் மேடையில் ஏறிப்பாடி நடித்தவர் அவர்.அற்புதமான குரல் வளம் கொண்டவர்.இனிமையும் குழைவும் நிறைந்த குரல் அவர் குரல்.யாழ்ப்பாணப் பல்கலைக் கழகக் கல்வித்துறையில் விரிவுரையாளராக இருந்து ஓய்வு பெற்றவர். வாழ்க்கையிலும் தொழிலிலும் பல சவால்களை எதிர் கொண்டு முன்னேறியவர். அவற்றை அவர் என்னிடம் கதை கதையாகக் கூறியிருக்கிறார். கூறும்போது, அவர் முகத்தில் சிரிப்பு தெரியும். அகத்திலோ கோபம் கொப்பளிக்கும். பேச்சிலே அந்த கோபம் ஒரு கிண்டலாக வெளிப்படும். சிரிப்போடும் கோபத்தோடும் இந்த சமூகத்தை எதிர் கொண்டு வாழ்ந்து மறைந்தவர் கலாமணி.

– பேராசிரியர் சி.மௌனகுரு

கலையுலகிலும் கல்வியுலகிலும் சமதையாக கோலோச்சிய ஒருவர் என்றால் அது அமரர் கலாமணி செருக்கே அதிகம் பொருந்தும். உடல் சோர்ந்திருந்த போதிலும் கற்பிப்பதில் சேர் என்றும் சோடை போனதில்லை. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், வவுனியா வளாகம் என எல்லா இடத்திலும் நேரடியாகச் சென்றும் நிகழ்நிலைத் தொழில்நுட்பத்துக்கூடாகவும் விரிவுரைகள் எடுத்தார். சேரின் கற்பித்தல் திறத்தை அவருடைய மாணாக்கர் "வழி" கேட்கும் போது சகபாடி என்றவகையில் பெருமையாக இருக்கும்.

– பேராசிரியர் கி. விசாகரூபன்

கலாமணி அவர்களின் கற்பித்தல் மிகவும் ஆழமானது, பொருட் செறிவுடையது; கவர்ச்சிகரமானது என்பது அவருடைய மாணவர்களின் கருத்தாகும். கல்வி உளவியல், புள்ளிவிபரவியல், ஆராய்ச்சி, ஆகிய துறைகளிலே கற்பித்தலில் ஈடுபட்டவர். கல்வி ஆராய்ச்சித் துறையில் இவருக்கிருந்த அறிவும் அனுபவங்களும் கல்விமாணி, கல்வித்தத்துவமாணி மற்றும் கலாநிதிப்பட்டங் களுக்கான ஆய்வினை மேற்கொள்வோருக்கு சிறப்பான வழிகாட்டல்களை வழங்கின. தமிழ்க்கல்வியிலாளர்கள் மத்தியில் ஆய்வுத்துறையில் கலாமணிக்கு ஒரு தனியிடம் இருந்தமை குறிப்பிடத்தக்கது.

– பேராசிரியர் மா.கருணாநிதி

கல்வியியில் துறையின் ஆய்வு முறைகள் இயற்கை விஞ்ஞான ஆய்வு அணுகுமுறைகளுக்கும் சமூக விஞ்ஞான ஆய்வு அணுகுமுறைகளுக்கும் இடைப்பட்ட கலப்பு முறையாகவே காணப்படு கின்றன. இதனால் தனியே இயற்கை விஞ்ஞானத் தைக் கற்றோராலோ தனியே சமூக விஞ்ஞானத் தைக் கற்றாராலோ கல்வியில்துறை அய்வுகளை வழிப் படுத்துவது கடினம். ஆனால் கலாமணி சேரிடம் இந்த இரண்டு வகை யான ஆய்வுமுறைகள் பற்றிய அறிவு, திறன் என்பன நிரம்பி யிருந்தன. இதனாலே தான் அவர் வழிப்படுத்திய ஆய்வு மாணவர்களினால் ஆய் வினைப் பற்றிய விசாலித்த அறிவு ஏற்பட்டது. அவுஸ் ரேலிய வூலொங்கொங் பல் கலைக் கழகத்தில் ஆய்வு முறை யியல் கற்போர் விருப்பத்துக் குரிய பாடமாக பண்புசார் (Qualitative) ஆய்வு முறைகள், கணியம்சார் (Quantitative) ஆய்வு முறைகள் என்பவற்றில் ஏதாவதொரு பாடத்தை தெரிவு செய்ய வேண்டி யிருந்தது. ஆனால் கலாமணி சேர் இந்த இரண்டையும் கற்றாரென அவருடன் அங்கு ஒன்றாகக் கல்வி கற்ற நண்பர் கலாநிதி சரத் பெரேரா ஒருமுறை ஆச்சரியத்துடன் என்னிடம் குறிப்பிட்டது நினைவு.

– பேராசிரியர் தேவ.முகுந்தன்

கலாமணி ஒப்பிலாமணியான கதை ஒன்று உள்ளது. "ஒப்பிலாமணி" எனும் குறும்படம் ஆசிரியத்துவத்தின் பெருமை பேசுவது. யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரியின் விரிவுரையாளர்கள், மாணவர்களுடன் சேர்ந்து கலாமணி சேர்

நடித்திருந்தார். அதில் ஒப்பிலாமணி அவரது பெயர். மகத்துவம்மிக்க ஆசிரியர் பாத்திரம் அவருக்கு. அவர் அந்த ஆசிரியராகவே குறும்படத்தில் வாழ்ந்திருந்தார். அதுவரை அவரை "கலாமணி சேர்" என்று சொல்லிவந்த எனது மகள், அந்தப் படத்தைப் பார்த்த பின்னர், "ஒப்பிலாமணி சேர்" என்று சொல்லலானாள். இறுதி நாளன்று அதிகாலையில் கலாமணி சேர் அவர்களின் உடலைத் தரிசித்தபோது, அந்த "ஒப்பிலாமணி" யைக் கண்டேன்!

- இ.இராஜேஸ்கண்ணன்

தனிப்பட்ட வகையில் அமரரிம் கண்ட சில குணவியல்புகளை நினைத்துப் பார்க்கின்றேன். அறிவும், கல்விஞானமும், கலைத்திறனும், சுயநலமற்ற பொது நோக்கும், ஆன்மீக உணர்வும் கொண்ட உயரிய உள்ளம் கொண்டவர். இயற்கையின் விலைமதிபற்ற புதையலை மனித உணர்வுகள் தரிசிக்கின்ற போதே கலை தோன்றுகின்றது. இதனை அனுபவித்து உணர்ந்த கலைஞர் தான் அமரர் கலாமணி. கூத்து அனுபவங்கள் பற்றி உரையாடும் போது கலையின் மறுவடிவம் இவர்தானோ என்ற எண்ணம் என் மனதில் பலதடவை அரங்கேறியது. அவரது மரபு வழி நாடக கூத்துப் பாடல்களின் ஒலி நாடாவை கேட்டு ரசிக்காத நாளே இல்லை. நான் மாணவர்க்கு கற்பிக்கும் நேரங்களில் சந்தர்ப்பம் வரும் போது பாடிக் காட்டுவது உண்டு. அதனையே நினைத்துப் பார்க்கின்றேன்.

- கி.நடராசா

எது இலக்கியம், எது கலை, எது வாழ்வியல் எவற்றை எடுத்துக்கொள்ள வேண்டும், எவற்றை விட்டுவிட வேண்டும் எனத்தெளிவாகத் தெரிந்து வைத்திருந்தவர். இன்று ஈழத்தில் விரல் விட்டு எண்ணக்கூடிய மிகுந்த நாகரிகத்தை தமது படைப்புகளில் கையாளுகின்ற அதுவும் உளவியல் பாங்கிலான எழுத்துக்களைத் தந்து கொண்டிருந்தவர் கலாமணி அண்ணர். எந்த வயதினரும் வாசித்து அசூசைப்படாத படி யதார்த்தம் மீறாமல் அறம் சார்ந்த கதைகளையே அதிகம் எழுதியவர். மானிடநேயம் மட்டுமே கலாமணி அண்ணரது போனாவுக்கு மையாகியது.

- கொற்றை பி. கிருஷ்ணானந்தன்

ஈழத்துக் கல்வியியல் புலத்தின் நன்கு அறியப்பட்ட, முக்கியமான ஆளுமையாக விளங்கிய கலாமணி அவர்கள், கல்வி உளவியலை எளிமையாகக் கற்பித்ததுடன், தேசிய நிலையிலான ஆய்வுகள் மற்றும் பல்வேறு பணிகளில் இணைந்து செயலாற்றியவர்.

- வல்வை ந.அனந்தராஜ்

ஒரு மனிதன் இறக்கும் போது ஒரு நூலகமே இல்லாது போகின்றது என்பது ஒரு வாக்கு! இங்கு ஒரு பல்கலைக் கழகத்தையே நாம் இழந்து நிற்கின்றோம். இலங்கையின் கல்விமான்களில் ஒருவரான கலாநிதி த. கலாமணி மறைந்தார். எனது ஜீவகுமாரன் கதைகள் - ஜேர்மனிய கரப்பான் பூச்சிகள் - கடவுச்சீட்டு புத்தக வெளியிடுகள் தொடக்கம் கடைக்குட்டியன் வெளியீட்டுக்கு முதன்நாள் வரை தொடர்ந்த சந்திப்புகளும் ஆரோக்கியமான உரையாடல்களும். குறிப்பாக பூதத்தம்பி நாடகத்திற்கு நான் எழுதிய விமர்சனத்தினத்திற்கு நான் எழுதிய கட்டுரையை அவர் மகிழ்ந்த தருணமும் என்னுடன் உரையாடிய பொழுதுகள் என்றும் மறக்க முடியாதது. "நல்லை நகரில் தொல்லைகள் வந்ததில்லை" என யாழ்ப்பாண வீதிகள் பற்றி அவரும் சக கலைஞரும் பாடும் பாடல்கள் இன்றும் காதுகளில் ஒலிக்கின்றது. குறிப்பாக அதனைக் கேட்டபடியே இந்தப் பதிவை எழுதிக் கொண்டு இருக்கிறேன். பின்காலத்தில் அந்தச் சிம்மக் குரல் பழைய தொனியில் பாடமுடியாது போய் இன்று ஓய்ந்து விட்டது! ஈடு செய்ய முடியாத இழப்பு!

- வி.ஜீவகுமாரன

## வற்றாத ஜீவநதி..!

ஜீவநதியின்
மூலநதி
காலநதியில் சங்கமமானது.

"உணர்வுகளை உதறிவிட்டு
ஏக்கத்தைத் தவிர்த்துவிட்டு
இரவே நீ உறங்கிவிடு"என
இரவை உறங்கவைத்து
நீ தாலாட்டுப் பாடி
ஓயும் முன்னே
மீளாத் துயிலில்
நீயாகிப்போனதை
எம் இதயத்தால் ஜீரணிக்க முடியவில்லை.

இறுதி மூச்சுவரை
எழுதிய உனது பேனா
உன்னோடு சேர்ந்து
உறக்கத்தை தழுவிக்கொண்டது.

எழுத்துலகில் நீ
பேசாத பக்கமில்லை
கலையுலகில் உன்னை
காணாத கண்ணுமில்லை.
கணீரென ஒலிக்கும் உனது
காந்தக் குரலில்
கவரப்படாத இதயங்களும்
இல்லவேயில்லை ஐயனே.

கல்வியுலகிலும் நீ
கரைதொட்ட "கலாமணி"

ஈழத்து இலக்கிய உலகில்
வற்றாத ஜீவநதி
உன்பெயரை ஓங்கி ஒலித்தபடி
தயங்காது முன்னோக்கிப்பாயும்
நிச்சயமாய்
நீ கொடுத்த நம்பிக்கையை
இறுகப் பற்றியபடி..!
(01.01.2024 -ஜீவநதியில் இடம்பெற்ற அமரர் த.கலாமணியின் இறுதிக் கவிவரிகள்.)

- ஷெல்லிதாசன்

உங்கள் இல்லங்களில் நடைபெற
இருக்கும் மங்களகரமான
நிகழ்வுகளுக்கு...

# மதி கலர்ஸ்



## திருமண அழைப்பிதழ் காட்சியறை

MATHI COLOURS



## WEDDING CARD SHOW ROOM

15/2, Murugesar Lane, Nallur,Jaffna.

**T.P: 021 2229285, 077 7222259**

இச் சஞ்சிகை அல்வாய் கலையகம் வெளியீட்டு உரிமையாளர் கலாநிதி த. கலாமணி அவர்களால் மதி கலர்ஸ் நிறுவனத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.